www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JuDE
පිටුව 20 / பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஜூன்.15–21,1997
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 209

## ஈரடி முன்னால் ஓரடி பின்னால்

## நெருங்கும் பருவமழை
## காத்திருக்கும் புலிகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## மாட்டிக் கொண்ட மைக் நடிகர்

## பிரபாகரனுக்காக இரத்தக் கையொப்பம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## காலமறியாத கட்சிகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

அரசியல் என்பதை
ஒரு கலை என்பாரும் உளர்.
அரசியல்வாதிகள் எல்லோரும்
அக்கலையில்
தேர்ந்தவர்கள் என்று அர்த்தமல்ல.
முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்
அமைச்சர் அஷ்ரப்
அரசியல் கலையில்
கைதேர்ந்த ஒருவர் எனலாம்!
கோரிக்கைகளை
அடுக்கிக் கொண்டிருப்பதும்
முழக்கங்களை
தினம் எழுப்பிக்கொண்டிருப்பதும்
வாக்குறுதிகளை
அள்ளி வழங்கிக்கொண்டிருப்பதும்
மட்டும் அரசியல் அல்ல.
காலம் அறிந்து பயிர் செய்பவன்
சிறந்த விவசாயி.
ஆழம் அறிந்து கால்வைப்பவன்
புத்திசாலி.
தமிழ்க் கட்சிகளோ
காலம் கடந்த பின்னர்
பயிர் செய்யலாம் என்று
காத்திருந்து காத்திருந்து
உள்ளதையும் கோட்டை விடுபவர்கள்.
இன்றைய சூழல் என்ன?
இனப்பிரச்சனைத் தீர்வில்
தனக்குண்டு அக்கறை என்பதை
அரச உலகுக்குக் காட்ட
தமிழ்-முஸ்லிம் கட்சிகளின்
பக்கவாத்தியம் தேவை.
எதிரணி
கண்ணாமூச்சி ஆடுகிறது.
இந்த நேரத்தில்
தமிழ்-முஸ்லிம் கட்சிகளும்
தீர்வுப் பொதியில் தமக்கு
திருப்தி இல்லையென்றால்
அரசின் பாடு சங்கடமாகிவிடும்!
எனவேதான்-இப்போது
பாராளுமன்ற தமிழ்க் கட்சிகளையும்
முஸ்லிம் காங்கிரசையும்
அரச தரப்பு
தனக்கு அனுசரணையாக
பயன்படுத்திக் கொண்டிருக்கிறது!
ஆனால்-தமிழ்க் கட்சிகள்
மட்டுமே பயன்படுகின்றன.
முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்
பயன்படுவதுடன் நில்லாமல்
தானும் பயன்படுத்தத் தெரிந்தவர்.
வடக்கு-கிழக்கு இணைப்பு,
பாரம்பரிய தாயகப் பாதுகாப்பு
போன்ற உயிர்நாடியான
அடிப்படைக் கோரிக்கைகளை
கிடப்பில் போட்டுவிட்டு
அரசு இழுத்த இழுப்புக்கெல்லாம்
தமிழ்க் கட்சிகள்
கோணல் மாணலாக
ஆடிக்கொண்டிருக்கின்றன.
தமிழ்க் கட்சிகளோ
உயிரோட்டமான
கோரிக்கைகளை பின்தள்ளிவிட்டு
உப்புப் பெறாத
விஷயங்கள்பற்றி
பேசிப் பேசியே காலம் தள்ளுகின்றன!
சுருக்கமாகச் சொன்னால்,
வண்டிக்குப் பின்புறத்தில்
மாடுகளைக் கட்டியது போன்ற
அணுகுமுறையை
மௌனமாக அங்கீகரிக்கின்றன.
ஆக-தமிழ்க் கட்சிகளுக்கு
அரசியல் கலையும் தெரியவில்லை;
கால நிலையும் புரியவில்லை.
தங்கள் உதவி
அரசுக்குத் தேவையான கட்டத்தில்
தகுந்த விவேகத்துடன் செயற்பட
தமிழ்க் கட்சிகள் தவறியுள்ளன.
ஆனால்-முஸ்லிம் காங்கிரஸ்
அரசுக்கும்-தமிழ்க் கட்சிகளுக்கும்
தான் தேவைப்படும் நேரத்தை
தகுந்த முறையில் பயன்படுத்தியுள்ளது.
பிரதான கோரிக்கை முதலில்
பிற கோரிக்கைகள் பின்னர்.
என்ற நிலையில் உறுதியாக நின்றதால்
தனி மாகாணக் கோரிக்கைக்கு
முஸ்லிம் காங்கிரஸ்
அரசியல் அங்கிகாரம் பெற்றுவிட்டது.
ஆனால்-தமிழ்க் கட்சிகளோ
வடக்கு-கிழக்கு இணைப்பில்கூட
ஆமா-இல்லையா என்ற முடிவை
அரசிடம் பெற முடியாமலேயே
வெற்று விவாதங்களில் மூழ்கியுள்ளன!
தமிழ்க் கட்சிகள்
யானைக்குக் குறிவைக்க வேண்டிய
பொருத்தமான நேரத்தில்
மாயமான் பின்னால்
வழிதவறிச் சென்றுகொண்டிருக்கின்றன!
தமிழ்க் கட்சிகளுக்கு
அரசியல் கலையும் தெரியவில்லை;
முன்னால் உள்ள வலையும்
தெரியவில்லை!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்.
ஆசிரியர்

## மன்னிப்பதே ஆன்மீகத்தின் ஆணிவேர்!

# ஆன்மீகம்



பொதுவாக மனித குணம் எப்படிப்பட்டது? ஒருவர் நமக்கு ஏதாவது துன்பம் விளைவித்தால், உடனே அதன் பிரதிபலனாக, அல்லது அதற்கு மறுப்பாக அப்படித் துன்பம் செய்தவருக்கு உடனே, அல்லது எப்பொழுதாவது- ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணுகிறோம். இது சாதாரண மனிதகுணம். ஆனால் ஆன்மீக வலிமை பொருந்திய மனிதன் என்ன செய்வான்?

"ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு" என்று ஆன்மீக உணர்வின் உச்சக்கட்டத்தைக் காட்டிய இயேசுவின் வாழ்வும் வார்த்தைகளுமே இதன் உண்மையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டுமிருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவேயில்லை. இடுக்கண்ணிலும் நியாயத் தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார். அவர் கொடுமை செய்யவில்லை. அவர் வாயில் வஞ்சனை இருக்கவில்லை."- (இசையா: 53-7)

இதுமட்டுமல்ல-

அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். "பிதாவே! இவர்களை மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே?" என்று அவர்களுக்காக வேண்டிக்கொண்டார். (லூக்கா 23: 33-34)

ஆம்-உண்மையான ஆன்மீகத்தின் அத்திவாரம் வேறொன்றுமில்லை- 'இன்னா செய்தாரை அவர் நாண நன்னயம் செய்துவிடல்.'

ஏ.பி.வி. கோமஸ்.

## தொழுகை சம்பந்தமான சிந்தனைத் துளிகள்

* அல்லாஹ்வின் பெயரால் உளூச் செய்யுங்கள், என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
* பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக தொழுகை மானக் கேடானவற்றையும் தீமையை விட்டும் தடுக்கிறது. (குர் ஆன்) 20:45.
* குளியலறை, கப்ர் தவிர பூமியில் அனைத்தும் வணங்குமிடமாகும்.- நபி (ஸல்).
* மறுமையில் முதல் விசாரணை தொழுகை குறித்துத்தான் இருக்கும். (ஹதீஸ்)
* குறிப்பிட்ட நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவது முஃமீன்களின் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. (குர்ஆன்)4:103
* பத்து வயதை எய்தி விட்டால் அடித்தாவது தொழச் சொல்லுங்கள். நபி(ஸல்).
* ஒவ்வொரு தொழுகையிலும் ஒவ்வொரு ரக் ஆத்திலும் ஸூரத்துல் பாத்திஹா ஓதுவது கடமையாகும் (ஹதீஸ்).
* தனியாகத் தொழுவதனை விட ஜமாத்தாக தொழுவது 27 மடங்கு நன்மை அதிகமாகும். (ஹதீஸ்)
* பருவமடைந்த பெண் முக்காடில்லாமல் தொழுதால் அல்லாஹ் அதை ஏற்றுக் கொள்ள மாட்டான்- நபி (ஸல்)

எனவே தொழுகை ஒரு மனிதனுக்கு தலை எவ்வாறு முக்கியமோ அதனை விட ஒரு முஸ்லிமுக்கு தொழுகை கட்டாயக் கடமையாகும். ஆகவே இத் தொழுகையை கட்டாயம் எல்லோரும் பேணி நடக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

எம்.எம். முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல.206



இடம் உள்ளவரை

### பரிசுக்குரிய கவிதை

### வேண்டும் ஒரு மாற்றம்

பட்டாடை கிடைக்குமென்ற
பகல் கனவில் நீ இருக்க,
கட்டிய கோவணமே
களவாடப்படுகிறதே!
விட்டெறியும் எலும்புக்கு
விலைபோக மறுத்துவிடு!
தட்டிக்கேட்கின்ற
தலைமுறையாய் எழுவாயே!

சி.மு.சுந்தரேசன்- அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

### இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**மானம் போன பின் வாழ்வதா?**

காடும் நாடும் எரிவதால்
மர உரி தரிக்க இலை இல்லை;
பதுக்கலாகுது சீருடைகள்
தட்டிக் கேட்க ஆளில்லை;
மானம் காத்தது கைகள் தான்!
மாற்றுடை தந்தால் மனம் மகிழ்வோம்!

செ. சோமசுந்தரம்-வவுனியா.

**மிருகமும் மனிதரும்**

அருவியில் குளிக்கும்
ஆனந்தக் களிப்பில்
பெருமிதம் காட்டிய
பிறந்த மேனியால்
மிருகமும் மனிதரும்
மிகச் சமம் என்பதோ?

த. சிவகாமி- முதலாம் குறுக்குத் தெரு, வவுனியா.

**அகதித் திருவிழா**

இது—
அகதித்திருவிழா!
ஆடைகளுக்கும்
இனி
விடுமுறை!
விலங்குகளோடு
சமபந்தி!!

பாலகமலன்- வவுனியூர்.

**ஆடை எதற்கு?**

படை எடுப்பு...!
கடை அடைப்பு—!
தடை விதிப்பு-எல்லாம்
அனுபவித்த எமக்கோ-இன்று
ஆனந்தக் குளிப்பு-அதற்கு
ஆடை எதற்கு?

எஸ். பீலிக்ஸ்- நீர்கொழும்பு.

**சீருடை**

ஊரில்லை
உறவில்லை
உடுப்பதற்கும் துணியில்லை;
பள்ளியில்லை
படிப்பில்லை
சீருடைத் துணியுமில்லை!

பா.எல்றோய்-
இறம்பைக்குளம் வவுனியா.

**அ(நா)கரீக சாதனை!**

2000ம் ஆண்டுகளில்
எண்ணற்ற சாதனையில்,
எங்களையும் சேர்ப்பதினால்
இரட்டிப்பு மகிழ்ச்சிதானே!

நஸியா பஹ்ர்தீன்- கொத்தான்தீவு,
புத்தளம்.

**புரியுமா?**

நாட்டுவளமனைத்தும்
போருக்கிறைப் போர்க்கு
புரிகிறதா-எங்களது
உடுக்கைக்கும் வழியற்ற
இடுக்கண் வாழ்வு?

சு. இரத்தினம்- அக்கரைப்பற்று-7.

**அம்மணத்தில்...!**

அருவி மழை கொட்ட
அங்கம் அம்மணம்;
போர் மழை கொட்ட
நம் வாழ்க்கையும் அம்மணம்!

தெ. லோஜனா, கொழும்பு-15.

**பழையன**

பழையன கழிதலும்
புதியன புகுதலும்
என்ற நிலை மாறி-இப்போ
பழையன புகுகிறதோ?


சி. நளினி- செங்கலடி.

**சிறுவர் குணம்**

உடுக்கை இழந்த அவல நிலையிலும்
அடக்க முடியாச் சிரிப்பும் ஏனோ?
தடுக்க முடியாப் போரின் நடுவிலும்
துடுக்குச் செய்யும் சிறுவர் குணமோ?

மு. தானிஷ் அ.ஃப்ரிடி- திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல.209



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 21.06.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.209
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

## நடக்குமய்யா நடக்கும்!

தமிழ்க் கட்சிகளின் வர்ணக் கனவுகள் அபாரம். ஏதோ உள்மனதில் கிடந்த ஆசையை தெரியாத்தனமாகக் கூறிவிட்டார் சங்கரி. அதற்காக இப்படியா காதிலை பூ கந்தசாமியார் வாட்டி எடுக்க வேண்டும்?

கற்பனை என்று கதை சொல்லும் கந்தசாமியாரே! விடுதலைப் புலிகள் இல்லையெனில் நீர் சொல்வது யாவும் நம் கண்முன்பாக நடக்கும்! நடக்கும்! நடக்கும்!

கோ.அனந்தராமன், ஜெர்மனி.

## தெரிந்தே செய்பவர்கள்...

சமீபகாலமாக அதிரடியாரையே மிஞ்சிவருகிறார் காதிலை பூ கந்தசாமியார். முன்னாள் தலைவர்களின் இந்நாள் குத்துக் கரணங்களை புட்டுவைக்கிறார். கேலியாலும் தாக்கலாம். ஆனால் தெரிந்துகொண்டே எம்மையெல்லாம் ஏமாற்றுகிற அரசியல்வாதிகள் திருந்துவார்களா?

பி.சிவராசா, கொழும்பு-06.

முத்தமிழன் மடல் நாகரிகமாகவும் நாசூக்காகவும் உண்மைகளை உணர்த்தியது. எங்களையும் ஏமாற்றி தங்களையும் ஏமாற்றும் 'தலைவர்கள்' என அழைக்கப்படுவோர் தடம் புரண்டுவிட்டனர். அவர்களை நம்பி என்ன பயன்?

என்.வி.இல்யாஸ், கொழும்பு-12.

## காத்திருப்பது உண்மை!

'தம்பிமார் எப்போது காலியாவர்; திண்ணை எப்போது காலியாகும்?' என மிதவாதிகள் ஏங்குவது உண்மையிலும் உண்மை. அதிரடி அய்யாத்துரையின் கருத்துச் சரியானதே.

'அரசியல் தீர்வுப் பொதி'யை ஆராய்வதாக போக்குக் காட்டியபடி போர் நடத்துகிறது அரசாங்கம். அதற்கு சகல வழிகளிலும் உதவுவது மூலம் தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற மனக் கோட்டை கட்டுகிறார்கள் கூட்டணியினர். அக் கோட்டையை மக்களுக்கு இனம் காட்டும் முரசுக்குப் பாராட்டு.

வி.ராஜகுலேந்திரன், மட்டக்களப்பு.

'அரசியல் தொடர்' இக் காலத்தோடு இணைந்த நல் முயற்சி. வன்னி முற்றுகைக்கு இலங்கைப் படைகள் முனையும்போது, இந்தியப் படையின் வன்னி முற்றுகை கட்டத்தில் 'அரசியல் தொடர்' பிரவேசித்தது சரியான பொருத்தம்.

ஆ.ஜெகதீஸ்வரி, வவுனியா.

பூலான் தேவியை மறுபடியும் சோகம் சூழப்போகிறதா? ஸ்ரீராமையும், லாலா ராமையும் தீர்த்துக் கட்டிவிடலாம் அல்லவா. கூடவே இருந்து குழிபறிக்கும் கூட்டத்தை நம்புவதால் ஏற்படும் அபாயத்தை பூலான் வரலாறும் சொல்லுகிறதோ?

செல்வி சி.சொரூபா, கல்லடி.

# வாசக(ர்)சாலை

## உதாரண நாயகன்

பிரபஞ்சனின் 'கனவு மெய்ப்பட வேண்டும்' உணர்வு பூர்வமான தொடர். சுமதியைப் போல் ஒரு பெண்ணைத் துணைவியாக அடைந்தவன் அவளை வெறுப்பது என்றால் கையாலாகாத்தனம்தான்; தாழ்வு மனப்பான்மைதான். தங்கள் தாழ்வு மனப்பான்மைகளால் பெண்களின் சந்தோசங்களையும், நியாயமான உணர்ச்சிகளையும் முறித்துப்போடும் ஆண்களுக்கு கனவு மெய்ப்பட வேண்டும் நாயகன் நல்ல உதாரணம்!

திருமதி ஜோதி பரமேஸ்வரன், திருக்கோணமலை.

'விசாரணை' அருமையான கதை. வெளிநாட்டில் நடந்த உண்மைக் கதையானாலும் நம் நாட்டவர்களுக்கு புதியதல்ல. பாலியல் வல்லுறவுக்கு உள்ளான குடும்பமே பழிசொல்லும் கயமை மனதில் முள்ளாகத் தைத்தது.

எஸ்.நாசர், கிண்ணியா.

சிறு கதைகளின் தரம் சமீபத்தில் உயர்ந்தும், ஒவ்வோர் ரசனையாகவும் வரத் தொடங்கியிருக்கின்றன. பாராட்டுக்கள். விசாரணை என்ற பெயரில் வெளியான திரைப்படத்தின் கதையை சிறுகதைபோல சுவைபடத் தந்தது சிறப்பாக இருந்தது.

யோ.சத்தியன், வவுனியா.

என் அன்பு முரசுக்கு ஆயிரம் முத்தங்கள்! கூட்டணித் தலைவர் சிவா அவர்களுக்கு 'முத்தமிழன்' எழுதிய அவசரமடல் பிரமாதம். இது கூட்டணித் தலைவருக்கு மட்டுமல்ல ஏனைய தலைவர்களுக்கும் நல்ல சாட்டையடியாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. முத்தமிழனுக்கு எனது பாராட்டுக்கள். அற்புதன் எழுதும் அரசியல் தொடரும் பிரமாதம். அற்புதனுக்கும் எனது பாராட்டுக்கள்.

செல்வி செ.கிருஷா, மட்டக்களப்பு.

என் இனிய முரசே!

நான் யாழில் இருந்து வந்தமையால் இரண்டு மாதமாக உனைப் படிக்கின்றேன். நீ சுமந்து வரும் சகல அம்சங்களும் மிக நன்று. ஆனால் சுஜாதா மிக வேகமாக ரயில் ஏறிவிட்டார்.

உன்னிடம் ஒரு வினா! என்னைப் போல் என் யாழ் நண்பர்களும் (குற்போதைய) படித்துப் பயனடைய ஆவன செய்வீர்களா?

சி.மதிவதனி.

இனிய முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் வரவேற்கத்தக்கதே. அதிலும் எனக்கு; பிடித்தது அரசியல் தொடர், பூலான்தேவி, இராமாயணம், அதிரடி ஐயாத்துரை போன்ற இன்னோரானவை. அவற்றை உனக்கே உரிய பாணியில் தொகுத்துத் தருவது வெகு சிறப்பு. ராஜேஸ்குமாரின் "உடைந்த இரவு" ஆரம்பமே படுஜோர்!

ந. கலைச்செல்வன், பசறை வீதி,
பதுளை.

முரசே!

அஞ்சு அரவிந்த்மீது உனக்கு அவ்வளவு பிரியமா? இப்படிக் கேட்கிறேன் என்று குறை நினைக்க வேண்டாம். காரணம் இதுதான்: தொடர்ந்து இரண்டு வாரமாக அஞ்சுவின் புகைப்படம் முரசின் முகப்பில் கண்டேன்! அதுதான்!

எம்.சீ. எம். சன்பரா பாஹிர்,
கொட்டராமுல்லை.

## விளையாடாதீர்

"கேட்க ஆளில்லை, உதைக்க யாருமில்லை, என்ற தைரியத்தில் பெண்களின் மானத்தோடு விளையாடும் நாய்களே! ஜாக்கிரதை! உதைக்க மாட்டோம்! சுட்டுத் தள்ளுவோம். அல்லது வெட்டிக்கொல்லுவோம்." இப்படிச் சொன்ன விக்ரம் மல்லாவைக் காண ஆவலாயுள்ளது. தயவு செய்து பிரசுரிப்பீர்களா?




முரசின் அபிமானிகள்.
எஸ். பாஹிமா, யூ.ஜொஹாரா,
எஸ்.ரிஹானா, திகதுர,
பலாங்கொடை.



படிப்பகம்

www.padippakam.com

# சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு பாய்ச்சல்!

# திருமலையில் இருந்து சென்று தாக்குதல்!

**வவுனியாவில் நடைபெற்ற தாக்குதலில் சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவே முக்கிய பங்கு வகித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான சொர்ணம் தலைமையில்தான் வவுனியாவில் ஊடறுப்புத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.**

படையினர் வன்னி இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கத் திட்டமிட்டபோது புலிகளின் பிரதான படைப்பிரிவான சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவை பிரபாகரன் திருமலைக்கு அனுப்பிவைத்திருந்தார்.

முல்லைத்தீவை படையினர் முற்றுகையிட்டால் அதனை முறியடிக்கத் தேவையான படைபலத்தை வன்னிக்கு வெளியே வைத்திருப்பதும், பரவலான தாக்குதல்களை கிழக்கில் நடத்துவதுமே புலிகளின் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட நோக்கமாகும்.

இத் தகவல்களை முரசு முன்னரே வெளியிட்டது தெரிந்ததே. தற்போது கிழக்கில் பரவலான தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளன. தொடர் இழப்புக்களை படையினர் கிழக்கில் சந்தித்து வருகின்றனர்.

இதேவேளை திருமலையிலும் சில தாக்குதல்களை சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவினர் நடத்தியிருந்தனர்.

### புலிகள் முஸ்தீபு

படையினர் ஓமந்தைவரை சென்றதும் புலிகள் தமது வவுனியாத் தாக்குதல் நடவடிக்கைக்கு முஸ்தீபுகளைத் தொடங்கினர்.

வவுனியா கிழக்கில் இருந்தும், வவுனியா மேற்கில் இருந்தும் ஊடறுக்கும் திட்டம் தீட்டப்பட்டது. வவுனியாவுக்கு கிழக்கில் இருந்தே பிரதான தாக்குதல் அணி ஊடறுத்தது.

திருமலையில் இருந்து சென்ற சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவினரே கிழக்குப்புறமிருந்து ஊடறுத்தனர்.

படையினர் போலவே சீருடை அணிந்த சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவினரில் ஒரு பகுதியினர் தாக்குதல் தொடங்க முன்னரே தாண்டிக்குளம் பகுதிக்குள் பிரவேசித்து வசதியான நிலை எடுத்துக் காத்திருந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

தாண்டிக்குள விநியோகத் தளத்தின் பாதுகாப்பை ஊடறுத்துச் சென்ற கரும் புலிகளே முதல் தாக்குதலைத் தொடுத்தனர்.

அதன் பின்னரே புலிகளின் அணிகள் உக்கிரமான தாக்குதலைத் தொடுத்து விநியோக தளத்தை கைப்பற்றித் தாக்கினார்கள். அங்கிருந்த ஆயுதக் களஞ்சியத்தையும் அழித்தனர். 4 டாங்கிகளையும், ஆட்டிலறிப் பீரங்கிகளையும் தாம் அழித்துவிட்டதாகப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

### புலிகளின் நகர்வு

சண்டையில் காயமடைந்த தமது உறுப்பினர்களை நெடுங்கேணிக்கும் புளியங்குளத்துக்கும் இடைப்பட்ட பகுதி ஊடாகவே புலிகள் முல்லைத்தீவுக்குக் கொண்டுசென்றனர். அதனால்தான் நெடுங்கேணியில் இருந்து படையினர் முன்னேறி புளியங்குளம் நோக்கி, செல்வதைத் தடுக்க புலிகள் கடும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா தாக்குதலின் பின்னர் மீண்டும் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவினர் திருமலைக்குத் திரும்பியுள்ளதாகவே தெரிகிறது.

வன்னிக் கள நிலவரங்களுக்கு ஏற்ப வெளியே இருந்து செயற்படும் பிரதான படையணியாக சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார் பிரபாகரன்.

பரந்தன் தாக்குதல், வவுனியாத் தாக்குதல் போன்றவை ஊடாக புலிகளின் அணிகள் ஊடறுப்புத் தாக்குதலில் அனுபவம் பெற்றுள்ளன.

இதனால் வன்னிப் போர் நிலவரம் மேலும் கடுமையாகும் என்று நம்பப்படுகிறது.

காடுகள் சூழ்ந்த பூகோள நிலை இருப்பதால், ஊடறுத்துத் தாக்கும் உத்திகள் புலிகள் தரப்புக்கு பெரும் சாதகமாக அமையும் என்று நம்பப்படுகிறது.

### மாங்குளம் தாக்குதல்

8.06.97 அன்று மாங்குளம் நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை படையினர் நடத்தியது தெரிந்ததே. கடந்த 5.06.97 அன்று புதிதாக கொண்டுசென்று நிறுத்தப்பட்டுள்ள 130 எம்.எம். பீரங்கிகள் மூலமாகவே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. ஓமந்தையில் இருந்து முன்னேறும் படையினரே ஷெல்களை ஏவியிருக்கின்றனர். கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர்களைத் தாண்டிச் சென்று ஷெல்கள் விழுந்துள்ளன.

# சோதனை அரண் மரியாதை! எப்போதும் இறக்கம்தான்!

யாழ் நகரில் சந்திக்கு சந்தி சோதனை நிலையங்கள் இருக்கின்றன. சைக்கிள் மற்றும் வாகனங்களில் செல்வோர் சகல சோதனை நிலையங்கள் முன்பாகவும் இறங்கித்தான் செல்லவேண்டும்.

ஆனால் தற்போது வன்னி படை நடவடிக்கைக்காக படையினர் எடுக்கப்பட்டதால் பல சோதனை நிலையங்கள் படையினர் இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கின்றன. அப்படியிருந்தும் சைக்கிளில் செல்வோர் இறங்கி இறங்கியே செல்லுகின்றனர்.

"ஒருவேளை படையினர் உள்ளே பதுங்கி இருந்தால் என்ன செய்வது? காலையில் படையினர் இல்லாத சென்றி பொயிண்களில், மாலையில் படையினர் இருக்கக்கூடும். நாம் இறங்காமல் சென்று எதை எதைவாங்கிக் கட்டிக்கொள்ளவேண்டி ஏற்படுகிறதோ? அதனால்தான் வழக்கம்போலவே நடந்து கொள்கிறோம்" என்கின்றனர் சைக்கிள் பயணிகள்.

சோதனை நிலையங்களைத் தாண்டும் போதும், அல்லது படையினரைக் காணும் போதும், வேட்டியை மடித்துக்கட்டி இருந்தால் உடனே அவிழ்த்துவிடவேண்டும். மடித்துக் கட்டிய வேட்டிக்குள் குண்டு இருக்கலாம் என்று படையினர் நினைத்துவிடக்கூடாதாம். நினைத்தால் வம்புதானே? தம் முன்னால் வேட்டியை மடித்துக்கட்டிச் செல்பவர்களை படையினரும் அதட்டி அவிழ்க்கச் செய்துவிடுகிறார்களாம்.

## ஒன்றரை வயதுக் குழந்தை மீது வழக்கு!

யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஒன்றரை வயதுக் குழந்தைமீதும் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த மாத ஆரம்பத்தில் வன்னியில் இருந்து தமிழகம் சென்றுகொண்டிருந்த சமயம் ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட 28 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் ஒன்றரை வயதுக் குழந்தையும் அடக்கம். இவர்கள்மீதே யாழ் மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வன்னியில் இருந்து படகுகள் மூலம் யாழ் குடாநாட்டுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. முன்னர் இடம்பெயர்ந்து சென்றவர்களே அவ்வாறு திரும்பிச் செல்கின்றனர்

# கிளைமோரா? கைக்குண்டா?

## பஸ் சாரதிக்கு உதை!

வடபிராந்திய ஒரு போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி 03.06.97 பகல் 2 மணியளவில் இளவாலையில் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகியது. இதன்போது ஒரு படை அதிகாரி உட்பட ஒரு பொலிசார் மற்றும் இரண்டு படை சிப்பாய்கள், 2 பொது மக்கள் உள்ளடங்கலாக 6 பேர் கொல்லப்பட்டனர். இளவாலை திருக்குடும்பக்கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட்சகோதரி ஜேசுதாஸ் மேரி ஏஞ்சலா (30), அருட்சகோதரியின் உதவியாளரான நாரந்தனையைச் சேர்ந்த ஜோசப் பெர்னான்டோ மாலினி (16), இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மட பாடசாலையின் 9ம் ஆண்டில் கல்வி கற்கும் குருநகரைச் சேர்ந்த ஜேசுதாசன் ரஷிகா பிரியதர்ஷினி (14) ஆகியோர் உட்பட 5 பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர்.

இந்த பஸ்சின் சாரதியான இளையதம்பி சிவலிங்கம் (51) என்பவரின் சடலம் தலை துண்டிக்கப்பட்ட முண்டமாகக் காணப்பட்டது. இவருடன் கொல்லப்பட்ட மற்றையவர் குணரட்ணம் சுந்தரலிங்கம் (48) இளவாலை கடை உரிமையாளராவார்.

முதலில் இதற்கு புலிகள் வைத்த கிளைமோர் தாக்குதலே காரணம் என படையினர் தெரிவித்தனர். ஆனால் அது பஸ்சுக்குள், பஸ் வண்டிக்குப் பாதுகாப்புக்கு (ஸ்கொட்) சென்ற படையினரின் கைக்குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததனால் ஏற்பட்டதாக சில தகவல்கள் கூறுகின்றன. எனினும் கிளைமோர் தாக்குதலே என்று படையினர் கூறியுள்ளனர்.

இச் சம்பவத்தின் மறு நாள், கோண்டாவில் டிப்போவுக்குச் சென்று கொண்டிருந்த பஸ்சின் சாரதியை படையினரின் சோதனைச் சாவடிக்கு அருகாமையில், பின்னால் வந்து கொண்டிருந்த படையினரின் டிராக்டர் வழி மறித்தது. அதில் வந்த படையினர் பஸ் சாரதியை கடுமையாகத் தாக்கியுள்ளனர். அவர் மயக்கமுற்ற நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இவரே முன்னர் மருதங்கேணியில் புலிகளின் கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளான பஸ்சை தனது காயத்துடன் செலுத்திக் கொண்டு வந்து சேர்த்தவர்.

இதனைத் தொடர்ந்து, அடுத்த நாள் 4ம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் 2 மணி நேரம் பஸ் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது. பஸ்சாரதிகள் வேலை நிறுத்தம் செய்தனர். பஸ் போக்குவரத்து எதுவும் நடைபெறவில்லை. இதன்பின் படை அதிகாரிகளுடன் நடந்த பேச்சைத் தொடர்ந்து அளிக்கப்பட்ட உறுதிமொழியைத் தொடர்ந்து மீண்டும் 10.30 மணிக்கு வழமைபோல் சேவை நடத்தப்பட்டது. முன்னரும் யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் நடத்துனர் ஒருவர் தாக்கப்பட்டதால் இதே போல் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது அப்போதும் படையினர் உறுதிமொழி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது மாதகலுக்கான பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த வடமராட்சிக் கிழக்குப் பகுதியான மந்திகை- செம்பியன்பற்றுக்கான பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளதால் நோயாளிகள், மற்றும் அரச அதிகாரிகள் போன்றவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

### கைக்குண்டு வீச்சும் சூடும்

4ம் திகதி கோண்டாவிலில் இருந்து இருபாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த ட்ரக் வண்டி மீது 3 கைக்குண்டுகள் வீசப்பட்டன. அச்சமயம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டின்போது மாடு அவிழ்த்துவரச் சென்ற கோண்டாவிலைச் சேர்ந்த குமாரசாமி கிருஷ்ணகுமார் (40) என்பவர் கொல்லப்பட்டார். இவருடன் சென்ற அவருடைய மகன் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

7.06.97 அன்று கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சின்னப்பொடி கதிரவேலு (52) என்பவர் படையினரின் கைவிடப்பட்ட காவலரணுக்கு அண்மையில் விறகு பொறுக்கச் சென்ற போது, மிதிவெடியில் சிக்குண்டு தனது வலதுகாலை இழந்தார்.

# "எல்லோரும் பயங்கரவாதிகளா?"

யாழ்ப்பாணத்தில் காணாமல்போனோர் தொடர்பாக அவர்களது உறவினர்கள் யாழ் செயலகத்தில் கூடிநின்று முறையிட்டனர். அப்போது ஒவ்வொருவரும் கூறிய சோகக் கதைகள் அங்கிருந்தோரை கலங்க வைத்தன.

கடந்த ஆகஸ்ட் மாதம் தனது கணவரை பறிகொடுத்த பத்மினி என்ற பெண் அழுது புலம்பியபடி கூறிய கண்ணீர்க்கதை இது;

எமக்கு இனி விடிவு இல்லையா? கைதானவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகளா? பல்கலைக்கழக மாணவன், கிராம சேவையாளர், பாடசாலை ஆசிரியர், அரச ஊழியர் எனப் பலதரப்பிலும் கைதானவர்கள் பயங்கரவாதிகளா? என்ன குற்றஞ் செய்தார்கள் என்று அவர்களைக் கைது செய்தீர்கள்? இவர்களை ஏன் கைது செய்தீர்கள் என்று கேட்பதற்குக் கூட ஆள் இல்லையா? அரச அதிபர்கூடக் கேட்கக் கூடாதா?

எனது பிள்ளையை டாக்டராக்குவேன்; இன்ஜினியர் ஆக்குவேன் என்ற எண்ணத்துடன் வளர்த்து வந்த தாய் தந்தையினதும்-

கட்டிய கணவனுடன் வாழ்ந்து பேறு அடைவேன் என்ற அங்கலாய்ப்புடன் கழுத்தை நீட்டிய அபலைப் பெண்களினதும்-

ஆசைகள், எண்ணங்கள், லௌகீக வாழ்வு எல்லாம் இன்று சுக்குநூறாகிப் போய்விட்டனவே! இவற்றுக்கு எல்லாம் காரணகர்த்தாக்கள் யார்?- இப்படிக் கேள்விகள் பல எழுப்பித் தனது உரையை முடித்தார் பத்மினி.

அவர் பேசும்போது அங்கு குழுமியிருந்த தாய்மார் தமது பிள்ளைகளை நினைத்தும், இளம் பெண்கள் தமது கணவன்மாரை நினைத்தும் 'ஓ' வென்று உரத்த குரலில் அழுத வண்ணம் இருந்தனர். அவர்களின் அழுகை ஒலி செயலகம் எங்கும் எதிரொலித்தது.

தாய்மாருடன் அங்கு வந்திருந்த சிறு குழந்தைகள் "அப்பா அப்பா" எனக் கேவி அழுதவண்ணம் இருந்தன.

மண்எண்ணெய்க் குப்பி விளக்கில் கண்தூங்காமல் படித்து, பல்கலைக்கழக அனுமதி பெற்று மூன்று மாதம் பல்கலைக்கழகம் சென்ற எனது மகனைக் கைது செய்து எனது குடும்பத்தின் எதிர் காலத்தையே பாழடித்து விட்டார்களே! என்று உரும்பிராயைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியரான வ. செல்வநாயகம் வேதனையுடன் கூறினார்.

# "தோணிகளை அப்புறப்படுத்துக!"

## விமானப்படையினர் வேண்டுகோள்!

மட்டக்களப்பு விமானப் படைத் தளத்தைச் சுற்றியுள்ள வலையிறவு வாவியில் மீன்பிடிப்பதற்கு இருந்து வந்த அனுமதியை விமானப் படையினர் தடை செய்திருப்பதோடு வாவியிலிருந்து மூன்று மைல் தூரத்தை பாதுகாப்பு வலயமாகவும் பிரகடனம் செய்திருக்கிறார்கள். கடந்தவாரம் முதல் வலையிறவு வாவியில் மீன் பிடிக்கச் செல்வது தடுக்கப்பட்டிருப்பதோடு அங்கு மீன்பிடிக்கப்பாவிக்கப்பட்டுவந்த தோணிகளை அப்புறப்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பு விமானநிலையப் பாதுகாப்பைப் படையினர் பலப்படுத்துவதே இதற்குக் காரணமாகும். இதனால் மீன்பிடியை நம்பிச் சீவித்து வந்த திருப்பெருந்துறை மற்றும் அதனைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த சுமார் 200க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வாவியில் மீன்பிடிப்பதற்காக முன்னர் விமானப்படையினர் விசேட அனுமதி அட்டைகளை வழங்கியிருந்தார்கள்.

ஏற்கனவே மீனவர்களுக்காக வழங்கப்பட்ட நிவாரணத்தில் இக் கிராமத்தவர்களுக்கு முதல் கட்டமே கிடைத்தது. ஏனைய பகுதிகளில் 2ஆம் கட்டமும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னர் மேற்கொள்ளப்பட்ட விமான நிலைய விஸ்தரிப்புக் காரணமாக வெளியேற்றப்பட்டோரும், அம்பாறை- சம்மாந்துறையிலிருந்து 1990ம் ஆண்டு இடம் பெயர்ந்தோருமான அகதிக் குடும்பங்களே திருப்பெருந்துறைக் கிராமத்தில் குடியேறியுள்ளனர். விமான நிலைய விஸ்தரிப்பு இடம்பெற்று ஒரு தசாப்தத்திற்கு மேலாகிவிட்ட போதிலும் இன்னமும் இழப்பீடு வழங்கும் வேலை முற்றுப் பெறவில்லை என்பது இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

# "படையினரைத் தாக்க வேண்டாமென புலிகளைக் கோருக!"

## கூட்டத்தில் பாதுகாப்புத் தரப்பினர்!

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பகுதியில் சம்பகாலமாக புலிகள் இயக்கத்தினருக்கும் படையினருக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருவது தெரிந்ததே.

ஜூன் 02 ஆம் திகதி வீதிப் பாதுகாப்பிற்குச் சென்ற பொலிஸ் குழுவினரைப் புலிகள் இயக்கத்தினர் வழிமறித்துத் தாக்கினார்கள். இதனால் அப்பகுதியில் சீர் கெட்டு வரும் பாதுகாப்பு நிலைமை குறித்து பாதுகாப்புப் படை அதிகாரி கேர்ணல் சில்வாவினால் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உடவத்த, வாழைச்சேனை ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர், மின்சார அத்தியட்சகர், பிரதேச சபைத் தலைவர்கள், தேவாலய பிதா, பள்ளிவாசல்களிலிருந்து சில தர்மகர்த்தாக்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்துக் கோயில்களின் சார்பில் எவருக்கும் உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுக்கப்படாததால் கூட்டத்திற்கு வர அவர்கள் சம்மதிக்கவில்லை.

"புலிகள் இயக்கத்தினரின் ஊடுருவல் இப்பகுதியில் சம்பகாலமாக அதிகரித்திருப்பதால், பாதுகாப்புக்கு அது பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. பெரும் உயிரிழப்புக்களும் உடமை இழப்புக்களும் ஏற்பட்டிருப்பதோடு மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் வாழும் சன சந்தடிமிக்க பகுதிகளுக்குள் இருந்து கொண்டு புலிகள் இயக்கதினர் திட்டமிட்டு பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். இதனால் பதிலடி கொடுத்து அவர்களை விரட்டியடிக்க வேண்டியிருக்கிறது. எனவே இந்நிலமை ஏற்படாத விதத்தில் பார்த்துக்கொள்வது பொதுமக்களாகிய உங்களின் கடமை. மக்கள் வாழும் பகுதிகளுக்குள் இருந்து கொண்டு பாதுகாப்புத் தரப்பினர்மீது தாக்குதல் தொடுக்க வேண்டாமென்று புலிகளைக் கோரி அவர்களைத் தடுத்து நிறுத்துங்கள்!" இவ்வாறு அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பாதுகாப்பு உயரதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

பாதுகாப்புத் தரப்பினர் திருப்பித் தாக்கும் போது வாழைச்சேனை கன்னியர் மடம் நோக்கியும் ஷெல்கள் ஏவப்படுகின்றன. இது தவிர்க்கப்படவேண்டும் என்று அங்கிருந்த பிதா ஒருவர் கேட்டுக்கொண்டார். ஓட்டமாவடிப் பகுதி முஸ்லிம்களின் மோட்டார் சைக்கிள்களை புலிகள் இயக்கத்தினர் பலாத்காரமாகக் கொண்டு செல்கின்றனர். இதனையும் தடுத்து நிறுத்துங்கள் என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

"எங்களுடையதையும்தான் பறித்துச் செல்கிறார்கள். இதைப் போய் நாங்கள் யாரிடம் முறையிடுவது?" என்று அங்கிருந்த பிதா ஒருவர் கேள்வி எழுப்பினார்.

தடை செய்யப்பட்டிருக்கும் வாழைச்சேனை பிரதான வீதியை போக்குவரத்திற்குத் திறந்து விடுமாறு வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் கேட்டுக்கொண்டார். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

# பட்டப் பகலில் புலிகள் இயக்கத்தினர் பொருட் கொள்வனவு!

## "அஞ்ச வேண்டாம் -ஆபத்தில்லை!" என்று தெரிவிப்பு

மட்டக்களப்பு- வாழைச்சேனை நகரில் ஜூன் மாதம் 08ம் திகதி நண்பகலுக்குச் சற்று முன்பு புலிகள் இயக்கத்தினர் கடைத் தெருவெங்கும் திடீரெனத் தோன்றி திரண்டு காணப்பட்டனர். இதனைக் கண்ணுற்ற பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் பயப்பீதி ஏற்பட்டு செய்வதறியாது கிலி கொண்டு ஓட ஆயத்தமாயினர். புலிகள் இயக்கத்தினர் வாழைச்சேனைப் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் மற்றும் இராணுவ நிலைகளைத் தாக்குவதற்கே திரண்டிருக்கிறார்கள் என்று பொதுமக்கள் கதி கலங்கியிருந்தனர்.

இந்நிலைமையை அறிந்த புலிகள் இயக்கத்தினர் அங்கிருந்த மக்களிடம் "நாம் பொருட்கள் வாங்கிச் செல்லவே வந்திருக்கிறோம். தமிழ்-முஸ்லிம் பொதுமக்களாகிய நீங்கள் எவரும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. நாம் பொதுமக்களுக்கு எதிரானவர்களல்ல!" என்று கூறினர். புலிகள் இயக்கத்தினர் திரண்டிருந்த இடத்திலிருந்து சுமார் 300 மீட்டருக்கும் குறைவான தூரத்திலேயே பொலிஸ் மற்றும் இராணுவ நிலைகள் அமைந்துள்ளதால் மக்கள் கிலி கொண்டு அவ்விடத்தை விட்டு ஓடவே செய்தனர்.

பொருட் கொள்வனவிற்காக மட்டும் கடைத்தெருவில் 25க்கு மேற்பட்ட புலிகள் இயக்கத்தினர் திரண்டிருந்தார்கள்.

# அகதிகளால் நிரம்பி வழியும் மன்னார்!

(மன்னார் நிருபர்)

படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து வரும் அகதிகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இவ்வாறு இடம்பெயர்ந்து வரும் மக்கள் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் மட்டும் உயிலங்குளம் ஊடாக அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த 7.6.97 அன்று மட்டும் சுமார் 750 பேர் வந்தனர். இவ்வாறு வருபவர்கள் உயிலங்குளத்தில் தங்க வைக்கப்பட்டு மறுநாள் மன்னார்த்தீவுப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மன்னார்த்தீவில் பேசாலை, எருக்கலம்பிட்டி ஆகிய இடங்களில் அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தலை மன்னாரிலும் இவ்வாறு முகாம் ஏற்படுத்தப்படுகிறது.

இடம்பெயரும் அகதிகளில் பெரும்பான்மையானோர் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

அகதிகளை ஏற்றியிறக்கும் பணிகளில் மன்னார் இ.போ.ச. ஈடுபட்டுள்ளது. இதனால் ஏனைய வழமையான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மன்னார்ச் சாலையின் வருமானம் ரூபா ஐம்பதாயிரத்தைத் தொட்டுவிட்டது. மன்னார் நகரில் வரலாறு காணாத மக்கள் வெள்ளம் கூடுவதே இதற்கான காரணம் ஆகும்.

எனினும் சாலையில் போதியளவு பஸ்கள் கிடையாது. இன்னும் 25 பஸ்கள் இருந்தாலும் சமாளிக்க முடியாதென சாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் முரசிடம் தெரிவித்தார்.

# சல்லடைத் தேடுதல்!

## திடீர் சுற்றிவளைப்பு!

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரில் திடீர் திடீரென சில பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு அப்பகுதியால் போவோர் வருவோர் எல்லோரும் கடும் சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கை கடந்த சில நாட்களாக நடைபெறுகின்றது. ஆஸ்பத்திரிச் சந்தி, மூர் வீதி, சின்னக் கடை, உப்புக்குளம் போன்ற சில பகுதிகளே இச் சோதனைக்கு இலக்காகியுள்ளன.

உயிலங்குளம் ஊடாக வரும் பயணிகளோடு பயணிகளாக பத்துக்கும் மேற்பட்ட புலிகள் நகருக்குள் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே இச் சோதனை முறை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது.

இச் சுற்றி வளைப்புக்கள் அநேகமாக பிற்பகல் வேளைகளிலேயே இடம் பெறுகின்றன. இதனால் மாலை நேர பஸ் சேவைகள் சில வேளைகளில் மிகவும் தாமதமாகவே இடம்பெறுகின்றன.

இத் தேடுதல் நடவடிக்கையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

# பொருட்களின் விலைகள் குறைவது எப்போது?

## வீதி திருத்தும் பணிகள் ஆமைவேகத்தில்!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது தட்டுப்பாடற்ற முறையில் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கின்றபோதிலும், பொருட்களின் விலைகள் இன்னும் குறைந்தபாடில்லை.

இதனைக் கண்காணிக்க வேண்டிய விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் கட்டுப்பாடான கடமையினால் நினைத்த விலையில் பொருட்கள் விற்கப்படுகின்றன.

இடைக்கிடையே சில வர்த்தகர்களின் மீதும், வர்த்தக நிலையங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றபோதிலும் உருப்படியான முறையில் சகல வர்த்தக நிலையங்களையும் கண்காணிக்க இந்த அதிகாரிகளால் முடியாதுள்ளது.

கிராமப்புறங்களில் பொருட்களின் விலைகள் இரட்டிப்பாக உள்ளன. 1990 ஆம் ஆண்டின் பின் இந்த அதிகாரிகள் கிராமப் பகுதிகளுக்குத் தலை காட்டியதாகத் தெரியவில்லை.

அரிசி, சீனி, மா, குளிர்பானப் போத்தல்கள், பாண் போன்ற சகல பொருட்களும் அதிகளவு இலாபம் வைத்தே விற்கப்படுகின்றன.

முன்னர் படகுப் போக்குவரத்தில் பொருட்கள் கொண்டு வரப்பட்டதால் விலைகளைக் கட்டுப்படுத்த முடியாதிருந்தது. ஆனால் தற்போது சகல பொருட்களும் லொறிகள் மூலம் மலிவுக் கட்டணத்திலேயே கொண்டு வரப்படுகின்றன. இதனால் இவ்விடயத்தில் துரித நடவடிக்கை எடுத்து, பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இவர்கள் களத்தில் இறங்கி தமது செயற்திறனைக் காட்டுவது அவசியமாகும்.

இதேவேளை மன்னார்-வவுனியா வீதியினைத் திருத்தும் பணிகள் தற்போது ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன. மன்னாரிலிருந்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் ஆரம்பமான இப்பணி தற்போது சுமார் 5 கிலோமீட்டர் தூரம் வரை மட்டுமே நடைபெற்றுள்ளது.

இதனால் இவ்வீதியைத் திருத்தி செப்பனிட்டு முடிக்க சுமார் நான்கு ஆண்டுகளாவது செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்விதமிருக்க மன்னாரிலிருந்து பல இடங்களுக்கும் பஸ்சேவை நடைபெறுவதால் தலை மன்னார் போன்ற தூர இடங்களுக்கான முக்கிய பஸ் சேவை திடீர் திடீரென இரத்துச் செய்யப்படுகின்றது.

இதனால் இப்பகுதிப் பயணிகள் பல மணி நேரம் தவம் கிடந்து தமது பயணத்தை மேற்கொள்வதாகத் தெரியவருகிறது.

தனியார் பஸ் சேவையும் இப்பகுதிகளில் கிடையாது. இதனால் பயணிகளை ஏற்றி இறக்க லொறி சேவை நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வவுனியாவின் விடுதலை!

உணர்வுகள் மறுக்கப்பட்டும் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டும் தடை முகாம்களிலும் அகதி முகாம்களிலும் தமிழினம் தன்மானம் இழந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற இக் காலகட்டத்தில், வவுனியா நகரத்தில் அரசியற் சாயம் பூசிக் கொண்டும், மக்கள் உணர்வுகளை சிறை கொண்டு, விடுதலையை தமது கட்சிப் பெயர்களில்மட்டும் கொண்டு இருக்கும் இயக்கங்கள் நடாத்தும் அட்டகாசங்கள் அளவில்லை.

'கழகக் கட்சி' மாதா மாதம் வியாபார தாபனங்களின் தரத்திற்கு ஏற்ப வசூலிக்கின்றது. நாங்கள் மட்டும் என்ன விட்டுவிடுவோமோ என்று விடுதலை இயக்கமும் வியாபார தாபன உரிமையாளருக்கு தகுந்த மரியாதை கொடுத்து மொத்தமாக வசூலித்தது. சமீபத்தில் 'புரட்சிகர முன்னணிக்' கட்சியும். "நாங்களும் இருக்கின்றோம்" எனக் கூறி மாத வசூலிப்புக்கு ஆயத்தமாகிவிட்டது.

தமிழர் தவித்துக் கொண்டு இருக்கும் இக்கால கட்டத்தில் இசைநிகழ்ச்சி வேண்டும் என யாரும் கேட்பதில்லை, தென்னிந்திய கலைஞர்களை வரவழைத்து நிகழ்ச்சி நடாத்த, கட்டாய வசூலிப்பில் விடுதலை இயக்கம் ஈடுபட்டுள்ளது. மறுத்தோர்க்கு நல்ல மரியாதையும் கிடைத்ததாம். இவை மட்டுமா? தேய்காய் விற்பனையில் தரகு, மீன்சந்தை விலைகோரல் என எல்லாத் தரப்பிலும் நல்ல வருவாய். இவையெல்லாம் இறுதியாக, ஒரு சாதாரண குடிமகனின் வாழ்க்கைச் செலவை உயர்த்தி, சமூகத்தை வறுமை நிலைக்குத் தள்ளும் என்பதை இவ்வமைப்புகள் உணரவில்லையே!

வவுனியாவில் சிவில் நிர்வாகம் நடக்கின்றது எனக் கூறும், அரசாங்க அதிபர், அரச அதிகாரிகள், பொலிசார், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், ஜனாதிபதி எல்லோரும் வவுனியாவின் இத்துயர நிலையை அறியவில்லையா?.

என்.காண்டீபம், வவுனியா.

# தமிழிலும் தேவை!

கடந்த ஒரு மாத காலமாக இரவு 11.30 மணியளவில் இலங்கை ரூபவாஹினியிலும், சுயாதீன தொலைக்காட்சி சேவையிலும் (ITN) க.பொ.த (உயர்தர பரீட்சை) தொடர்பான கலந்துரையாடல்கள் ஒளிபரப்பாகின்றன.

இக்கலந்துரையாடல் 1997ம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் புதிய பாடத்திட்டத்திலான உயர்ந்த பரீட்சையை பற்றியதாகும். எனவே புதிய பாடத்திட்டம் பற்றிய போதிய அறிவை இதிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இக்கலந்துரையாடல் சிங்களத்தில் மாத்திரமே நடைபெறுவது மிகவும் வேதனைக்குரியது. இக்கலந்துரையாடலை அனுசரணை செய்யும் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது சேவையினை தமிழ் மொழிமூல மாணவர்களுக்கும் எட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சநாதன் ஜெயப்பிரகாஷ், பசறையூர், கண்டி.

# மலையகச் சிறுகதைகள்

## மொழிபெயர்க்க முயற்சி

(கண்டி நிருபர்)

மலையகத்தில் படைக்கப்பட்ட சிறந்த 15 சிறுகதைகளை தமிழ்மொழியிலிருந்து சிங்களத்திற்கும் ஆங்கிலத்திற்கும் மொழி பெயர்த்து வெளியிட தம்மாலான சகல முயற்சிகளையும் எடுப்பதாக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன் தெரிவிக்கிறார்.

இதன் பொருட்டு மலையக மக்களைத் தொனிப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட சிறந்த சிறுகதைகளைத் தெரிவு செய்து ஒப்படைக்குமாறும் சிறந்த கதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் மலையக எழுத்தாளர்களைக் கேட்டுக் கொண்டார். கண்டி சிட்டி மிஷன் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற 'மலையகச் சிறுகதைகளின் தொகுப்பு நூல்' வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்ட உறுதியை வழங்கினார்.

இக்கதைகளைத் தெரிவு செய்யும் பொழுது எவருக்கும் பாரபட்சம் காட்ட வேண்டாமெனவும் தரமான கதைகளாகவே அவை அமைதல் வேண்டுமெனவும் பேராசிரியர் மேலும் சுட்டிக் காட்டினார்.

# பத்தாயிரம் ஏக்கர் பாதிப்பு

(திருமலை நிருபர்)

கடும் வரட்சி காரணமாக மூதூர் மாவட்டத்தில் பெருமளவு விவசாய நிலங்கள் பாழடைந்து போயுள்ளன. மூதூர்ப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடத்தில் சுமார் ஏழாயிரம் ஏக்கர் விவசாயமும் ஈச்சிலம்பற்றைப் பிரதேச சபை எல்லைக்குள் மூவாயிரம் ஏக்கர் விவசாயமும் பாதிப்படைந்துள்ளன.

இதனால் சுமார் மூவாயிரம் குடும்பங்கள் கடனில் சிக்கித்தவிக்க வேண்டிய நிலையிலுள்ளன. வரட்சி காரணமாக நீர்ப்பாசனமின்றிப் போனதாலேயே தங்கள் வயல்கள் கருகிப் போனதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவர்களது நிலையைக் கருத்திற் கொண்டு நிவாரணம் வழங்குமாறும், அடுத்த போகத்துக்கான விதை நெல்லை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் சமூக சேவகர் திரு.க.குணநாயகம் அரசைக் கோரியுள்ளார்.

# பொன்விழா ஏற்பாட்டால் புதுக்கோலம்

(கண்டி நிருபர்)

இலங்கையின்- 50 ஆண்டுகள் நிறைவு- சுதந்திர தின பொன்விழா கண்டியில் அடுத்த வருடம் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்படவிருப்பதால் கட்டிட நிர்மாணப் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

கண்டியில் இருந்து கொழும்புக்கு ரயில் இருப்புப் பாதையின் ஊடாக 52 கிலோ மீற்றரில் பிரயாணம் செய்யக் கூடிய நெடுஞ்சாலை ஒன்றுக்கான ஆரம்பப் பணிகள் ஜனாதிபதியினால் அடுத்த வருடம் தொடக்கி வைக்கப்படும்.

கண்டி மாநகர சபை எல்லைக்குள் பல அபிவிருத்தித் திட்டங்கள் இப்பொழுது துரிதமாக்கப்பட்டுள்ளன, இந்த விழாவைக் கொண்டாட பிரதி உள்நாட்டமைச்சரும் கண்டி மாவட்ட எம்.பி.யுமான திரு. லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையில் விசேடகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. பேராதனையில் நிர்மாணிக்கப்படும் சிறுவர் ஆஸ்பத்திரியும் இதன் ஓர் அங்கமாக அமையும்.

இந்தப் பொன்விழாவையோட்டி இலங்கையில் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரும் இடம்பெற உள்ளது.

# கேள்விக்குறியாகும் கல்லூரி எதிர்காலம்!

இலங்கையிலுள்ள முஸ்லிம் பெண்களுக்கான முதலாவது கலாநிலையமாக விளங்கும் கல்-எலிய முஸ்லிம் மகளிர் அரபிக் கல்லூரியின் எதிர்காலம் என்னவாகுமோவென, முஸ்லிம் மகளிர் கல்வியில் கரிசனையுள்ள பலரும் வினா எழுப்புகின்றனர். இக் கல்லூரியின் ஸ்தாபகர்களுள் ஒருவரான அபுல் ஹஸன் ஹாஜியார் காலமானதையடுத்து இக் கேள்வி எழுந்துள்ளது.

அபுல் ஹஸன் ஹாஜியார் வாழும் காலத்திலேயே மேற்படி கல்லூரி நிதியை ஒரு சில நிர்வாகிகள் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் பலரும் அறிந்த விடயமாகும். அன்னார் உயிருடன் இருக்கும் போது தில்லுமுல்லு செய்தவர்கள் அன்னார் இல்லாதபோது என்ன செய்யப் போகிறார்களோ? எனப்பலரும் அங்கலாய்க்கின்றனர்.

எனவே தற்போதைய நிலையில் மேற்படி கல்லூரியின் நிர்வாக சபையை மறுசீரமைத்து நேர்மையான, புதியதோர் நிர்வாகக் குழுவொன்றை ஏற்படுத்த வேண்டியது. முஸ்லிம் மகளிரின் கல்வி மேம்பாட்டில் அக்கறையுள்ள அரசியல்வாதிகளினதும், கல்விமான்களினதும் பாரிய பொறுப்பாகும் எனப் பலர் கோரிக்கை விடுக்கின்றனர்.

எம்.எச்.எம்.ஹாரித், கம்பஹா.


STUDY HOTEL MANAGEMENT IN SWITZERLAND

Applications are Invited from Sri Lankans for 2 1/2 year Diploma Course in Hotel Management offered by the Swiss Hotel Management School, Switzerland.

Eligibility: G.C.E (O/L) and above, age over Eighteen and a good knowledge of English.

Each academic year consists of five months class room study and seven months practical training. During Practical training the students are paid a stipend of SFR 2,000 to 2,500 per month and can save at least SFR, 10,000.

**Students can apply scholarship for SFR 10,000.** Students and parents are invited to meet the Sri Lankan Representative of the Swiss Hotel Management School at the following address- **Personally** from **26th May 97** onwards during office hours for an interview, discussion and information regarding school fees, system of payment etc. **Enrolment forms are issued only to students who are successful at the interview.**

**DALUWATTA & JAFFE ASSOCIATES,**
**L.G 15, People's Park, Pettah,**
**Colombo-11.**
**Tel : 320139**
**(Behind Gunasingapura Private Bus Stand)**

தேவை
பெண்கள் வேலைக்கு தேவை.
திறமையனவர்களுக்கு 4000/=, 5000/= ஆயிரம் சம்பளம் வழங்கப்படும். முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
T. RABESHEN
10 2/2, 42nd LANE,
WELLAWTHA.
புகைப்பட பிடிப்பாளர் அனுபவம் உள்ளவர்களும், ஓர் அளவு நாட்டம் உள்ளவர்களும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

SPOKEN ENGLISH
தபால் மூலம் கல்வி
மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
P. O. BOX -162, COLOMBO.

ரெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

பழுது பார்த்தல்
வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்
நியூ விக்ரேஸ்
New Victors
40 1/3, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
T.P-594492

'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்
APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176
'எல்லாப்புகழும் இறைவனுக்கே'
காம-காலபலனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறு பிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருளி முனிவர்கள் கையாண்ட கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.
நாடவேண்டிய பெயர், விலாசம்

YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.
குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.

சித்தர் மாந்திரீகம்
அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவீணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர் களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.
1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)
21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை


33 வருடமாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.
மலையாள மாந்திரீகம்
எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.
தொடர்புகளுக்கு:-
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
பக்ஸ் இல-342464
பேஜர் சென்டர் இல- 588407
தொடர்பு கொண்டு இல- 972 இனைக் கேட்கவும்.
வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET. NO.....
E/MAIL/SAMY 1.2@SLT.LK,
WWW LGO SLT.LK.
நேரில் சந்திக்க-
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.




படிப்பகம்

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# ஈரடி முன்னால் ஓரடி பின்னால்

## எதிர்பாராத முனையில் எதிர்பாராத தருணத்தில்

கடந்த 06.06.97 அன்று ஓமந்தையில் இருந்து படையினர் தமது அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பித்தபோதே, புலிகளும் தமது அடுத்த பாய்ச்சலுக்கான இலக்கை தீர்மானித்துக் கொண்டனர்.

5.06.97 அன்று வன்னிக்களத்திற்கு புதிதாக கொண்டு சென்று இறக்கப்பட்ட 130 எம்.எம். பீரங்கிகளுடன் மறுநாளே படை நடவடிக்கைகள் தொடங்கின.

ஓமந்தையில் இருந்து புளியங்குளம் 12.5 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. நெடுங்கேணியில் இருந்து புளியங்குளம் 20 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது.

ஓமந்தையில் இருந்து வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையில் படைகள் முன்னேறத் தொடங்க, நெடுங்கேணியில் இருந்தும் ஓமந்தை புளியங்குளம் றோட்டில் படைகள் முன்னேற முயன்றன.

ஓமந்தையில் இருந்து முன்னேறும் படைகளுக்கு அடையாள எதிர்ப்பைத்தான் புலிகள் காட்டினார்கள். நெடுங்கேணியில் இருந்து முன்னேறும் படைகளை தடுப்பதில்தான் புலிகள் பிரதான கவனம் செலுத்தினார்கள்.

காரணம், நெடுங்கேணி-புளியங்குளம் றோட் படையினரிடம் சென்றால் தாம் அடுத்த பாய்ச்சலுக்கு போட்டிருந்த திட்டம் சிறிது பிசகிவிடும் என்பது ஒரு காரணம்.



முல்லைத்தீவுக்கும்- திருமலைக்குமான தரைத்தொடர்பு துண்டிக்கப்படும் என்பது மற்றொரு காரணம்.

இரண்டாவது காரணத்திற்காக மட்டுமே புலிகள் நெடுங்கேணியில் இருந்து முன்னேறும் படையினரை தடுக்க கடுமையாக முனைவதாக படையினர் நினைத்தனர்.

ஓமந்தையில் இருந்து முன்னேறிய படையினரை ஓரளவான அடையாள எதிர்ப்புடன் உள்ளேவரவிடுவது என்று புலிகள் முன்கூட்டியே திட்டமிட்டு விட்டனர்.

புலிகளின் பலம் இருமுனைகளில் இருப்பதால்தான் எதிர்ப்பு பலமாக வரவில்லை என்று படைத்தரப்பு நினைத்திருக்கலாம். அதனால்தான் புலிகள் பின்புறமாக வந்து ஊடறுக்கலாம் என்ற சந்தேகம் எழவில்லை.

**படையினர் தாம் நிலைகொண்ட பகுதிகளில் இருந்து முன்னேறும் முஸ்தீபுகளில் இருந்தபோது, படையினர் கைப்பற்றிய பகுதிகளுக்குள் ஊடுருவும் முஸ்தீபுகளில் இறங்கிவிட்டார் பிரபாகரன்.**

படையினர் புலிகளின் பலவீனத்தை கண்டறிந்து முழுப்படை பலத்தையும் ஒன்றுகுவித்து முன்னேறும் உத்தியைக் கையாளுகின்றனர்.

**புலிகளின் ஆட்பல பலவீனம் மற்றும் தமது ஆட்பலத்தை தக்கவைப்பதில் புலிகள் காட்டும் நிதானம், கவனம் என்பவற்றை அறிந்து, அதற்கேற்ப பாரிய படைப்பலம், படைக்கலப் பலத்துடன் முன்னேறுகின்றனர் படையினர்.**

**அதேபோல பாரிய படைபலத்துடன் முன்னேறும் படையினரின் பலவீனம் என்னவென்பதை பிரபாகரனும் கண்டறிந்து கொண்டார்.**

ஒவ்வொரு அங்குலத்தையும் கடக்க அங்கே தம் முழுப்பலத்தையும் ஒன்று குவித்தே படைகள் நகர்கின்றனர். அதனால் ஏற்கனவே கைப்பற்றிய பகுதிகளை பாதுகாக்க படையினரை நிறுத்த முடியாத நிலை இருக்கிறது.

20 ஆயிரம் படையினர் என்றால், அந்த 20 ஆயிரம் படையினரும் சண்டை முனையில் தான் நகர்ந்து கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

எனவேதான் ஏற்கனவே கைப்பற்றிய பகுதிகளில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட பொலிசார் தேவைப்பட்டனர். கடந்த 6.06.97க்கு முன்னர் நாட்டின் பலபகுதிகளில் இருந்தும் பொலிசார் திரட்டப்பட்டு வன்னிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

'வெற்றி நிச்சயம்' படை நடவடிக்கைக்கு பின்னர் வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையில் மொத்தம் 18 கிலோ மீட்டர் தூரம் படையினரின் கட்டுப்பாட்டில் வந்தது. அதிலே வவுனியாவில் இருந்து ஓமந்தைவரையான 10 கிலோ மீட்டர் பகுதி பாதுகாப்பு பலவீனமான பகுதியாகும். அப்பகுதிகளில் போதியளவு நிலைகொண்டிருக்கும் அளவுக்கு படைப்பலம் போதாது. படைப்பலம் எல்லாமே ஓமந்தையில் இருந்து புளியங்குளம் நோக்கிய நகர்வுக்கு குவிக்கப்பட்டிருந்தது.

அதனால்தான் அப்பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட கடற்படையினரும், பொலிசாரும் அனுப்பப்பட்டனர். சமீபத்திலும் பெருமளவான ஆண் பொலிசார் அங்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

**ஆக, கைப்பற்றிய பகுதிகளில் பலவீனமான பாதுகாப்பு நிலை இருக்கக்கூடியதாக புதிய பகுதிகளை கைப்பற்ற படைகள் முன்னேறும் பலவீனத்தை கண்டுகொண்டார் பிரபாகரன்.**

குறிப்பிட்ட பகுதிகளுக்குள் இரவோடு இரவாக புலிகளின் உளவுப் பிரிவினர் நோட்டம் பார்த்து தகவல்களை திரட்டிக் கொண்டனர்.

ஓமந்தையில் உள்ள படையினருக்கான விநியோக முகாம் தாண்டிக்குளத்தில் இருந்தது. மருத்துவ முகாமும், மருந்துப் பொருட்களும் இருக்கும் இடமும் கண்டறியப்பட்டது.

அதற்கேற்ப திட்டங்கள் தீட்டப்பட்டன. வவுனியாவில் இருந்து ஓமந்தைவரையான படையினரின்தொடர் சங்கிலியில் பலவீனமான முனையை அறிந்து அங்கே ஊடறுத்துத் தாக்குவதுதான் பிரபாகரனின் திட்டம்.

ஏற்கனவே பரந்தன்-கிளிநொச்சி இராணுவத் தொடர் சங்கிலியை உடைக்க புலிகள் நடத்திய தாக்குதல் போன்றதுதான் இதுவும்.

ஆனால் பரந்தன் தாக்குதலில் பூகோள நிலை சற்று ஆபத்தானது. தற்போதைய தாக்குதல் சாதகமான பூகோள நிலையில் திட்டமிடப்பட்டது.

நெடுங்கேணியில் இருந்து முன்னேற முயன்ற படையினரை தடுத்து நிறுத்திக் கொண்டு, ஓமந்தையில் இருந்து முன்னேறிய படைகளை உள்ளேவர அனுமதித்துக் கொண்டு, தனது அணிகளை இருமுனைகளால் வவுனியா நோக்கி நகர்த்தினார் பிரபாகரன்.




10.06.97 அன்று இருள்போர்வை பூமியை விட்டு விலகாத அதிகாலை 2.15 மணிக்கு புலிகளின் அணிகள் தங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறின.

வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலைக்கு கிழக்கே கணேசபுரம், சமயபுரம் ஆகிய ஊர்கள் இருக்கின்றன. இப் பகுதிகளில்தான் வவுனியா நகரின் பாதுகாப்புக்கான பங்கர் பாதுகாப்பு நிலைகள் உள்ளன. தொடராக பங்கர் அமைத்து இப்பாதுகாப்பு நிலைகள் உருவாக்கப்பட்டிருந்தன. அடிக்கடி இங்கே புலிகளின் தாக்குதல்களும் நடப்பதுண்டு.

6.06.97 அன்று புலிகளின் ஒரு அணி கணேசபுரம் பங்கர் நிலைகளைத் தாக்கிக் கொண்டே வவுனியா நோக்கி ஊடுருவியது.

புலிகளின் மற்றொரு அணி வவுனியாவுக்கு மேற்கே உள்ள பகுதிகள் ஊடாக ஊடறுத்து வந்தது.

இரு அணிகளும் தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் நகரில் உள்ளபடை நிலைகள் மீதும், மற்றும் பங்கர் நிலைகள் மீதும் ஷெல்கள் சரமாரியாக ஏவப்பட்டன.

ஏவப்பட்ட ஷெல்கள் வவுனியா நகரில் உள்ள ஜோசப் முகாம் உட்பட படைநிலைகள் மீது குறிவைத்து விழுந்தன.

ஷெல் அடிகள் மூலம் படையினரை பாதுகாப்பு தேடி பதுங்கச் செய்வது, பின்னர் பாய்ச்சல் நடத்துவது என்பதுதான் உத்தி.

புலிகள் எதிர்பார்த்ததுபோலவே ஷெல் மழைகளால் படையினரும், பொலிசாரும் பாதுகாப்பு தேடி பதுங்கிக் கொண்டனர். தூரத்தில் இருந்து புலிகள் ஆட்டிலறிகளால் தாக்குகிறார்கள் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். அதனால் புலிகளின் அணிகளை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

அதுதான் புலிகளுக்கு மிக வாய்ப்பாக இருந்தது. ஷெல் அடி நின்றதும் புலிகளின் அணிகள் பாய்ந்து சென்றன.

கணேசபுரப் பகுதி பங்கர் நிலைகள் தாக்கப்பட்டன. அதேநேரம் மேற்குப் புறத்தால் புகுந்த அணி தாண்டிக்குளம் விநியோகத் தளத்தை தகர்த்தது.

மருந்துக் களஞ்சியத்தை கைப்பற்றி அங்கிருந்த மருந்துகளும் எடுத்துக் கொள்ளப்பட்டதாக புலிகள் கூறுகின்றனர்.

தாண்டிக்குளம் விநியோகமுகாமில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டிலறிகளும் தம்மால் தகர்க்கப்பட்டதாகப் புலிகள் கூறியிருக்கின்றனர்.

தாக்குதல் ஆரம்பமாகி ஒரு மணி நேரத்துக்குள்ளேயே தாண்டிக்குளத்தில் இருந்து நொச்சிமோட்டை வரையான இரண்டு கிலோமீட்டர் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது. அதனால் ஓமந்தையில் இருந்து கிட்டத்தட்ட 20 ஆயிரம் படையினரும் வவுனியாவில் இருந்து தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தனர். பலமணி நேரமாக நான்கு புறமும் புலிகளால் சூழப் பட்ட பொறிக்குள் இருப்பதுபோன்றே அவர்கள் நிலை இருந்தது. ஆனாலும் 20 ஆயிரம் பேர் என்பதால் தம்மை சுற்றி வளைத்து தாக்கி அழிப்பது சாத்தியமில்லை என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தே இருக்கும்.

வவுனியா தாக்குதல் மூலம் புலிகள் நிரூபித்துள்ள கெரில்லா உத்தி 'ஈரடி முன்னால், ஓரடி பின்னால்.'

பாரிய படைபலம் முன்பாக தமது சக்திகளை பாதுகாக்க பின்வாங்கும் கெரில்லாக்கள், பின்னர் தமக்கு சாதகமான முனையில் படையினருக்கு பலத்த இழப்பை ஏற்படுத்த முடியும்.

எதிரியின் பலவீனமான முனையில் தாக்கவேண்டும் என்பது பகிரங்கமாகத் தெரிந்த கெரில்லாவிதிதான். அதனை படையினரும் அறிவர். எனவே பலவீனமான முனையை கண்டறிந்தால் மட்டும் போதாது, எதிரி எதிர்பாராத இடத்திலும் அடிக்க வேண்டும். அதிலேதான் கெரில்லா தலைமையின் வழிநடத்தும் புத்திசாலித்தனம், நுட்பமான திட்டமிடல் என்பவை முக்கிய பாத்திரம் வகிக்கின்றன.

**வன்னி நடவடிக்கையை முறியடிக்க புலிகள் எத்தகைய தந்திரோபாயங்களை வன்னிக் களத்தில் மேற்கொள்வர் என்று படையினர் எதிர்பார்த்தனரோ, அந்த எதிர்பார்புக்களுக்கு மாறாக திட்டமிடுதலில்தான் பிரபாகரனின் கெரில்லா போர் அனுபவம் வெளிப்பட்டுள்ளது.**

பாரிய படையெடுப்பை முரட்டுத்தனமாக தடுத்து தமது சக்தியை இழக்க புலிகள் முன்வரமாட்டார்கள் என்பது படைத்தரப்புக்கு தெரியும்.

**மரபுப் படையின் ஒரு உத்தி யாதெனில், தமக்கு சாதகமான களத்தில் எதிரியை வலுச்சண்டைக்கு இழுத்து பலத்தை அழிப்பதுதான்.**

யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிரின் போதும், தற்போது வன்னியிலும் படையினரும் அத் தந்திரத்தை மேற்கொள்ள முயன்றும்கூட புலிகள் அதற்குள் சிக்காமல் நழுவிவிட்டனர்.

எனவே நழுவி நழுவிச் சென்றுவிட்டு தமது பலவீனமான முனைகளில் புலிகள் தாக்கலாம் என்று படைத்தரப்பு எதிர்பார்த்தது.

கிளிநொச்சியிலோ, அல்லது மறுபடி பரந்தனிலோ புலிகள் தாக்கலாம். அதன் மூலம் முன்னேறும் படைகளை அச்சுறுத்த முயலலாம் என்றே படையினர் நினைத்திருக்கலாம்.

அதனால்தான் கிளிநொச்சியிலும் படைபலம் உறுதியாக்கப்பட்டது. புலிகள் எந்நேரமும் தாக்கக்கூடும் என்று உஷார் நிலையில் படையினர் வைக்கப்பட்டிருந்தனர்.

மணலாறு முகாமில் இருந்து படையினர் நெடுங்கேணிவரை முன்னேறியதால், மணலாறு முகாம் பாதுகாப்பு பலவீனமாகி இருக்கும் என்று கருதி புலிகள் அங்கும் அடிக்கலாம் என நினைத்து குறிப்பிட்டளவான படையினர் முகாம் பாதுகாப்பில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

அதனால்தான் நெடுங்கேணியில் இருந்து புளியங்குளம் நோக்கி முன்னேற போதிய படைபலம் இல்லாமல் படைத்தரப்பு தயங்க வேண்டியிருந்தது.

படையினரின் எதிர்பார்ப்பை உறுதி செய்வதுபோல கிளிநொச்சியிலும், மணலாற்றிலும் சிறு சிறு தாக்குதல்களை புலிகள் நடத்தி போக்குக் காட்டினர்.

**இறுதியாக படைத்தரப்பின் சகல எதிர் பார்ப்புக்களையும் பொய்யாக்கி விட்டு, படையினர் எதிர்பாராத முனையில் வவுனியாவில் புலிகள் பாரிய அதிரடித் தாக்குதலை நடத்தி முடித்திருக்கின்றனர்.**

இத்தாக்குதல் மூலமாக புலிகள் வெளிப்படுத்தியுள்ள செய்தி இதுதான்; பாரிய படைபலத்தால் கெரில்லாக்களை பின்வாங்கச் செய்யலாமே தவிர, அவர்களது தாக்குதல் பலத்தை அழித்துவிட முடியாது.

**இந்தத் தாக்குதல் மூலம் வன்னியில் தமது நடவடிக்கையை படையினர் கைவிட்டு திரும்பப்போவதில்லை. ஆனால் வன்னியில் கால்வைத்து நிலைகொள்வது யாழ்குடாநாட்டில் செய்ததுபோன்று சுலபமாக இருக்காது என்பதை உணரவே செய்வர்.**

காடுகள் சார்ந்த வன்னிக்களத்தில் புலிகளுக்கு ஏற்படும் இழப்புக்களைவிட பன்மடங்கு இழப்பு படையினருக்கே ஏற்படும். கைப்பற்றிய நிலப்பரப்புக்களின் கிலோமீட்டர் கணக்கைவிட படையினர் தரப்பு அதற்கு கொடுக்கும் விலை அதிக

*நாரதர்*

மாக இருக்கப்போகும் களமே வன்னிக் களமாகும்.

வன்னிக் களத்தில் புலிகள் நேரடி மோதலில் இறங்கமாட்டார்கள். ஆனால் தினமும் தாக்கி படையினரின் நிம்மதியைக் குலைக்கும் கெரில்லா தாக்குதல்களை தொடர்வார்கள்.

**'எதிரியிடம் இருந்து தப்பிக்கொள். ஆனால் எதிரியை தூங்கவிடாதே' என்ற கெரில்லா விதியை புலிகள் கடைப்பிடிக்க வன்னிக் காடுகள் கைகொடுக்கும்.**

எனவே வன்னிப்போர் குறும் போரல்ல. நெடும்போராக நீண்டு இலங்கையின் அரசியல் இராணுவ தலைவிதியையும், தமிழ் மக்களின் தலைவிதியையும் தீர்மானிக்கப்போகும் போராகும்.

புலிகளை 'நரிகள்' என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார். கெரில்லாப் போரில் பாய்ச்சல்களை புலிகளின் வேகத்துக்கும், எதிரியை ஏமாற்றும் திட்டமிடல்களை நரித்தந்திரத்துக்கும் ஒப்பிடுவது வழக்கம் என்பதால் அக் கூற்றை புலிகள் கௌரவக் குறைச்சலாக எடுத்துக்கொண்டிருக்கமாட்டார்கள்: சவாலாகவே எடுத்திருக்கின்றனர் என்று தோன்றுகிறது. ■

# அதிரடி அய்யாத்துரை



**பதவிகளை மாற்றியதால்** சிலருக்கு உட்காய்ச்சல்தான். என்ன செய்யிறது? வெளியில் சொல்லவோ முடியும்? இனப்பிரச்சனைக்கு அதிகாரப்பகிர்வு தாமதமானாலும், அமைச்சரவைக்குள் எண்ணிக்கையைக் கூட்டியிருப்பதும் இன்னொருவகையான அதிகாரப் பகிர்வுதானாம்! மணியைத்தான் தூக்கி 'டணார்' எண்டு எறிஞ்சுபோட்டினம். மினித்தேர்தலில் 'கணீர்' எண்டு சப்போட் பண்ணியிருந்தால் தொடர்ந்து ஒலித்திருக்கலாம். 'பெட்'டை தூக்கிக்கொண்டு தனியாக எலக்ஷன் கேட்டினம். இப்ப 'கிளீன் போல்ட்.' "பதவிபோனால் என்ன செய்வீர்கள்?" என்று திருபர் ஒருவர் கேட்க, மணி சிரித்தபடியே பதில் சொன்னாராம். சிலர் சிரித்துக்கொண்டே அழுவார்கள். சிலர் அழுது கொண்டே சிரிப்பார்கள். மணியின் சிரிப்பு இதில் எந்த ரகம் எண்டு உங்களுக்கே தெரியும்!

**கூட்டான கட்சிக்குள்** தலைமைக்குள் பிரச்சனை இல்லையாம். பின்னே என்ன தொண்டர்களுக்குள்ளேயோ பிரச்சனை? இருக்கிறவை எல்லாமே தலைவர்கள்தானே? தொண்டர்கள் எங்கே இருக்கினம்? அது சரியாருங்கோ உண்மையாகவே பிரச்சனையில்லையெண்டால், இந்தாங்கோ கூட்டான கட்சிக்கு ஒரு சவால்! "கூட்டானகட்சியின் சம்பகால நிலைப்பாடுகளுடன் எனக்கும் உடன்பாடு" எண்டு கிழக்கின் சிங்கத்தாரைக் கொண்டு அறிக்கைவிடுங்கோ பார்க்கலாம்! தலையிருக்க வால் ஆடலாமோ மிஸ்டர் சங்கரி?

**கிழக்கின் தனித்துவத் தலைவர்** சபையில் ஆற்றிய உரை அவரது வழக்கமான சாணக்கியத்தை பளிச் பண்ணிப்போட்டுது. உறுத்தலும் இல்லாமல் இல்லை. "ரெண்டு எழுத்தார் காக்கி உடையினரைத் தாக்கக்கூடாது. காக்கியினர் சிவில் நிர்வாகத்துக்கு உதவுகினம். எனவே அவையைத் தாக்கக்கூடாது" எண்டு வேண்டுகோள்விடுத்தார் தலைவர். சமீபத்தில் கிழக்கில் நடந்த பாலியல் வல்லுறவும் சிவில் நிர்வாகப் பணிக்குள்தான் அடக்கமோ? அதைப்பற்றியும் கொஞ்சம் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

**ஆகா.. அழகான காட்சி!** செல்லையா இராசதுரையும், ஐயா சிவசிதம்பரத்தாரும் ஒரே மேடையில் அருகருகே அமர்ந்து புன்னகைப் பூக்களைப் பரிமாறிக் கொண்ட காட்சி இருக்குதே... கண்கொள்ளாக் காட்சி. "செல்லையா கட்சியைவிட்டுச் செல்லைய்யா" எண்டு விரட்டி, தம்பிமாரைக் கூப்பிட்டு, அவரைத் துரோகி எண்டு சொல்லைய்யா எண்டு கர்ஜித்த சிங்கங்களை மறக்க முடியவில்லை. தம்பிமார் அதை நம்பி தேடித்திரிந்தபோதும் எப்படியோ அவர் தப்பியது வேறுகதை. தப்பித்தவறி ஏடாகூடாமாக நடந்திருந்தால் சமீபத்திய கண்கொள்ளாக் காட்சியைக் கண்டிருக்க முடியுமோ? அரசியலில் நிரந்தரத் துரோகியும் இல்லை, நிரந்தரத் தியாகியும் இல்லைப்போல கிடக்கு.

**யாழ்ப்பாணம்** பஸ்நிலையத்தை துப்புரவு செய்ய களத்தில் இறங்கியதாம் ஒரு இயக்கம். கூட்டிப் பெருக்கிப்போட்டு மீதியை நாளைக்குச் செய்யலாம் எண்டு போய்விட்டு மறுநாள் காலையில் வந்து பார்த்தால் இன்னொரு இயக்கம் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்ததாம். உடனே தகவல் சீருடையினருக்குப் பறந்ததாம். அவர்கள் வந்து சமரசம் செய்து சச்சரவைத் தடுத்தார்களாம். சபாஷ்! சரியான போட்டி. நகரசபை ஊழியர்கள்தான் தங்கள் வேலைக்கும் இயக்கங்கள் உலைவைச்சுப்போடுமோ எண்டு பயப்பிடுகினம்.

**கறுப்புச் சந்தையைப்** பற்றி எழுதியதற்கு தண்டனையோ தெரியேல்லை- யாழ்ப்பாணத்தில் கறுப்புச் சந்தையில் முரசையும் விற்பனை செய்கிறார்கள். 50 ரூபாய்க்கு வாங்கியதாக வாசகர் ஒருவர் கடிதம் போட்டுள்ளார். இதைப்போய் எங்கே சொல்லுறது? இன்றுவரை 'முரசு' நிறுவனம் ஊடாக முரசு யாழ் செல்லவில்லை என்பதைமட்டுமே யாம் சொல்ல முடியும்.

**விறைப்பான போக்கில்** செய்தித்தாள்கள் சென்றால் பதிலுக்கு உறைப்பாக நடக்க தர்மருக்குத் தெரியேல்லை எண்டு மேலிடத்துக்கு அதிருப்தியாம். அதுதான் தர்மரின் பழைய பதவிக்கு மங்களம் பாடி மங்களத்தையே பொறுப்பாகவும் போட்டாச்சாம்.

**திருக்கோணமலை** மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு தங்கத்துரைக்கு உப்பிடியோ விளம்பர ஆசை வரவேணும்? கொழும்பு தமிழர் பணிக்குழுக் கூட்டத்தில் அவர் ஒழுங்காகப் பேசவே சனம் விடேல்லை. ஆயிரக்கணக்கான மக்கள் அதுக்குச் சாட்சி. அப்படியிருந்தும் தான் பேசிய பேச்சு எண்டு பேசாத விடயங்களையெல்லாம் நல்ல பக்குவமாக எழுதி ஒரு பத்திரிக்கைக்குக் கொடுத்திருக்கிறார். ஒரு முழுப்பக்கத்தில் அவரது படத்துடன் பேச்சு வெளியானதைப் பார்த்த பலருக்கு செமத்தியான அதிர்ச்சி. கூட்ட உரைகள் பதிவு செய்யப்பட்டதால் அப்படித்தான் பேசினேன் எண்டும் அவர் சொல்லமுடியாது. பகிரங்கக் கூட்டத்தில் பேசாததையே பேசினேன் எண்டு சொல்லுறதுதான் கௌரவ உறுப்பினர் செய்யும் காரியமோ ஐயா? பதில் தந்தால் நன்றாக இருக்கும். ஆசிரியர் பிரசுரிக்கத் தயாராம் ஐயா!

அருமையான குட்டிக் கவிதை இது! (எழுதியவர்-பார்த்தசாரதி)

**கடவுளின் மௌனம்**

*"கடவுளின் மௌனம்*
*ஏன் தெரியுமா?*
*உண்மையைக் கூறினால்*
*கோயிலுக்கு*
*ஒருவரும் வரமாட்டார்*
*என்பதால்தானோ?"* ■

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## துரோகம் செய்யேன்

இந்தியப் படைக்கு எதிராகவும், இந்தியப் படையுடன் இணைந்து செயற்பட்ட இயக்கங்களுக்கு எதிராகவும் பல்வேறு தாக்குதல்களை நடத்திய தும்பன் பற்றி கடந்தவாரம் விபரித்திருந்தோம்.

ஏற்கனவே கட்டுவனில் இலங்கை இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் தும்பனுக்கு கையில் காயம் பட்டிருந்தது. தமிழ்நாட்டுக்குச் சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பினான்.

இந்தியப் படைக்கு எதிராக தும்பன் தனித்தும், தனது குழுவினருடன் சேர்ந்தும் தாக்குதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தும்பனின் தாக்குதல் குழுவில் இருந்த உறுப்பினர்கள் பலர் இந்தியப் படையின் சுற்றிவளைப்புக்களில் கொல்லப்பட்டனர்.

தும்பனையும் எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று இந்தியப் படையினர் தீவிரமாகத் தேடத் தொடங்கினார்கள்.

தும்பனின் அண்ணன் அமெரிக்காவில் இருந்தார். தும்பனின் உயிருக்கு எந்நேரமும் ஆபத்து நேரலாம் என்று அறிந்து தும்பனை தன்னுடன் அழைத்துச் செல்ல அவர் கொழும்புக்கு வந்தார்.

தும்பனுக்கு அது தெரியவந்தபோது தன் அண்ணனுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினான். போராளிகளின் உணர்வுகள், தன்னலங்கருதாத அர்ப்பணிப்புக்களுக்கு அக் கடிதமும் ஒரு எடுத்துக்காட்டு. அக் கடிதம் இதுதான்:

**"எனது அன்பின் அண்ணா அறிவது:**

நான் நலம். உமது நலத்துக்கும் எனது நல்லாசிகள். மேலும் நீங்கள் வந்திருப்பதை இன்றுதான் அறிந்தேன். ஒருபுறம் சந்தோசமாயும், மறுபுறம் வேதனையாகவும் இருக்கிறது. நீங்கள் இங்கு வருவது (யாழ்ப்பாணம்) நல்லதல்ல. தேவியிடம் கேட்டால் விளக்கமாகக் கூறுவா. நீ வந்து என்னைக் கூட்டிச் செல்லலாம் என்று மாத்திரம் நினைக்க வேண்டாம்.

உனக்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன். உன்னுடைய அன்பை மதிக்கிறேன். ஆனால் இவற்றைவிட தாம் கொண்ட இலட்சியத்துக்காக உயிரை விட்டார்களே எமது போராளிகள், அவர்களுக்கு மிக மிக மதிப்புக்கொடுக்கிறேன்.

என்னுடன் திரிந்தவர்களில் பலர் இறந்துவிட்டார்கள். கடைசியாக ஒரு நண்பன் இறந்து இன்னும் ஒருகிழமைகூட ஆகவில்லை. அவர்களுக்கும் உன்னைப் போல் அண்ணன்மார் உண்டு. ஆனால் அவர்கள் மண்ணை மறக்கவில்லை. எமது ஊரில் ஐந்துபேர் வெளிக்கிட்டு மூவர் இறந்துவிட்டனர். ஒருவர் (ஐயர்) படுகாயம். நான் ஒருவன்தான்மீதி. நிச்சயமாக அந்த மூவருக்கும் துரோகம் செய்யமாட்டேன். நான் இப்படிச் சொல்வதற்கு எவரும் காரணமல்ல. எவர்மீதும் பழி போடவேண்டாம்.

நீ அப்படி என்னுடன் கதைக்க வேண்டுமானால் யாழ்ப்பாணத்திற்கு வந்து நின்றுகொண்டு விலாசம் அனுப்பிவிட்டால் நான் வந்துசந்திப்பேன். ஆனால் வருவது கவனம். எல்லா இடங்களிலும் பிரச்சனை. நீ வருவதால் என்னுடைய எந்தமுடிவும் மாறப்போவதில்லை. நீ என்னைப் புரிந்துகொண்டிருப்பாய் என்று நம்புகிறேன்.

'இந்த இனிய தென்றல்கள்
புயல்களானது
வசந்தத்தின்மீது கொண்ட
விரக்தியினால் அல்ல;
அடக்குமுறையை
உடைத்தெறியவே!

*இப்படிக்கு*
*அன்பின் தம்பி.*

13.01.89ல் கீரிமலையில் இந்தியப் படையினருடன் நடைபெற்ற மோதல் ஒன்றில் தும்பன் பலியானான். பலியாகும் போதும் ஓர் இராணுவ உயரதிகாரியையும், ஒரு சிப்பாயையும் தனது துப்பாக்கிக்கு இரையாக்கினான் தும்பன். சொந்தப் பெயர் தம்பித்துரை மரியதுரை. பிறந்தது பண்டத்தரிப்பு. புலிகள் இயக்கத்தில் மேஜர் தரத்தில் இருந்தான்.





ஜலண்ட் காட்டூன்

## லோலோ

இந்தியப் படைக்கு எதிரான நடவடிக்கைகளில் தனிநபராகச் சென்று தாக்குதல் நடத்தியவர்களில் குறிப்பிடத்தக்க மற்றொருவர் லோலோ. யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த லோலோவின் சொந்தப் பெயர் சிறீதரன்.

கிளிநொச்சியில் இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்ட லோலோ அங்கிருந்து சாமர்த்தியமாகத் தப்பினான்.

அரைக்காற்சட்டையுடன்தான் அதிகம் திரிவது வழக்கம். பார்வைக்குப் பாடசாலை மாணவன் போன்ற தோற்றம். அந்தத் தோற்றம்தான் இந்தியப் படை வலைவீசித் தேடியபோதும் தப்பித்திரிய உதவியது.

இந்தியப் படையினருக்கும், அவர்களுடன் இணைந்து செயற்பட்ட இயக்க உறுப்பினர்களுக்கும் சிம்ம சொப்பனமாய் விளங்கினான் லோலோ.

இறுதியாக 1989ல் சுன்னாகத்தில் வைத்து இந்தியப்படையினரால் கொல்லப்பட்டான் லோலோ.

# புலிகளைச் சந்தித்த முஸ்லிம் தூதுக்குழு!

**அரசியல் தொடர்**
**அற்புதன்**

## புலிகளும்-முஸ்லிம் முன்னணியும்

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படும் என்று இந்திய அரசு அறிவித்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். ஆகிய இயக்கங்கள் மட்டுமே இந்திய அரசின் முடிவை ஏற்றுக்கொண்டன.

ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி., ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை தேர்தல் நடத்தப்படுவதை எதிர்த்ததுடன், போட்டியிடவும் மறுத்துவிட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை நம்பித்தான் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தும் முடிவை எடுத்தது இந்திய அரசு.

இக் கட்டத்தில்தான் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தூதுக்குழு புலிகளைச் சந்தித்துப் பேச தமிழ்நாட்டுக்குச் சென்றது.

முன்னாள் கல்வியமைச்சர் டாக்டர் பதியுத்தீன் மகமுத் தலைமையில் அத் தூதுக்குழு சென்றிருந்தது. சென்னையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் தூதுக்குழுவினர் சந்தித்தனர். ஆயினும் புலிகளுடன் சில உடன்பாடுகளைக் காண்பதே அவர்களது நோக்கமாக இருந்தது.

# வரலாற்றில் முதல் உடன்பாடு!

**1988 ஏப்ரல் 15,16,17ம் திகதிகளில் சென்னையில் விடுதலைப்புலிகளுக்கும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியினருக்கும் இடையே கலந்துரையாடல் நடைபெற்றது.**

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கு கிட்டு தலைமைதாங்கினார்.

அக் கலந்துரையாடலின் முடிவில் இருதரப்பும் இணங்கிக்கொண்ட விடயங்கள் தொடர்பாக கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

**இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழர் தரப்பும், முஸ்லிம் தரப்பும் முதன் முதலாக ஓர் உடன்பாட்டுக்கு வந்த விடயங்கள் என்றவகையில் அவை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.**

**அதுமட்டுமல்லாமல், விடுதலைப் புலிகளுடன் முதன்முதலாகப் பேச்சு நடத்திய முஸ்லிம் கட்சியும் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி தான்.**

## கூட்டறிக்கை

இணக்கம் காணப்பட்டதாக கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் இவைதான்:

1. இலங்கைவாழ் முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பேசுபவர்களாக இருப்பினும் அவர்கள் வேறுபட்ட தனித்துவத்தைக் கொண்ட, தமிழ்த் தேசியத்தினுள் உள்ளடங்கிய ஒரு இனக்குழு என்பதனையும், வடக்கு-கிழக்கு மாகாணம் ஏனைய தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகமாக உள்ளது போலவே, முஸ்லிம்களது பாரம்பரியத் தாயகமாக உள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

2. முஸ்லிம்களினதும், ஏனைய தமிழ் பேசும் மக்களினதும் அபிலாசைகள் பாதிக்கப்படாதவகையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு விடுதலைப் புலிகளும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் ஒத்துழைப்பு வழங்குவர்.

3. மாகாணசபைக்கான 13வது சட்டத் திருத்தத்தினுள் உள்ளடக்கிய சில சரத்துக்களும் இந்திய-இலங்கை உடன்பாட்டிற்கு முரணாகவுள்ளது. இந்நிலையில் 13வது அரசியல் திருத்த சட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலாது.

4. முஸ்லிம் மக்களது உரிமைகளைப் பாதுகாக்கவும், ஆட்சியதிகாரத்தை நியாயமான முறையில் பகிர்ந்துகொள்ளவும்கூடிய ஏற்பாடுகளைச் செய்யும்போது அத்தகைய நடவடிக்கைகள் தமிழ்பேசும் மக்களின் தாயகத்தின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் எதுவும் ஏற்படுத்தக்கூடாது.

5. மேற்கூறியதன் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணசபையில் ஏனைய தமிழ்பேசும் மக்களுக்குள்ள இன உரிமைகளையும், சலுகைகளையும், வாய்ப்பினையும், சுதந்திரத்தையும் அனுபவிப்பதற்கு வடக்கு-கிழக்கு மாகாணத்தை தமது தாயகமாகக் கொண்ட முஸ்லிம்கள் உரித்துடையவர்கள்.

6. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 33 வீதமான தொகையினர். வடக்கு-கிழக்கு ஒன்றிணைந்த மாகாணத்தில் முஸ்லிம்கள் 18 வீதமான தொகையினராக உள்ளனர். முஸ்லிம்கள் அதிகூடிய பாதுகாப்பைப் பெற்று, ஆட்சியதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெறக்கூடியவகையில், ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு தாயகத்தினுள் 30 வீதத்துக்குக் குறைவில்லாத வகையில் மாகாண சபையிலும் அமைச்சரவையிலும் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

7. வருங்காலத்தில் அரச காணிப்பங்கீடு முஸ்லிம்களுக்கு கிழக்கு மாகாணத்தில் 35 வீதத்துக்கு குறைவில்லாத வகையிலும், மன்னார் மாவட்டத்தில் 30 வீதத்துக்கு குறைவில்லாத வகையிலும் வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளில் 5 வீதத்துக்கு குறைவில்லாத வகையிலும் இருத்தல்வேண்டும்.

8. வடக்கு-கிழக்கு தாயகத்தில் ஒவ்வொரு மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் விகிதாசாரத்தின்படி பொதுத்துறை வேலை வாய்ப்புக்கான உரிமையை முஸ்லிம்கள் கொண்டிருப்பர்.

9. முஸ்லிம் மக்களது தனித்துவ உரிமைகள், அக்கறைகள் என்பவற்றை பாதிக்கக்கூடிய எதுவித சட்டவாக்கங்களும் அவற்றிற்கு முஸ்லிம் பிரதிநிதிகளின் 3/4 பெரும்பான்மையினர் சார்பாக வாக்களித்தால் மட்டுமே வடக்கு-கிழக்கு மாகாணசபையால் நிறைவேற்றப்படும்.

10. வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக ஒரு முஸ்லிம் முறையாக நியமிக்கப்பட்டாலன்றி அம் மாகாணசபையின் பிரதி முதலமைச்சராக ஒரு முஸ்லிம் நியமிக்கப்படுவதை உறுதி செய்யும்வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

11. தமிழ்பேசும் மக்களின் தாயகத்தை அபகரிக்கும் நோக்கத்துடனும், அங்குள்ள இனப் பரம்பலை மாற்றி அமைக்கும் வகையிலும், அவர்களது பொருளாதார, அரசியல் நிர்வாகப் பலத்தினை முறியடிக்கும் கொள்கையுடனும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட அரச குடியேற்றத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை களையும் வகையில் ஒரு குடியகல்வு கொள்கை உருவாக்கப்படுதல் வேண்டும்.

இவைதான் முக்கிய விடயங்கள். இந்தக் கூட்டறிக்கையில் புலிகள் அமைப்பின் சார்பாக சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு), முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி சார்பாக எம்.ஐ.எம்.மொகிதீன் ஆகியோர் கையொப்பமிட்டனர். (மொகிதீன் தற்போது முஸ்லிம் காங்கிரசின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக இருக்கிறார்).

## மிரட்டல்

சென்னையில் பிரசிடெண்ட் ஹோட்டலில்தான் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியினர் தங்கியிருந்தனர்.

அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு பரந்தன் ராஜன் தலைமையிலான ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தைச் சேர்ந்த சிலர் சென்றனர்.

அவர்களைப் புன்னகையுடன் வரவேற்ற மு.ஐ.விடுதலை முன்னணி பிரமுகர்களுக்கு மறுநொடியே அதிர்ச்சி காத்திருந்தது.

வந்தவர்கள் மிரட்டும் தொனியில் பேசினார்கள். "புலிகளுடன் மட்டும்தான் பேச்சு நடத்த வந்தீர்களா? அப்படியானால் புலிகளிடம் மட்டும்தான் ஆயுதம் இருப்பதாக நினைப்போ? நாங்கள் நினைத்தால் எதனையும் செய்வோம். எங்களிடமும் ஆயுதம் இருக்கிறது." என்று எச்சரித்தனர்.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியினர் ஆடிப்போவார்கள் என்று நினைத்து மிரட்டிய ஈ.என்.டி.எல்.எஃப்.பினர் ஏமாந்து போயினர்.

அவர்கள் மிக நிதானமாக, "தம்பிமாரே நாங்கள் மிரட்டல்களுக்குப் பயந்தவர்கள் அல்ல. நீங்கள் ஆயுதம் ஏந்தியிருக்கிறீர்கள். ஆனால் நாங்களும் ஆயுதம் ஏந்தினால் ஆயுதம்தர எத்தனை நாடுகள் இருக்கிறது தெரியுமா?" என்று கேட்டனர்.

ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர்கள்தான் ஆடிப்போனார்கள். வந்தவழியே திரும்பிச் சென்றனர்.

## திடீர் தாக்குதல்

யாழ்ப்பாணம் மல்லாகத்தில் 05.02.88 இல் இந்தியப் படையினர் ரோந்து சென்றுகொண்டிருந்தனர். முன்கூட்டியே அவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்த புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள்.

20க்கு மேற்பட்ட இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் இழப்புக்கள் இல்லை.

தாக்குதலை முடித்து புலிகள் சென்ற பின்னர் இந்தியப் படை தம் கோபத்தை மக்கள்மீது திருப்பியது.

**அப்பாவி மக்கள் ஏழுபேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 30 வீடுகள் எரியூட்டப்பட்டன.**

09.02.88 அன்று மட்டக்களப்பு ஆயித்தியமலையில் நடைபெற்ற சம்பவம் ஒன்று:

புலிகளைத் தேடும் வேட்டையில் பதுங்கி இருந்தனர் இந்தியப்படையினர். யாரோ கொடுத்த தவறான தகவலின்படி அவர்கள் காத்திருந்தனர்.

மினிபஸ் ஒன்று தூரத்தில் வருவதைக் கண்ட இந்தியப் படையினர் புலிகள்தான் அதில் வருவதாகக் கற்பனை செய்தனர்.

மினிபஸ்ஸை நோக்கி மோட்டார் ஷெல் ஏவப்பட்டது. அதன்பின்னால் வந்து கொண்டிருந்த போக்குவரத்து சபை பஸ்சும் சேதமானது. இரண்டு பொதுமக்கள் பலியானார்கள். ஆறுபேர் படுகாயம் அடைந்தனர்.

## முல்லை முற்றுகை

1988 மே மாதம் 23ம் திகதி பதினைந்தாயிரம் இந்தியப்படையினர் கனரக வாகனங்கள் சகிதம் முல்லைத்தீவில் ஒரு பாரிய நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

முல்லைத்தீவில் உள்ள அலம்பில் என்னும் இடத்திலிருந்த புலிகளின் பிரதான முகாமைச் சுற்றிவளைத்துத் தாக்குவதுதான்திட்டம்.

கனரக வாகனங்களுடன் தரைப்படை நகர, விமானப்படையினரும் தாக்குதலில் ஈடுபட்டனர்.

காடுகளைத் தீயிட்டு அழிப்பதற்காக பெற்றோல் பவுசர்களும் இந்தியப் படையினரால் கொண்டு செல்லப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அலம்பில், நெடுங்கேணி, நாயாறு, கொக்குத் தொடுவாய், தண்ணீரூற்று, வற்றாப்பளை, பட்டிக்குடியிருப்பு, வெடிவைத்தகல், செம்மலை, ஒதியமலை, ஒட்டிசுட்டான், புளியங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புக்கள் இந்தியப்படையினரால் படுமோசமாகப் பாதிக்கப்பட்டன.

முன்னேறிய படையினரை காடுகள் சார்ந்த பகுதிகளில் வைத்து புலிகள் எதிர்த்துப் போரிட்டனர்.

இரண்டு வாரங்களாக நடைபெற்ற கடும் சண்டையில் இந்தியப் படையினர் தரப்பில் 45 பேர்வரை பலியாகினர். புலிகள் தரப்பில் மூன்றுபேர் மட்டுமே பலியாகினர்.

'கத்தி எடுத்தால் இரத்தம் காணாமல் உறைக்குள் திரும்பாது' எனப் பேரெடுத்த கூர்க்கா படையினர் காடுகளுக்குள் திசை தெரியாமல் தடுமாறிப் புலிகளின் துப்பாக்கிகளுக்கு பலியாகிக்கொண்டிருந்தனர்.

(தொடர்ந்து வரும்)

# "சாவுகள் சரித்திரமாகும்!"

## போர்க்களத்திலிருந்து பிரபா கடிதம்

**இந்தியப் படையினர் வன்னியில் பாரிய படையெடுப்பை மேற்கொண்டிருந்தபோது காட்டுக்குள் இருந்த பிரபாகரன் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு எழுதிய உருக்கமான கடிதம் இது:**

அண்ணா!

இரத்தமும்-கண்ணீரும் படிந்த எமது மக்களின் சோகவரலாறு இன்னும் முடிவின்றித் தொடர்கிறது. சமாதானத்தின் முகமூடியுடன் தமிழீழத்தில் சாவு நர்த்தன மாடுகிறது.

இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக இனப்படுகொலை நடக்கிறது. எமது மக்கள் நெருப்பின் மத்தியில் துவண்டு வாழ்கிறார்கள். நாம் மரணத்தின் விளிம்பில் நின்று எமது இலட்சியப் போரைத் தொடர்ந்து நடத்துகிறோம்.

இந்தப்பெரிய அக்கிரமத்தை முழு நாகரிக உலகமுமே கைகட்டிப் பார்த்து நிற்க- ஈழத் தமிழினத்துக்காக போர்க்கொடி உயர்த்தி நிற்கும் உங்களையும், உங்கள் கழகத்தின் கண்மணிகளையும் உங்கள் பின்னால் மலைபோல அணிதிரண்டு நிற்கும் தமிழக மக்களையும் நாம் உளப்பூர்வமாகப் பாராட்டுகிறோம்.

தமிழனின் வீரமரபுக்கு இலக்கணமாக, தமிழனின் வீரவரலாற்றுச் சின்னத்துடன் எமது இயக்கம் உதித்தது. இரத்தமும், வியர்வையும் சிந்தி ஒரு கட்டுப்பாடான விடுதலை இயக்கத்தைக் கட்டி எழுப்பி கடந்த பன்னிரண்டு ஆண்டாக நாம் ஆயுதமேந்திப் போராடி வந்தோம்.

இன்று- ஆட் தொகையிலும் ஆயுத பலத்திலும் எம்மைவிட நூறுமடங்கு வல்லமையுடைய மிகப்பெரிய இராணுவ அழுத்தத்தை நாம் ஈழத்தில் எதிர்கொண்டு நிற்கிறோம்.

ஒரு புறம் இந்தியப்படை, மறுபுறம் சிறிலங்காப்படை, இன்னொரு புறத்தில் எமது சகோதர கூலிப்படைகள் என்று நாலா புறத்தில் இருந்தும் நாம் வேட்டையாடப்படுகிறோம்.

நாம் இந்தியாவின் எதிரிகளல்லர். இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளுக்கு எதிரானவர்களும் அல்ல.

இனப்படுகொலைக்கு ஆளான ஈழத் தமிழ்மக்களைப் பாதுகாத்து, அவர்களின் விடிவுக்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடி வந்ததைத்தவிர நாம் இந்தியாவுக்கு எந்தத் துரோகத்தையும் செய்துவிடவில்லை.

விடுதலைப் புலிகளை அழித்துவிடுவதால் தமிழ் மக்களின் நலன்கள் எந்தவகையிலும் பேணப்படப்போவதில்லை.

ஒரு மக்கள் சமுதாயத்தின் சுதந்திர தாகத்தை, அவர்களது ஆன்ம எழுச்சியை ஆயுதப் படைகளைக் கொண்டு அடக்கிவிட முடியாது. இது மனித வரலாறு காட்டும் உண்மை.

எமது சாவுகள் புதியசரித்திரமாய் புதிய வேகத்துடன் புத்துயிர்பெறும். புதிய புலிகள் பிறந்து தமிழீழத் தாயகத்தின் சுதந்திர தீபத்தை ஏற்றிவைப்பா.



தமிழீழ மக்களின் ஒரே ஒரு பாதுகாப்பு அரணான எம்மை ஒழித்துக்கட்டுவதால் எமது மக்களின் எதிர்காலம் பெரும் ஆபத்துக்கே உள்ளாகும்.

ஈழத் தமிழர்களின் பாதுகாப்புக் கவசத்தை உடைத்தெறிந்து, அவர்களை நிராயுதபாணிகளாக்கி, இனவாத அரக்கன் முன்பாக பலிக்கடாவாக நிறுத்திவைப்பதுதான் இந்திய அரசின் கொள்கையா? அப்படி என்றால் அது தமிழ் மக்களுக்குச் செய்யப்படும் துரோகம் ஆகாதா?

நீங்கள் மேற்கொள்ளும் பேராராட்டங்கள் ஈழத் தமிழரின் உரிமைக்குரலாக, சத்தியத்தின் சாட்சியாக அமையட்டும். தமிழ்நாட்டின் எழுச்சி டில்லி ஆட்சியாளரின் மனச்சாட்சியை உறுத்தும்."



படிப்பகம்

www.padippakam.com

# நகர்ந்து செல்லும் யுத்தத்தேர்

## அரோகரா போடும் தமிழ்க் கட்சிகள்!

**அலசுவது- இராஜதந்திரி**

வன்னியில் யுத்தம் சூடுபிடித்துள்ள இத் தருணத்தில் பாராளுமன்றத்திலும் இன்றைய நாட்டு நிலவரம் தொடர்பாகக் காரசாரமான கருத்துக்கள் கடந்தவாரம் வெளியிடப்பட்டிருந்தன.

அவசரகாலச் சட்டம் தொடர்ந்து நீடிக்கப்படுவதும், மாதாந்தம் பாராளுமன்றம் அதனை நீடிக்கும் பிரேரணையை நிறைவேற்றுவதும் வழக்கமாகும்.

ஆளும் தரப்பும்- எதிர்க்கட்சியும் காரசாரமாக மோதிக்கொள்ளும் விவாதங்களும் அங்கு அரங்கேறுவதையும் காணமுடியும்.

கடந்த அவசரகால சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என்பதையே வலியுறுத்தியிருந்தனர்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியபோதும், எவ்வாறு முடிவுக்கு கொண்டுவருவது என்பது தொடர்பான திட்டவட்டமான கருத்துக்கள் வெளியிடப்படவில்லை என்பதையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

**யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேச வேண்டும் என்ற கருத்துக்கள் ஒரு வாய்ப்பாடுபோல சொல்லப்படுகின்றனவே தவிர அதற்கான சூழ்நிலைகள் பற்றி யாரும் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்களில் ஒருவரும், ஜனாதிபதி, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், திரு.லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருக்கு மிக நெருக்கமானவருமான கலாநிதி நீலன் திருச்செல்வம் அரசும், புலிகளும் பேச்சு நடத்த வேண்டும். சமாதானம் கானல் நீராக மாறிவருகிறது. அரசு-புலிகள் பேச்சுவார்த்தை மூலமே சமாதானம் எட்டப்படும் என்று கூறியிருந்தார்.

கலாநிதி நீலான் திருச்செல்வம் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்கள் பலர் இதையே திருப்பித் திருப்பி கூறிவருகிறபோதும், அவர்களது அரசியல் நிலைப்பாடுகள் அரசின் யுத்த வியூகங்களுக்கு கொம்பு சீவி விடுகின்ற வகையிலேயே அமைந்திருக்கக் காணப்படுகின்றன.

புலிகளுடன் பேசினால்தான் சமாதானம் கிட்டும் என்று கூறிக்கொண்டே அரசுடன் அரசியல் தீர்வு தொடர்பாக பேசிக்கொண்டிருக்கின்றார்கள் கூட்டணித் தலைவர்கள்.

**அரசியல் தீர்வு தொடர்பாக புலிகளுடன் பேசும் அவசியம் கிடையாது. புலிகளுக்கு இராணுவத்தீர்வுதான். ஏனைய தமிழ்க் கட்சிகளுடன்தான் அரசியல் தீர்வு பற்றி பேசுவது என்ற அரசின் நிலைப்பாடு வெளிப்பார்வைக்கு புலிகளுக்கு எதிரானதாகத் தோன்றினாலும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பலவீனப்படுத்தும் திசையில் சென்றுகொண்டிருக்கிறது.**

இன்று தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பலம்பொருந்திய அரசியல்-இராணுவ சக்தியாக புலிகளே இருக்கின்றனர் என்ற யதார்த்தத்தை எவரும் மறுக்கவியலாது.

தமிழீழக் கோரிக்கையை கைவிட்டதற்கும் அப்பால் 'பாரம்பரிய தாயகக் கோட்பாடு' என்பதைக்கூட வலியுறுத்தும் திராணியைக்கூட தமிழ்க் கட்சிகள் இழந்துவிட்டன.

புலிகளை அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தும் அவசியம் கருதியே அரசு ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் அரசியல் தீர்வு பற்றி பேசுவதாக காட்டுகிறதேயல்லாமல், அக் கட்சிகளின் கோரிக்கைகளையும் உதாசீனம் செய்தே வருகிறது.

அது நாடு முழுவதற்குமான ஒரு பிரச்சனையாகும். தேர்தல் முறை மாற்றப்படும்போது தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவம் பலவீனமாகாதவகையில் செய்யப்படும் ஏற்பாட்டுக்கு தமிழ் முஸ்லிம் கட்சிகள் ஆதரவளிக்கலாம்.

**ஆனால் தமிழர் தரப்பை பலவீனமாக்கிவிட்டு அரைகுறைத் தீர்வுகளைத் திணிக்கும் அரசியல்-இராணுவ முஸ்தீபுகளை முறியடிக்க வேண்டுமானால், முதலில் அடிப்படையான அரசியல் கோரிக்கைகள் பற்றியே பேசியாகவேண்டும்.**



**அரசியலமைப்பு சீர்திருத்தம் என்ற விடயத்தையும், அரசியல் தீர்வு என்ற விடயத்தையும் ஒன்றோடு ஒன்றுபோட்டு அரசு குழப்பிக்கொண்டிருக்கிறது.**

அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பது முழு நாட்டுக்குமானது. அரசியல் தீர்வு என்பது இனப்பிரச்சனைக்கானது.

ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றம், தேர்தல் முறை போன்ற பிரச்சனைகள் அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கு உட்பட்டவையாகும்.

தமிழ் பேசும் மக்களின் போராட்டம் அரசியல் தீர்வை வேண்டி நிற்கிறது. முதலில் அத் தீர்வை கண்டுவிட்டு பின்னர் அரசியலமைப்பு சீர்த்திருத்தம் பற்றி ஆற அமர இருந்து ஆராயலாம் என்பதே தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடாக அமைய வேண்டும்.

இரண்டையும் ஒன்றாகப் போட்டுக் குழப்புவதால் விவாதங்கள் நீடிக்கும். காலம் இழுபட்டுச் செல்லும். அரசியல் தீர்வுக்கு அப்பாற்பட்ட பிரச்சனைகளில் ஏற்படும் இணக்கங்களை அரசியல் தீர்வு முன்னேற்றமாக சித்தரிக்கவும் ஆட்சியாளர் முயல்வர். தற்போது அவ்வாறான முயற்சிகளில்தான் ஆளும் தரப்பு தீவிரம் காட்டுவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை நடத்தி முடிக்கத் தேவைப்படும் காலகட்டத்தை வரையறுத்துவிட்டு அதற்கேற்ப விவாதங்களை இழுத்தடித்து கொண்டுசெல்வது போன்றே நிலவரங்கள் தென்படுகின்றன.

இந்த ஆண்டுக்குள் புலிகளை ஒழித்துக் கட்டிவிடுவோம் என்று ஜனாதிபதியும், பிரதிபாதுகாப்பு அமைச்சரும் சூளுரைத்துள்ளனர். இந்நிலையில் இவ்வருட இறுதிக்குள் அரசியல் தீர்வு என்று வெளிநாட்டமைச்சரும், நீதியமைச்சரும் கூறியிருக்கின்றனர். ஒன்றும் ஒன்றும் இரண்டு என்ற சாதாரண கணக்குக் கூட தமிழ்க் கட்சிகளுக்கு தெரியாமல் இருக்க முடியாது.

முதலில் இராணுவத்தீர்வு அதன்பின்னர் அரசியல் தீர்வு என்பதே அரசின் கொள்கையாகும்.

யுத்தத் தேரை நகர்த்திச் செல்ல தமிழ்க் கட்சிகளின் அரோகரா கோஷம் அரசுக்கு தேவைப்படுகிறது.

யுத்தத் தேரை நகர்த்திச் செல்லவும் உதவிக்கொண்டே, புலிகளுடன் பேசினால்தான் சமாதானத்தை எட்டமுடியும் என்று கலாநிதி நீலன் போன்றவர்கள் உரையாற்றுவது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடுவது போன்றே இருக்கிறது.

**புலிகளுடன் பேசினால்தான் சமாதானத்தைக் காணமுடியும் என்று கூறுவது உண்மையானால் போரை நிறுத்தினால்தான் அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களில் கலந்து கொள்ள முடியும் என்று கூட்டணியோ, ஏனைய தமிழ்க் கட்சிகளோ உறுதியாகத் தெரிவிக்கலாம்.**

அவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொண்டால் போரை நடத்தியபடி அந்தப் போருக்கு அரசியல் முலாம் பூசும் முயற்சிகளுக்காயினும் தமிழ்க் கட்சிகள் துணைபோகாமல் இருக்க முடியும்.

**புலிகளுடன் பேசாமல் பிரச்சனை தீராது என்பதும், யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் என்பதும் சாதாரண மக்களுக்கு தெரிந்த உண்மைகளாக உள்ளன. அம் மக்களை கவருவதற்காக தாமும் அவற்றுக்காகப் பரிந்து பேசுவதுபோல அரசியல்வாதிகள் காட்டிக் கொள்கின்றனர்.**

அதுமட்டுமல்லாமல் இன்றைய யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்ற அரசின் வாதத்துக்கு அரசுடன் இணைந்து நிற்கும் தமிழ்க் கட்சிகள்தான் சாட்சிகளாகவும் உள்ளன. ஆனால் வடக்கு-கிழக்கில் உள்ள மக்களின் உயிர் உடமைகள் பற்றிய எவ்வித அக்கறையுமின்றியே யுத்த அணுகுமுறைகள் அமைந்து வருகின்றன.

வடக்கிலும், கிழக்கிலும் ஷெல்கள் பொழிகின்றன. கிழக்கில் குடியிருப்புக்களை நோக்கி எறிகணைகள் சரமாரியாக ஏவப்படுகின்றன.

மக்கள் நடமாட்டங்களுக்கு படையினர் தாம் நினைத்தபடி கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். **தமிழ் மக்களை விடுவிக்கும் யுத்தம் என்பது, தமிழ் மக்களை நிம்மதி, கௌரவமான வாழ்க்கை, உயிர் உத்தரவாதம் என்பவற்றில் இருந்து விடுவிக்கும் யுத்தமாக மாறியுள்ளதோ என்றுதான் அங்கலாய்க்க வேண்டியுள்ளது.**

இந்நிலையில் மேலும் தமிழர் தரப்பை பலவீனப்படுத்தும் யுத்தத்தை தொடர அரசுக்கு வாய்ப்பளித்துக்கொண்டே சமாதானம் பற்றியும், புலிகளுடன் பேசுவது பற்றியும் கூட்டணி உட்பட தமிழ் அரசியலாளர்கள் பேசுவது அர்த்தமற்ற வாய்வீச்சுக்களாகவே அமைந்துள்ளன. அந்த வாய் வீச்சுக்களை பத்திரிகைகள் வாயிலாக அறியும் மக்களும் முன்னைய காலங்கள் போல் அல்லாமல் அவற்றின் போலித்தனங்களை உணர்ந்தவர்களாகவே உள்ளனர்.

## அத்திவாரம் இல்லாத மேற்கட்டுமானம்

**அரசு தனது அரசியல்-இராணுவ வெற்றிகளை நோக்கிய சதுரங்க ஆட்டத்தில் தமிழ்-முஸ்லிம் கட்சிகளை தனது விருப்பப்படி நகர்த்தியாடக்கூடிய காய்களாக மாற்றியிருக்கிறது.**

தமிழ்க் கட்சிகளும் சுதந்திரமாக செயற்படும் முதுகெலும்பை இழந்து, அரசு கீறும் கோட்டுக்குள் இருந்தே தமது அரசியலை நடத்திவருகின்றன.

தேர்தல் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் தமிழ்-முஸ்லிம் கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நீதியமைச்சர் முன்பாக சமீபத்தில் பேச்சு நடத்தியிருந்தனர்.

**தேர்தல் முறை பற்றி பேசுவதோ, ஆராய்வதோ தவறல்ல. ஆயினும் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தின் உயிர் நாடியான விடயம் தேர்தல் முறை பற்றிய பிரச்சனை அல்ல. தமிழ் மக்களின் தலை விதியை நிர்ணயம் செய்யக்கூடிய அடிப்படை பிரச்சனைகளைப் பற்றியே முதலில் பேசி முடிக்க வேண்டியிருக்கிறது.**

தேர்தல் முறை பற்றிப் பேசுவதையும், அதில் ஏற்படும் இணக்கங்களையும் அரசியல் தீர்வு முயற்சியில் காணப்படும் முன்னேற்றம்போல அரசு சித்தரிக்க முயல்வதை காணமுடிகிறது.

தேர்தல் முறை பற்றி எப்போது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளலாம்.

அத்திவாரம் இல்லாமல் மேல் கட்டுமானங்கள் எழுப்ப இயலாது. முதலில் அத்திவாரத்தை உறுதியாக்கிக் கொள்ள தமிழ்க் கட்சிகள் முயலவேண்டும்.

**தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் வடக்கு-கிழக்கு. அதனை பிரிக்க முடியாது. பாரம்பரிய தாயகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடியதும், அங்கு தமிழ் பேசும் மக்கள் போதுமான சுயாட்சி அதிகாரத்தை கொண்டிருக்கக்கூடியதுமான தீர்வே அடிப்படையானதாகும். அந்த அத்திவாரத்தை போட்டுவிட்டால் தேர்தல் முறைகள் உட்பட ஏனைய விடயங்கள் மேல் கட்டுமானம் போன்றவைதான். அவற்றில் விட்டுக் கொடுப்புக்கள், நெளிவு சுழிவுகள் பற்றி பின்னர் பேசிக்கொள்ளலாம்.**

தமிழ் பேசும் மக்களின் தரப்பிலிருந்து அவர்களின் நலனில் அக்கறைகொண்ட நேர்மையான அரசியல் அணுகுமுறையும், பேச்சுவார்த்தைக்கான திசைவழியும் மேற்கண்ட வகையில்தான் அமைந்திருக்க வேண்டியதாகிறது.

ஆனால் தமிழ்க் கட்சிகளோ அரசு கீறும் கோட்டினை மீறமுடியாதவையாக அக் கோட்டுக்குள் இருந்தே செயற்படுவதால் சுதந்திரமான அணுகுமுறைகளை வகுக்க முடியாமல் உள்ளன.

## 'பழைய குருடி கதவைத் திறவடி'

சுவையான சங்கதிகள் எல்லாம் அரசியல் அரங்கில் நடந்துகொண்டிருக்கின்றன. தமிழ்க் கட்சிகள் பிஸியாக நடித்துக்கொண்டிருக்கின்றனர்.

இயக்கம்: நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

தயாரிப்பு: அரசாங்கம்.

சமீபத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ்-முஸ்லிம் கட்சிகள் நீதியமைச்சர் பீரிஸ் முன்னிலையில் சந்தித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் எவ் வகையிலும், எக்கட்டத்திலும் ஒத்துழைக்கப் போவதில்லை என்பதில் உமி முனையளவு கூட அரசுக்கு சந்தேகம் கிடையாது.

அப்படியிருந்தும் தமிழ்-முஸ்லிம் கட்சிகளை ஐக்கியதேசியக் கட்சியுடன் அரசு பேச வைப்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ்-முஸ் லிம் கட்சிகள் மூலமாக இனப்பிரச்சனைத் தீர்வுக்கு எதிரான கட்சி என்று அம்பலப் படுத்துவதுதான் அரசின் நோக்கம்.

அரசு இந்த விடயத்தில் முன்னுக்குப் பின் முரணாக பேசுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைத்தால் என்ன ஒத்துழைக்கா விட்டால் என்ன தீர்வை கொண்டுவந்தே தீருவோம் என்றும் சொல்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியை ஒத்துழைக்கச் செய்யுங் கள் என்று தமிழ்-முஸ்லிம் கட்சிகளையும் அக் கட்சியுடன் பேசவைக்கிறார்கள்.

உண்மையாகவே ஐக்கிய தேசியக் கட்சி யின் ஒத்துழைப்பை அரசு விரும்பினால் அக் கட்சியை சீண்டும் விதமான பேச்சுக் களைத் தவிர்த்திருக்கும். 'நீ வந்தால் என்ன வராவிட்டால் என்ன நான் செய்து காட்டு வேன்' என்று பேசுவது "அப்படியா சரி பார்க்கலாம்" என்று அக்கட்சியும் மல்லுக் கட்டி நிற்கவே தூண்டிவிடும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசியல் தீர்வில் அரசுடன் ஒத்துழைக்கும் எண்ணம் கனவிலும் கிடையாது. இன்றைய தலைவர் ரணில் அதிரடியாக பேசி தன் மனதில் உள்ளதை வெளியே போட்டுடைக்கக் கூடிய வரல்ல. ஆனால் நாசூக்கான தந்திரசாலி. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுதான் அவரது ஸ்டைல்.

ஆனால், எங்கே ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் தீர்வுக்கு ஒத்துழைத்து தொலைத்து நல்லபெயர் சம்பாதித்து விடுமோ என்று ஆளும்தரப்பு பயப்படுவது மாதிரித் தெரி கிறது. அதுதான் சீண்டல்கள் விடப்படு கின்றனவோ என்று தோன்றுகிறது.

இவை ஒருபுறம் இருக்க, தமிழ்-முஸ்லிம் கட்சிகள் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சி 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதையாக விளையாட்டுக் காட்டியிருக்கிறது.

தமிழ்-முஸ்லிம் கட்சிகள் தமக்குள் ஒரு உடன்பாட்டுக்கு வரட்டும் பின்னர் அதுபற்றிய எமது நிலைப்பாட்டைச் சொல்கிறோம் என்று பந்தை தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் கோட்டுக் குள் அடித்து விட்டிருக்கிறது.

இது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா வின் தந்திரம். பிரேமதாசாவை ஐக்கிய தேசியக் கட்சி எப்போதாவதுதான் நினைவு கூர்கிறது. ஆனால் இனப்பிரச்சனை விடயத் தில் பிரேமதாசாவின் இழுத்தடிப்பு தந் திரத்தை இன்றைய தலைமையும் மறக்காமல் கையில் எடுத்திருக்கிறது.

பிரேமதாசாவிடம் இரண்டுவிதமான அரசியல் போக்குகள் இருந்தன. ஒன்று அதிரடி அரசியல். அடிக்கு அடி கொடுத்து புகுந்து தூள் பண்ணுவது. இரண்டாவது தேவைக்கேற்ப தேவையானவர்களை அணைத்து தட்டிக் கொடுத்து தக்கன பெறுவது.

பிரேமாவின் போக்கில் இரண்டாவது போக்கை ரணிலும் அரசியலில் கைக் கொள் கிறார். இனப்பிரச்சனை விடயத்திலும் பிரேமா வின் தந்திரத்தையே கையில் எடுத்திருக்கிறார்.

தமிழ்-முஸ்லிம் கட்சிகள் ஒருபோதும் ஒன்று சேரப்போவதில்லை என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் பிரித்தாளும் தந் திரத்தில் பிரியத்தோடு பிரமதாசா காலத்தில் அடித்துவிடப்பட்ட பந்துதான் அது.

தமிழ் பேசும் மக்கள் தென்னிலங்கைக் கட்சிகளிலும் மாறிமாறி வந்த அரசாங்கங் களிலும், நம்பிக்கை இழந்துதான் 'வாழ வாழவிடு அல்லது எங்களைத் தனியாகப் போகவிடு' என்று தமிழீழக் கோரிக்கைக் காக போராட ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டத்தின் நியாயத்தை தென்னிலங்கைக் கட்சிகள் உணர்ந்தால், "நீங்கள் பிரிந்து செல்ல வேண்டாம். ஒன்றாக வாழ முடியும். உங்கள் பிரச்சனைக்கு இதோ எங்கள் தீர்வு. வாருங்கள், தேசிய நீரோட்டத் தில் கலந்துகொள்ளுங்கள்" என்று நம்பிக்கை யூட்ட வேண்டிய கடப்பாடு அவற்றுக்கே உண்டு.

'பிரிந்து செல்வதே முடிவு என்று தமிழ் பேசும் மக்கள் நம்பித்தான் போராட்டம் இத்தனை தூரம் விரிந்தது. பிரிந்த செல்வது அவசியமில்லை என்றால் அதற் கேற்ற தீர்வை முன்வையுங்கள் பரிசீலிக்கலாம்' என்பதுதான் தமிழர் தரப்பு நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

அதைவிடுத்து இதுவரை காலப் போராட்டத்தையே கேலி செய்வதுபோல தமிழ்-முஸ்லிம் கட்சிகள் தங்கள் கோரிக் கையை சொல்லட்டும், பின்னர் கொடுக்கலாமா கூடாதா என்று பார்க்கலாம் என்றால், இது என்ன கொடுக்கல் வாங்கல் பேரமா?

ஐக்கிய தேசியக் கட்சி பந்தை அடித்து விட முயன்றபோதே தமிழ்க் கட்சிகள் தடுத்து திருப்பி அடித்திருக்கலாம்.

ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக முன் வைத்தனவே ஒரு தீர்வு யோசனை. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் என்ன?

வடக்கு-கிழக்கு பிரிக்கமுடியாத தமிழ் பேசும் மக்களின் பராம்பரிய பூமி என்பதில் உங்கள் நிலை என்ன? முதலில் அவற்றுக்கு பதில் சொல்லுங்கள் என்று கேட்டிருக்க லாம். கேட்கவில்லை.

காரணம் தமிழ்க் கட்சிகளுக்கு உரத் துப் பேசும் பலம் இல்லை. நெஞ்சில் உர மில்லை. அரசுடன் மட்டுமல்ல ஐக்கிய தேசி யக் கட்சியுடன்கூட முரண்பட தமிழ்க் கட்சிகள் தயாராக இல்லை. எதிர்காலத்தில் அதுவும் ஆளும்கட்சியானால் என்ன செய்வது?

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் என்ன செய்தது தெரியுமா?

'எங்கள் கோரிக்கையில் நாம் தெளிவாக உள்ளோம். கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி மாகாணசபை. அதற்கு உடன்பட்டால்தான் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு ஆதரவு என்பதே எமது நிலை. இந்த விடயத்தில் கூட்டணி உடன்பட்டுவிட்டது. ஏனைய தமிழ்க் கட்சிகள் மத்தியில் முரண்பாடு இருந்தால், முதலில் தமிழ்க் கட்சிகள் பேசி முடிவுக்கு வாருங்கள்" என்று கூறிவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்பப் படியோ, அல்லது அரசின் விருப்படியோ அல்லாமல் தனது சொந்த அரசியல் அணுகு முறையை தீர்மானிக்க முஸ்லிம் காங்கிர சால் முடிந்திருக்கிறது. எனவேதான் ஐக்கிய தேசியக் கட்சியின் கோரிக்கைப்படி நீதி யமைச்சர் பீரிஸின் கட்டளைப்படி 6.06.97 வெள்ளிக்கிழமை நடக்கவிருந்த தமிழ்-முஸ்லிம் கட்சிகளுக்கிடையேயான கூட்டத் தில் முஸ்லிம் காங்கிரஸ் கலந்து கொள்ள வில்லை. அது பாராளுமன்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டமாக நடந்து முடிந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி பந்தை தமிழ்-முஸ்லிம் கட்சிகள் பக்கம் அடித்துவிட, முஸ்லிம் காங்கிரஸ் பந்தை தமிழ்க் கட்சிகளின் கோட்டுக்குள் அடித்துவிட, பாவம் தமிழ்க் கட்சிகள் தடுக்கவும் முடியாமல், திருப்பி அடிக்கவும் முடியாமல் திண்டாடுகின்றன.

தமிழ்க் கட்சிகள் இரண்டு முறையில் இதனைத் தடுத்தாடலாம்.

ஒன்று; முஸ்லிம் காங்கிரசுடன் அரசியல் ரீதியாக இணைந்து நின்று ஒரே குரலில் பேசுவது.

இரண்டு; வடக்கு-கிழக்கு இணைப்பு, மற்றும் முஸ்லிம் தனி மாகாணம் தொடர்பாக முதலில் உங்கள் தரப்பு நிலை என்னவென்று ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோருவது.

ஆனால் ஒன்று; தமிழ்-முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபட்டு ஒரே கோரிக்கையை முன்வைத் தால்கூட ஐக்கிய தேசியக் கட்சி அதனையும் தடுத்தாட வேறு ஆயுதங்களைத் தேடுமே தவிர ஒருபோதும் தீர்வை நாட உதவப் போவதில்லை.

புலிகளுடனும் பேசவேண்டும், புலிகளின் கருத்தை அறியவேண்டும், எமது பொதுக்குழு வில் ஆராயவேண்டும், அரசின் நிலையும் தெரியவேண்டும் என்றெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி சொல்வதற்கு நிறைய காரணங் களை வைத்திருக்கும்.

எனவே- ஆளும்தரப்பு, எதிர்த்தரப்பு இராஜதந்திரங்களை முறியடிக்கும் வேகமும் விவேகமும் இல்லாதபோது பந்தை தமது கோட்டுக்குள் வைத்திருப்பது மட்டுமல்ல, பந்தாகவும் மாறி நிற்கின்றன தமிழ்க்கட்சிகள். அவர்கள் அடித்து விடுகிறார்கள், இவர்கள் பேச்சுக்கள், கலந்தாலோசனைகள் என்று உருண்டு கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான்.



படிப்பகம்

www.padippakam.com

**கடந்த வாரம்**

விக்கிரம் மல்லாவை
தீர்த்துக்கட்ட
ஸ்ரீ ராமும் லாலா ராமும்
திட்டம் தீட்டுகிறார்கள்.
மல்லாவை ஆற்றில் குளிக்க
அழைத்துச் செல்கிறார்கள்.
சிறிது நேரத்தில்
வெடியோசை கேட்கிறது.
மல்லா சுடப்படுகிறான்.

**இனி...**

# கொள்ளை ராணி பூலான்தேவி

## 48

தருவது ரசிகன்



பூலான்

மல்லாவைச் சுட்டுவிட்டார்கள் என்றதும் பூலானுக்கு உச்சியில் இடிவிழுந்தது போலாகிவிட்டது.

"ஐயோ.... மல்லா...!" என்று கத்தியபடியே ஆற்றங்கரை நோக்கி பூலான் ஓட, அவள் பின்னால் மல்லாவின் ஆட்கள் இரண்டுபேரும் ஓடினார்கள்.

விக்கிரம் மல்லா ஆற்றில் குளிக்கத் தயாரானபோதுதான் பின்புறமிருந்து சுடப்பட்டான்.

ஸ்ரீராம் தனது உறவினரான மஹாவீரை மல்லாவைச் சுடுமாறு கூறிவிட்டு தூரத்தில் மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

மஹாவீர் தன்னைப்பற்றி ஸ்ரீராமிடம் பெருமையாகக் கூறியிருந்தான். துப்பாக்கி சுடுவதில் தன்னைமிஞ்ச ஆளில்லை என்று தம்பட்டம் அடித்திருந்தான்.

ஸ்ரீராம் அதனை நம்பிவிட்டான். அதனால்தான் மஹாவீரிடமே மல்லாவைச் சுட்டுக் கொல்லும் பொறுப்பை ஒப்படைத்தான்.

மஹாவீர் சுயதம்பட்டம் அடிப்பானே தவிர உண்மையில் அவன் ஒரு கோழை.

இப்படியொரு காரியத்தை ஸ்ரீராம் செய்யச் சொல்லுவான் என்று தெரிந்திருந்தால் அவன் பொய் சொல்லிப் பெருமையடித்திருக்கமாட்டான்.

மரம் ஒன்றின் மறைவில் இருந்து மல்லாவைக் குறிவைத்தபோதே அவனுக்கு கை கால்கள் உதறத்தொடங்கிவிட்டன. மல்லாவின் முதுகுதான் அவன் பார்வைக்குத் தெரிந்தது.

குறிதப்பினால் மல்லா தன்னைக் கொன்றுவிடுவான். குறிவைக்காவிட்டால் ஸ்ரீராமிடம் தப்பமுடியாது என்று இரு தலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தான் அவன்.

அந்தத் தவிப்போடேயே மல்லாவை நோக்கிச் சுட்டான்.

முதுகுகாட்டி நின்ற மல்லா அப்போதுதான் மஹாவீர் நின்ற பக்கமாக திரும்பினான். மல்லா திரும்பவும் மஹாவீர் சுடவும் சரியாக இருந்தது.

ஆனால் மஹாவீரின் நடுக்கத்தால் குறி தப்பியது.

மல்லாவின் இடது தொடையில் குண்டுபாய்ந்தது. மல்லா அதனை எதிர்பார்க்கவில்லை.

சட்டென்று மடங்கி அமர்ந்து தன் துப்பாக்கியை எடுத்துக்கொண்டான்.

தன்னைச் சுட்டவன் மரங்களுக்குள் மறைந்து மறைந்து ஓடுவதை மல்லா கண்டுவிட்டான்.

அது மஹாவீர்தான் என்பதை ஊகிப்பது மல்லாவுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை.

ஆனால் மஹாவீர் மரங்களுக்குள் மறைந்து ஓடித் தப்பியதால் மல்லாவால் அவனைச் சுட முடியவில்லை.

மல்லாவின் தொடையில் இருந்து இரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது.

இரத்தம் அதிகம் வெளியேறினால் நினைவு தப்பிவிடும். உயிரும் போய்விடலாம்.

'சாகக்கூடாது.... சாகவே கூடாது! என்னால் முடியும்! என்னால் முடியும். தைரியமாக இருக்கவேண்டும்.' மல்லா தன் துப்பாக்கியை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு பல்லைக் கடித்து வலியைத் தாங்கிக்கொண்டான்.

தன் சட்டையைக் கிழித்துக் காயத்துக்கு கட்டுப்போட மல்லா நினைத்தபோதுதான் பூலான் கத்தியபடி ஓடிவருவதைக் கண்டான்.

பூலானைக் கண்டதும் மல்லாவுக்கு புதுப்பலம் வந்துவிட்டது. கால்களை நீட்டி தரையில் அமர்ந்துகொண்டான்.

மல்லா அமர்ந்திருப்பதைக் கண்டதும் பூலானுக்கு போன உயிர் திரும்பிவந்தது போல் இருந்தது.

ஓடிவந்தவள் மல்லாவின் அருகே அமர்ந்து தன் சேலையைக் கிழித்து காயத்துக்குக் கட்டுப்போட்டாள்.

"சொன்னேன் கேட்டாயா? பாவிகள், நம்பாதே என்றேனே, கேட்டாயா...? ஐயோ கொலைகாரக் கோழைகள், நாய்கள்.... நாய்கள்.... வேணும் உனக்கு வேணும்...." கத்திக் கத்தியே காயத்துக்கு கட்டுப் போட்டுக் கொண்டிருந்தாள். கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் சிந்தி மல்லாவின் கால்களை நனைத்துக் கொண்டிருந்தது.

"பூலான் இங்கே பார், முட்டாள்மாதிரி அழாதே, புரிகிறதா? அழவே கூடாது. இப்படியான நேரத்தில்தான் தைரியமாக இருக்கவேண்டும்!"

"யார் சுட்டது அந்த நாய்தானா?" என்றாள் பூலான்.

அதற்குப் பதில் சொல்லாமல் "உன் துப்பாக்கி எங்கே?" என்று கேட்டான்.

அவசரத்திலும், பதட்டத்திலும் துப்பாக்கியை எடுக்க மறந்து அப்படியே ஓடிவந்து விட்டாள் பூலான். இப்போது மல்லா கேட்டதும்தான் தவறு புரிந்தது.

மல்லா முகத்தைச் சுழித்தான்.

"சரி, சரி, அழுவதை முதலில் நிறுத்து. நீ அழுவதைப் பார்த்தால் உனக்கு தலைமை தாங்கும் தைரியம் கிடையாது என்று எம்மவர்களே நினைத்துவிடுவார்கள்!" என்று முணுமுணுப்பாகச் சொன்னான் மல்லா. பூலானுடன் ஓடிவந்த தன் ஆட்கள் இருவரும் அருகில் நின்றதால் அவர்களுக்குக் கேட்காத விதமாகவே சொன்னான்.

பூலானால் அழுகையைக் கட்டுப்படுத்த இயலவில்லை. தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போனது. ஆனால் அவர்கள் நினைத்தது நடந்திருந்தால் என்னாகியிருக்கும் என்று நினைக்க நினைக்க அவளுக்கு உள்ளே விம்மியது.

அதேநேரம் "விக்கிரம் மல்லா உனக்கு என்ன நடந்தது?" என்று கேட்டபடியே ஸ்ரீராம் போலியான பதட்டத்துடன் வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் பூலானுக்கு கோபம் பற்றிக்கொண்டு வந்தது. அதற்கிடையே மல்லா தன் துப்பாக்கியை சடாரென்று உயர்த்தி ஸ்ரீராமை நோக்கி நீட்டினான்.

ஸ்ரீராம் முகம் சட்டென்று இருண்டது.

"அப்படியே நில்லுங்கள், துப்பாக்கியை கீழே போடுங்கள்!" என்றான் மல்லா.

ஸ்ரீராம் தயங்க,

"ம்... போடுங்கள்!" என்றான் கொஞ்சம் கோபமாக.

துப்பாக்கியை தன் கையிலிருந்து நழுவவிட்ட ஸ்ரீராம்; "எ....என்ன மல்லா இது என்... என்மீதும் உனக்கு சந்தேகமா?" என்றான்.

"இது சந்தேகமல்ல தற்பாதுகாப்பு. மஹாவீர் எங்கே?" என்றான் மல்லா.

ஸ்ரீராம் என்ன சொல்லப்போகிறான் என்று அவன் முகத்தையே வெறுப்புடன் நோக்கிக் கொண்டிருந்தாள் பூலான்.

ஸ்ரீராம் ஒரு குள்ளநரி என்பது அவன் மல்லாவின் கேள்விக்கு சொன்ன பதிலில் இருந்து தெரிந்தது.

"அவனா! பாவம் அவன் ஒரு பயந்தாங்கொள்ளி விவசாயி. நீ சுடப்பட்டதைக் கண்டதும் அலறியடித்துக் கொண்டு என்னிடம் ஓடிவந்து விஷயத்தைச் சொன்னான். அப்படியே ஓடிவிட்டான். ஆமாம் ஏன் கேட்கிறாய்?"

மல்லாவின் உதடுகளில் இகழ்ச்சியான புன்னகை ஒன்று தோன்றி மறைந்தது.

என்னதான் வலியை மறைத்து மன வைராக்கியத்தோடு நடந்துகொண்டாலும் தனது உடல் பலவீனமாகிக் கொண்டிருப்பதை மல்லா உணர்ந்தான்.

இப்போது ஸ்ரீராமுடன் பகைத்துக் கொண்டால் தனக்கு ஏற்படும் பாதிப்பைவிட பூலானுக்கும் ஆபத்து நேர்ந்துவிடலாம் என்றுதான் தயங்கினான் மல்லா.

பூலானுக்கோ மல்லாமீது எரிச்சலாக இருந்தது. 'ஸ்ரீராமுடன் என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது. சுட்டுத்தள்ள வேண்டியதுதானே!' என்று நினைத்தாள்.

தனது கோஷ்டிக்குள் உள்ள சிலர் சாதிரீதியாக ஸ்ரீராமுடன் சேர்ந்துகொண்டால் இப்போதுள்ள நிலையில் தன்னால் சமாளிக்க முடியாது என்று மல்லா நினைத்த கோணத்தில் பூலானின் சிந்தனை செல்லவில்லை.

"உங்கள் துப்பாக்கியை எடுத்துக் கொள்ளுங்கள் குருஜி. இன்றைய கசப்பான நிகழ்ச்சிகளை இன்றோடு மறந்துவிடுவோம்!" என்ற மல்லா, தான் எழுந்துகொள்ள பூலானை நோக்கிக் கைகளை நீட்ட அக்கைகளைப் பற்றிக்கொண்டு அவன் எழுந்து கொள்ள உதவினாள் பூலான்.

இப்போது மல்லாவின் துப்பாக்கி பூலானிடம் இருந்தது. மல்லாவை அவன் ஆட்கள் பத்திரமாகத் தூக்கிச் சென்றார்கள்.

## பாகம் 02

முகாமில் மல்லாவுக்கு பூலான்தான் கைவைத்தியம் செய்தாள். பச்சிலைகளைப் பறித்துவந்து காயத்தில் வைத்துக் கட்டினாள். ஆனால் குண்டு உள்ளேயே இருந்ததால் மல்லா வலியால் துடித்தான்.

மல்லாவின் உதடுகளை தன் இதழ்களால் மூடி முத்தமிட்டும், அவன் உடலை வருடிவிட்டும் தன்னால் முடிந்தளவு அவன் வலியை மறக்கச் செய்துகொண்டிருந்தாள் அவள். 'மல்லா மல்லா' என்று முணுமுணுத்தபடியே அவன் மார்பை இதமாக வருடியும், இதழ்களால் நெருடியும் கொண்டிருக்க மல்லா சுகமாக உணர்ந்தான். கண்களை மூடி லயித்தான். ஆனால் வலி விடுவதாயில்லை.

இரவு முழுக்க பூலான் கண்விழித்து அவன் பக்கத்திலேயே துப்பாக்கியுடன் காவல் இருந்தாள்.

ஏதாவது அரவம் கேட்டாலே போதும்; அரவம் கேட்டதிசையை நோக்கி தன் துப்பாக்கியை நீட்டியபடி கூர்ந்து கவனித்தாள். அடிக்கடி தன் முகத்தையும் கண்களையும் பானையில் இருந்த குளிர்நீரால் கழுவிக் கொண்டு தூக்கத்தை விரட்டிக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீராம் என்ற குள்ளநரியிடம் இருந்து மல்லாவை இதேநிலையில் வைத்து தொடர்ந்து பாதுகாக்க முடியாது. அதனால் எப்படியாவது முதலில் இந்த இடத்திலிருந்து மல்லாவை வேறு இடத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என முடிவு செய்து கொண்டாள்.

காலையில் தன் முடிவை ஸ்ரீராமிடம் பூலான் சொன்னபோது அவன் எரிந்து விழுந்தான்.

"உனக்கென்ன பைத்தியமா? அவனைப் பொலிசார் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவன் சாதாரண ஆளா? அவனைப் போய் மருத்துவமனைக்கு கொண்டுபோக நீ.... உனக்குப் பைத்தியம் தான் போ!"

ஸ்ரீராம் மறுப்பான் என்பது பூலான் எதிர்பார்த்ததுதான்.

"இங்கேயே இருந்தால் அவர் உயிருக்கே ஆபத்து ஏற்படும். இரத்தம் போயிருக்கிறது. துப்பாக்கிக்குண்டு உள்ளேயே இருக்கிறது. சிகிச்சைச் செய்யாமல் வைத்திருந்து என்ன செய்வது?" என்றாள் பூலான்.

பூலான் சொன்னதை குழுவில் உள்ள பலரும் ஆதரித்தனர். மல்லாவை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று துடித்தனர்.

அதனால் வேறு வழியில்லாமல் மனதில் பூலானை சபித்துக்கொண்டே சம்மதித்தான் ஸ்ரீராம்.

அன்று மாலையாக முன்னரே ஒரு மாட்டுவண்டி கொண்டுவரப்பட்டு, மல்லா அதில் ஏற்றப்பட்டான்.

அதற்கும் ஸ்ரீராம் "மாட்டுவண்டியில் கொண்டுபோனால் அவன் உடல் தாங்குமா வேறு வண்டி கிடைக்கும்வரை பொறுக்கலாமே!" என்றான்.

"இதைவிட வேறு என்ன வண்டி கிடைக்கும் ஹெலிகொப்டரா கிடைக்கும்?" என்றாள் பூலான் காட்டமாக. ஸ்ரீராம் அவளை முறைத்துவிட்டு வாயை மூடிக் கொண்டான்.

மல்லா மிகப் பலவீனமாக இருந்தான். ஆனாலும் புறப்பட முன்னர் தன் குழுவினரை அருகே அழைத்து பலவீனமான குரலில்; "எனக்கு என்ன நேருமோ தெரியாது. ஆனால் நீங்கள் எப்போதும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். இருப்பீர்களா?"

எல்லோரும் தலையசைத்தனர். அவர்கள் கண்கள் கலங்கின.

பூலான் மல்லாவின் துப்பாக்கியையும், தன் துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டாள். வேரேலால் என்பவன் துணைக்குச் சென்றான்.

மல்லாவின் பையில் கட்டுக் கட்டாக பணமும், நகைகளும் இருந்தன. அதனை பூலான் மறக்காமல் எடுத்து வந்திருந்தாள்.

சிறிது தூரம் சென்றதும் மல்லா பூலானிடம் "நாங்கள் ஓரை என்ற ஊருக்குச் செல்லவேண்டும். ஆனால் இந்தப் பாதையில் போகாமல் வேறு பாதையில் வண்டியைத் திருப்பச் சொல்."

பூலானுக்கு மல்லாவின் முன்னெச்சரிக்கை மகிழ்ச்சியாக இருந்தது. ஓரை என்ற சிற்றூர் நோக்கி மாட்டுவண்டி மல்லா சொன்ன பாதையால் சென்றது.

ஓரைக்குப் போய்ச்சேர்ந்தபோது நள்ளிரவாகியிருந்தது. அங்கிருந்து ஜான்சி நகருக்கு செல்ல ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தினார்கள்.

மல்லாவின் காயத்தைக்கண்ட ஓட்டோக்காரன் முதலில் பயந்தான். 500 ரூபாவைக் காட்டியதும் பல்லைக் காட்டினான். "கட்டிடம் ஒன்றில் ஏறி வேலை செய்தபோது கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயம்." என்று சொன்னதை ஓட்டோக்காரன் நம்பினானா இல்லையா? என்று தெரியவில்லை.

ஜான்சிக்கு அதிகாலையில் போய்ச் சேர்ந்து, இடைநடுவே வேறொரு கைரிக்ஷா பிடித்து ஒரு வீடொன்றை சென்றடைந்தனர்.

வீட்டுக்கதவை பூலான்தான் தட்டினாள். கதவு திறந்தது.

பூலான் அதிர்ந்து நின்றாள்.

(தொடர்ந்து வரும்)

# காலுக்குள் கத்தி!



தனது வழக்கறிஞருடன் பாலா

'ஒப்பரேஷன் சக்சஸ் ஆனால் கத்திதான் உள்ளே' சிங்கப்பூரைச் சேர்ந்த பாலசுப்பிரமணியத்துக்கு ஏற்பட்ட அனுபவம் அதுதான்.

சிங்கப்பூரில் இராணுவத்தில் பணியாற்றிய இளைஞர் பாலசுப்பிரமணியம். 1988ம் ஆண்டு அவரது குதிக்காலில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது. சிகிச்சைபெற சிங்கப்பூர் பொதுமருத்துவமனைக்குச் சென்றார். அங்கே டாக்டர் சியோவ் காங்ஹோங் என்பவர் பாலசுப்பிரமணியத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்தார்.

அறுவைச் சிகிச்சையின் பின்னரும் கணுக்கால் வலி போகவில்லை. அதனால் உடற்பயிற்சி செய்ய இயலவில்லை. இராணுவ பூட்ஸ்களை அணியவும் முடியவில்லை. டாக்டரிடம் கேட்டதற்கு, "சிகிச்சைக்கு பின்னர் வழக்கமாக ஏற்படும் வலிதான்" என்றுவிட்டார்.

ஆனால் இராணுவத் தலைமை பாலசுப்பிரமணியம் கால்வலி என்று கள்ளமடிக்கிறார் என்று சந்தேகித்தது. கால்வலியுடன் காலங்கழித்த பாலசுப்பிரமணியத்தை 1991ல் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தனர்.

அப்போதுதான் கணுக்காலின் உள்ளே கத்தி இருப்பது தெரிந்தது.

பதறிப்போனார் பாலசுப்பிரமணியம். காலுக்குள் இருந்த கத்தியை அகற்றிய கையோடு வழக்கறிஞரை நாடினார். இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்கள் நஷ்டஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்தார்.

சமீபத்தில்தான் வழக்கில் முடிவு காணப்பட்டுள்ளது. தமது தவறை சிங்கப்பூர் பொது மருத்துவமனை டாக்டர் ஒப்புக்கொண்டதால் குறிப்பிட்ட தொகை நஷ்டஈடு பாலசுப்பிரமணியத்துக்கு வழங்கப்பட்டது. ஆனாலும் சமரசம் மூலமாக இணக்கம் ஏற்பட்டதால் எவ்வளவு தொகை என்ற விடயத்தை இரு தரப்பும் வெளியே சொல்வதில்லை என்று நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டனர். எப்படியோ காலில் கத்தியுடன் வாழ்ந்தவர் புத்தியுடன் செயற்பட்டு நஷ்டஈட்டையும் வாங்கிக்கொண்டார்.

# குழந்தை பெற புதிய முறை! சிங்கப்பூரில் சாதனை!

சிங்கப்பூர் பொது மருத்துவமனையில் ஏற்பட்ட தவறு பற்றி அறிந்தீர்கள். அதே மருத்துவமனையில் குழந்தை பெறுவதில் புதிய சாதனை ஒன்றும் நிகழ்ந்துள்ளது.

திரு. ஜான் ஹார்வியால் ஆரோக்கியமான விந்துவை உற்பத்தி செய்ய முடியவில்லை. இளவயதில் விளையாட்டுகளில் ஈடுபட்டபோது ஏற்பட்ட காயங்களால் ஜானுக்கு (44) அந்த நிலைமை ஏற்பட்டது.

ஆனாலும் அவருக்கும் அவரது மனைவி ஃபியோனாவுக்கும் (32) குழந்தைகள் பெற வேண்டும் என்ற தாளாத ஆசை. அவர்களது ஆசை ஜனவரி 10ம் தேதி நிறைவேறியது. அதுவும் இரட்டிப்பு சந்தோஷத்தை ஏற்படுத்தும் வகையில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.



இரட்டையர் சப்ரினா ஆஷ்லிக், ராயன் வில்லியமுடன் மகிழ்ச்சியில் திளைக்கும் பெற்றோர் ஜானும் ஃபியோனாவும்

ஜானுக்கும் அவரது மனைவிக்கும் குழந்தை பிறக்க சிங்கப்பூர் பொது மருத்துவமனையின் மகப்பேறு பிரிவின் புதிய கருத்தரிப்பு முறை உதவியது.

மற்ற செயற்கை கருத்தரிப்பு முறைகளில் முட்டையும் விந்துவும் தானாகவே ஒன்று சேரும்படி விட்டுவிடப்படும். ஆனால் இவர்களுக்கு செய்யப்பட்ட இக்சி (Icsi) முறைப்படி முட்டையில் விந்து ஊசிவழி ஏற்றப்படும். ஆனால் அதற்கு முன்பு திரு. ஜானுக்கு ஊசி போட்டு ஆரோக்கியமான விந்து உருவாக்கப்பட்டது. அந்த விந்துவை அவரது ஆண் உறுப்பில் இருந்து அறுவை சிகிச்சை வழி மருத்துவர்கள் அகற்றி, ஃபியோனாவின் முட்டையில் ஊசி வழி ஏற்றினர்.

மொத்தம் நான்கு கருக்கள் உருவாக்கப்பட்டன. அவை ஃபியோனாவின் கருப்பையில் செலுத்தப்பட்டன. கருக்களில் இரண்டு மட்டுமே பிழைத்தன. இரு கருக்களும் முழு வளர்ச்சி அடைந்து ஜனவரி 10ம் தேதி அறுவை சிகிச்சை வழி பிறந்தன.

இரட்டைக் குழந்தைகளில் ஒன்று ஆண். மற்றொன்று பெண். ஆஸ்திரேலியர்களான ஜானும் அவரது மனைவியும் 1994ம் ஆண்டு சிங்கப்பூருக்கு வந்தனர். அவர்கள் 1991ம் ஆண்டிலிருந்தே குழந்தை பெற முயற்சி செய்து வந்தனர்.

அவர்களின் ஆசையை நிறைவேற்றிய புதிய சிகிச்சை முறை 1994ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இதுவரை இந்த சிகிச்சை முறை சிங்கப்பூரில் வெற்றி பெறவில்லை. இந்த சிகிச்சை முறையில் சிங்கப்பூரில் குழந்தை பெற்றெடுத்த முதல் தம்பதி ஜானும் அவரது மனைவியும்தான்.

சிகிச்சை முறைக்கு ஜானும் அவரது மனைவியும் சுமார் 50,000 வெள்ளி (20 இலட்சம் ரூபாய்கள்) செலவிட்டனர்.

# காதலுக்கு முகம் எதற்கு?

அழகு என்பது முகத்திலோ புறத்தோற்றத்திலோ அல்ல என்பது எத்தனை பேருக்கு தெரிகிறது? மொடல் அழகி டான் டெய்லருக்கு மட்டும் தெளிவாகத் தெரிந்திருக்கிறது.

அமெரிக்காவின் முதல்தர மொடல் அழகிகளில் ஒருவர் டான் டெய்லர். எத்தனையோ பேர் அவரைக் காதலிக்க பேயாக அலைந்தும் டெய்லர் பிடிகெடுக்கவில்லை.

'என்னைக் காதலிக்கும் ஆண் வேண்டாம், நான் காதலிக்கும் ஆண் மகன் தான் தேவை' என்ற ஒரு பொலிசி. காத்திருந்தார்.

ஹொலிவூட்டில் ஒரு நிகழ்ச்சியில்தான் டெய்லர் தன்மனம் கவர்ந்த அந்த ஆண் மகனைக் கண்டு கொண்டார்.

இருவரும் கண்களால் பேசி கரங்களால் பேசிப் பேசி கடைசியாக கல்யாணம்வரை வந்துவிட்டனர்.

கண்டவர்களுக்கு ஆச்சரியம். ஏன் தெரியுமா? டெய்லரின்காதலர் டேபிட்டின் முகம் கிட்டத்தட்ட தெய்வமகன் படத்தில் சிவாஜியின் முகம் மாதிரி கோரமாக இருக்கும். ஆறு வயது சிறுவனாக இருந்தபோது ஏற்பட்ட தீ விபத்தொன்றில் டேவிட்டின் முகம் கருகிப்போனது. அதன் பின்னர் கோரமுகத்துடன்தான் நடமாட்டம். பெண்கள் அவனைக் கண்டாலே பயந்தோடினார்கள். எல்லோரும் முகத்தைப் பார்த்தார்களே தவிர அகத்தைப் பார்க்கவில்லை. டெய்லர் தான் என் உள்ளத்தை புரிந்துகொண்ட முதல் பெண். முதல் காதலி என்கிறார் டேவிட்.



மற்றொரு விஷயம் அழகி டெய்லருக்கு டெவிட்டைவிட பத்துவயது அதிகம். காதலுக்கு வயதில்லை.


"எந்த ஆணையும்விட அவர் ஒன்றும் எதிலும் குறைந்தவரல்ல. எனக்கு அவர்தான் அழகு. நாங்கள் இருவரும் சந்தோசமாக இருக்கிறோம். நண்பர்கள் எம்மை வாழ்த்துகிறார்கள் என்கிறார் டெய்லர்.



படிப்பகம்

www.padippakam.com

## இது பாவனைக்கல்ல



→ சாக்சபோன் இசைக்கருவி தான் இது. குட்டியாக இருப்பதால் உலக சாதனை முயற்சி என்று நினைக்கத்தோன்றும். ஆனால் இது அமெரிக்க அதிபர் கிளின்ரனுக்கு கொடுக்கப்படப் போகும் அசத்தலான பரிசு.

கிளின்ரனுக்கு சாக்சபோன் என்றால் உயிர். சாக்சபோன் கருவியைக் கண்டுபிடித்தவர் வாழ்ந்த நகரம் டினாண்ட். இது பெல்ஜியம் நாட்டில் உள்ளது. அங்குள்ள நகைக்கடைக்காரர் ஒருவர்தான் 18 காரட் சுத்தமான தங்கத்தில் இதனை அட்டகாசமாக தயாரித்துக் கொண்டிருக்கிறார். வாயில் வைத்து வாசிக்க முடியாவிட்டாலும் கண்களால் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கலாம் விலை உயர்ந்த பரிசு.

## தகவல் பெட்டி

## 'சாண் ஏற முழம் சறுக்கும்'

→ 'ஸ்பைடர் மேன்' (சிலந்தி மனிதன்) என்றால் சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் அலாதிப்பிரியம் தான். ஆனால் நாமெல்லாம் படம்பார்த்து ரசிப்பதோடு சரி. நாமே ஸ்பைடர் மேனாக மாறினால் என்னவென்று ஒரு வேளை கற்பனை பண்ணினாலும் பண்ணுவோமே தவிர காரியத்தில் இறங்கமாட்டோம். ஆனால் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அலைன் ரொபார்ட் துணிச்சலான, சாகசத்தில் பிரியமுள்ள ஆசாமி. 'ஸ்பைடர் மேனாக' மாறும் ஆசையில் உயரமான கட்டிடங்கள் பலவற்றில் தாவித்தாவி ஏறியிருக்கிறார்.

எடுப்பான உயரமான கட்டிடங்களைக் கண்டால் போதும் கைகால்கள் இவருக்கு குறுகுறுக்கத் தொடங்கி விடும். ஒரே தாவலாக ஏறத் தொடங்கிவிடுவார். இதனால் பொலிசாரிடம் பல தடவைகள் மாட்டியிருக்கிறார். ஆனாலும் சற்றும் மனம்தளராத அலைன் ரொபார்ட் சமீபத்தில் உலோகத்தூணில் ஏறி கின்னஸ் சாதனை படைக்க முயன்றார்.

ஏற ஏற வழுக்கும் ரகமானது உலோகத்தூண். ஆனாலும் தன்னால் முடியும் என்று கடும் பயிற்சி செய்தார். இறுதியாக சாதனை படைக்க தாவி ஏறினார். அவரது கஷ்ட காலம் அன்று கடும் பனி பொழிந்ததால் சாண் ஏற முழம் சறுக்கிய கதையானது. தோல்வியோடு 'நவீன ஸ்பைடர் மேன்' பின்வாங்கும் காட்சியைத் தான் படத்தில் காண்கிறீர்கள்.



## சிந்தனை செய் மனமே

## கண்டவர் கோடி



← மரத்தில் ஹாயாகச் சாய்திருந்து சிந்திப்பது பாண்டாக் கரடி. இந்தக் கரடி சிந்திப்பதற்கும், அசைபோட்டு பார்ப்பதற்கும் எத்தனையோ விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

இந்த பாண்டாக் கரடியின் பெயர் சிங் சிங். அமெரிக்காவுக்கு அன்புப்பரிசாக 25 ஆண்டுகளுக்கு முன்னர் சீனா இந்தக் காடியைக் கொடுத்தது. அப்போது சிங் சிங்கின் வயது ஒன்று. அமெரிக்காவில் வாஷிங்டன் தேசிய விலங்கு காட்சியகத்தில் சிங் சிங் ஒரு துணையைத் தேடியது. துணையின் பெயர் லிங் லிங். துணையோடு அன்பாக இருந்ததால் ஐந்து குட்டிகள் பிறந்தன. ஆனாலும் அவற்றில் ஒன்றுகூட பிழைக்கவில்லை என்பதுதான் சோகத்திலும் சோகம்.

உலகில் அபூர்வமான உயிரினங்களில் ஒன்று இந்த பாண்டாக் கரடி. இதனால் இதனைக் காண எக்கச்சக்கக் கூட்டம். கடந்த 25 ஆண்டுகளில் சுமார் ஏழரைக் கோடி பார்வையாளர்கள் இதனை கண்டுகளித்துள்ளனர் என்பது உலக சாதனையான விஷயம்.

## சிறகால் ஒரு குடை

→ இவர் குடை பிடிக்க நெருப்புக்கோழியின் சிறகுகள் தான் கொடையாக அமைந்திருக்கின்றன. பெல்ஜியம் நாட்டில் ஆண்டு தோறும் 'கில் ஒப் பிஞ்ச்' என்னும் மாபெரும் கேளிக்கை விழா நடக்கும். அந்தக் கேளிக்கை விழாவில்தான் நெருப்புக்கோழி சிறகால் செய்யப்பட்ட குடையுடன் இவர் பவனிவந்து அசத்தினார்.



## சுகமான சுமைகள்

↓ அன்னை நம்மை வயிற்றில் சுமக்கிறாள். அன்னத்துக்கு அந்த வாய்ப்பு இல்லை. முட்டையிட்டு பொரிப்பதால் வயிற்றில் சுமக்க வாய்ப்பில்லை. ஆனால் பொரித்த குஞ்சுகளை தனது முதுகில் சுமந்து தன் பாசத்தைக் காட்டுகிறதோ? முரசு 205ல் தன் முதுகில் ஒரு குஞ்சை சுமந்து செல்லும் அன்னம் கண்டோம் அல்லவா. இதோ பாருங்கள் முதுகில் மூன்று குஞ்சுகள். சுகமான சுமைகள்.

அன்னைமடி மெத்தைதான். அன்னக் குஞ்சுகளுக்கு அன்னை முதுகுதான் மெத்தை.



## இண்டிலும் மோதல்

இதுதான் காதலா? இதுதான் மோதலா? ம்ஹூம் நமக்குத்தெரியாது. இரண்டு கரடிகளுக்கும் மட்டுமே தெரிந்த இரகசியம் அது. ஜோக் என்று நினைக்காதீர்கள். அதுதாங்க உண்மை. ↓

இவை இரண்டும் துருவக் கரடிகள். பூமியின் வட துருவப்பகுதியில் வசிப்பதால் அப்பெயர்.

துருவக் கரடிகளிடம் விசேஷமாக உள்ள சமாச்சாரம் யாதெனில் அவை காதல் வந்தாலும் மோதிக் கொள்ளும். பசிவந்தாலும் கோபத்தில் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளும். அதனால் அவை மோதுவதை வைத்து ஒரு முடிவுக்கு வரவே முடியாது. அதுசரி, காதல் வந்தால் ஏன் மோதவேண்டும்? நமக்கு ஒருவர்மேல் கொள்ளையான பிரியம் என்றால் அடே கள்ளா அல்லது அடி கள்ளி என்று இரண்டு தட்டுத் தட்டுவோம் அல்லவா. அப்படித்தான் துருவக் கரடிகளுக்குள்ளும் ஒரு பாச மோதல் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

துருவக் கரடிகளின் உணவு மீன்தான். கடல் மேல் காணப்படும் உறைபனியின் மேற்பரப்பை காலால் தோண்ட மீன் மேலே வரும். உடனே லபக்கென்று அமுக்கிக் கொள்கின்றன. அப்படி மீன் கிடைக்காவிட்டால்தான் முட்டு அவுட்டாகி தமக்குள் டுசும் டுசும்.





படிப்பகம்

# மனம் உடைந்த கவிஞர் மகன் வாங்கிக் கட்டிய மைக் நடிகர்!

மித்ரவாசு

தேசிய விருதுபெற்ற நடிகை ஷோபாவுடன் ஜோடியாக நடித்து சினிமாவில் அறிமுகமான அந்த இளைஞர் புகழ்பெற்ற ஒரு அமர கவிஞரின் மகன். படம் ஓடாததால் தொடர்ந்து நடிக்க வாய்ப்பு வரவில்லை. அதனால் ஜி.என்.ரங்கராஜனிடம் உதவியாளராகச் சேர்ந்து பின்னர் இயக்குநரானார்.

முன்னணி ஏழு நடிகர்களில் ஒருவர் கவிஞரின் மகனை இயக்குநராகவைத்து ஒரு படம் தயாரித்தார். படம் பரவாயில்லை ரீதியில் வசூலானது. அதே யூனிட் மற்றொரு படம் உருவாக்கியது. அந்தப்படம் படுதோல்வி.

நடுவே அழகிய தோற்றமுள்ள அந்த கவியின் மகனுக்கு 'மிஸ் மெட்ராஸ்' பட்டம் பெற்ற அழகி ஒருவரின் தங்கைக்கும் காதல் மலர்ந்து கல்யாணத்தில் முடிந்தது. ஆனால் அந்த மணவாழ்க்கை நீடிக்கவில்லை. இந்த மோதலுடன் ஒரு ஆண், இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன.

மனைவிமீது கணவனுக்கு சந்தேகம். கணவன்மீது மனைவிக்குச் சந்தேகம். 'பேய்' படமொன்றை இயக்கிய போது கவிஞரின் மகனுக்கும் அப்பட நாயகியான வாரிசு (பேத்தி) நடிகைக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டது. அதேநேரம் தன்னை இயக்குநராக்கிய நடிகருக்கும் தன் மனைவிக்கும் இடையே தொடர்பு இருப்பதை கவிஞரின் மகனும் கண்டுகொண்டார். கவிஞரின் மகனும் மனைவியும் விவாகரத்துப் பெற்றனர். பின்னர் திரைவாழ்வில் ஏற்பட்ட பல தோல்விகளால் மனம் உடைந்த கவிஞரின் மகன் தன் 33வது வயதிலேயே மாரடைப்பால் மரணமானார்.

**எம் குறிப்பு: முன்னணி நடிகர் சமீபத்தில் ஒரு நடிகையுடன் கிசுகிசுக்கப்படுபவர். முன்னர் தயாரிப்பாளராகவே இருந்தார். பேத்தி நடிகையின் பெயர் 'வி' என்ற எழுத்தில் முடியும். கவிஞரின் மகன் கண்மணியானவர். அவர் இயக்கிய படப்பெயரில் அதில் நடித்த முன்னணி நடிகரின் பெயரையும் இணைத்தே வைத்தனர்.**

## மைக் நடிகர்

சுமார் நூறு படங்கள்வரை எட்டிப்பார்த்துவிட்டு இரகசியத் திருமணம் செய்துகொண்ட நடிகர் அவர். மூன்றெழுத்தில் பெயர் கொண்டவர். நடித்த 90 சதவீத படங்களிலும் சொந்தக்குரலில் பேசவில்லை. அதிகமாக பாடகர் வேடத்தில் மைக்குடன் நடித்தே சாதனை புரிந்தார்.

தனக்கு படப்பிடிப்பு இல்லையென்றாலும் நண்பர்கள் இயக்கும் படமென்றால் தொடை தெரியும் சின்னக் காற்சட்டையுடன் வந்துவிடுவார். தான் நினைத்த அளவில் கதாநாயகியர் வசப்படுகிறார்கள் என்றால் அவர்களது அம்மாக்களையும் கட்டிப்பிடித்து முத்தமிடத் தயங்க மாட்டார்.

இவர் ஒரு சமயம் நான்கெழுத்து நடிகையிடம் வசமாக மாட்டிக் கொண்டார். 'முருங்கைக்காய்' புகழ் படத்தில் அறிமுகமான நடிகை அவர். கட்டுப்பாடான தந்தையிடம் வளர்ந்தவர் என்பதால் எளிதாக ஹீரோக்களிடம் சிக்கிக்கொள்ள மாட்டார்.

அந்த மூன்றெழுத்து நடிகருடன் மலையாளத் தழுவல் படம் ஒன்றில் இணைந்து நடித்தார் நடிகை. மலையாளத் தழுவல் படம் என்பதால் நெருக்கமான காட்சிகள் அதிகம். அதைப் பயன்படுத்திய நடிகர் சிறிது முரட்டுத்தனமாக நடந்து கொண்டார். நடிகை அவரது காதில் கிசுகிசுத்து பின்வாங்கச் செய்தார்.

தான் பெண்கள் மத்தியில் அழகுராஜா என்றும், தன்னை ஆண்மையுடையவராக காட்ட விரும்பியும் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் நான்கெழுத்து நடிகையை சீண்டிப் பார்ப்பதில், செக்ஸியாக ஜோக் அடிப்பதிலும் நடிகர் ஆர்வம் காட்டினார்.

நடிகைக்கு கோபம் வந்தாலும் படப்பிடிப்பு பாதிக்கப்படுமே என்று பொறுமை காத்தார். அப்படியும் தாளமுடியாமல் வெளிப்புறப்படப்பிடிப்பில் நடிகர் தன்னை சீண்டியபோது "சீ பொறுக்கி....! நீயெல்லாம் ஒரு ஹீரோ. உனக்கு அறிவில்லே, ஒரு பொண்ணுக்கிட்ட எப்படி நடக்கணும், பேசணும் என்று தெரியாதா நீயெல்லாம் அக்கா தங்கச்சிகூட பொறந்தவன்தானா?" என்றெல்லாம் நடிகை கேட்டபின், நடிகர் சூடு தாங்காமல் ஒதுங்கியவர்தான், படம் முடியும்வரை சைவமாகிவிட்டார். நடிகையிடம் மட்டும்தான்.

**எம் குறிப்பு: மோகனமான நடிகர் என்றால் தெரியும். நடிகை லேடீஸ் ஸ்பெசலை தமிழாக்கிப் பார்த்தால், அப் படத்தில் கலக்கியவர். வசியமானவர். அவர் பெயரில் ஒரு பிரபல பாடல்வரிகளும் உண்டு.**



ஷில்பா ஷிரோத்கர்
படம்: அரசியல்


ராமராஜன்-தேவயானி
படம்: விவசாயி மகள்

## காதே...

நடிகர் அப்பாலை... களும் தேடிப்போக ஆரம்... ஒருவரான இரண்டெழுத்... புகழ்ந்து தள்ளி விட்டார்... அன்பைக் கொட்டிவிட்டு... கிளாமரான அம்மா வேட... இரண்டெழுத்து நடிகை... ஒருவர் மூலம் சங்கதி வெ...

**பூ** நடிகைக்கு பொம்பி... அடிக்கடி குழந்தை பற்றிே... 'எம்மிடம் சொல்லி என்ன செ... சொல்லலாமே' என்று கேல...

**ஐஸ்** அழகியுடன் நடி... நடிகர். இப்போது ஐஸ் புரா... இளம் நடிகரை படப்பிடிப்... உற்சாகப்படுத்தினாராம் ஐஸ்... என்று பாராட்டுகிறார் நடி...

**அ**மெரிக்காவில் ... திரும்பிவந்து தன் பழைய ... களை புதுப்பித்து வாய்ப்புத் தே... 'அம்பி' நடிகை. இப்போது... நிபந்தனைகளை போட ... திருக்கிறார். அம்மாவாக ந... என்றால் முன்னணி ஹீரோக்... மட்டுமே நடிப்பேன் என்கி... எல்லாம் பழைய உறவுகள் ... மலர்ந்து விட்டதால் ஏற்பட்ட... தானாம்.

**ம**ந்ரமான நடிகை நடி... வருவதற்கு முன்னர் இர... விடுதி ஒன்றில் கவர்ச்சி... நடனம் ஆடிக் கொண்டி... ருந்தவராம். அப்போதே... பெரிய இடத்து நட்பு... கள் கைகூடியிருந்... ததாம்.


சத்யராஜ்-மீனா
படம்: வள்ளல்

## ஊர்வசியின் சூடு

நடிகை ஊர்வசி முந்தானை முடிச்சில் அறிமுகமானவர். இன்று வரை திறமையான நடிகை என்ற பெயரை காப்பாற்றிவருபவர். இப்போது அவரே ஒரு படத்தை இயக்கப் போகிறார். அந்தப் படத்தின் கதாநாயகன் மனோஜ். கே.ஜெயன். ஊர்வசி காதலிப்பதும் அவரைத்தான். காதலி இயக்க காதலன் இயங்கப்போகிறார்.

சம்பளம் அதிகம் கேட்பதாக சொல்லப்படும் புகார் தொடர்பாக ஊர்வசியின் பதில் இது: "எங்கள் சம்பளத்தை நாங்களா நிர்ணயிக்கிறோம்? கிடையவே கிடையாது. நாங்க நடிக்கிற படம் ஓடினால் விரும்பி வந்து சம்பளம் நிர்ணயிக்கிறாங்க.

சிலர் இருக்காங்க, படம் நல்லா ஓடினால்கூட தரவேண்டிய சம்பளத்தில் பாக்கி வைத்துவிடுவார்கள். எங்க சம்பளத்தை குறைக்கணும் என்று சொல்லுறவங்க முதலில் எங்களுக்கு சேரவேண்டிய பாக்கிகளை வசூல் பண்ணித்தரட்டும்" என்கிறார்.

## பிஸ்தா என்றால் பிஸ்தாத...

நக்மாவின் தங்கை ரோஷினியை கார்த்திக்தான் தட்டிக்கொடுத்து சிஷ்யாவில் நடிக்கவைத்தார். நக்மாவின் சிபாரிசை தட்டமுடியாமல் செய்த உதவி.

ஆனாலும் 'சிஷ்யா'காலைவாரிவிட்டது. வசூல் கோவிந்தா. இப்போது கார்த்திக்-நக்மா நடித்த 'பிஸ்தா' சக்கை போடு போடுகிறது.

கதையே கிடையாது. ஒரே நகைச்சுவைதான். ஐயப்ப பக்தர்கள் மட்டும் சற்று முகம் கோணுகிறார்களாம். காரணம், படத்தில் ஐயப்ப பக்தராக தோன்றி கலகலப்பூட்டுகிறார் கார்த்திக். ஐயப்ப பூசையில் பொப் இசை குழப்பம், மாலை போட்ட பக்தரான கார்த்திக் சாப்பிடும்போது உணவுத் தட்டில் முட்டை விழுவது போன்ற காட்சிகள்மீது ஐயப்ப பக்தர்கள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். இத்... இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் ஒரு ஐயப்ப பக்தர்தான்.

கார்த்திக்-மணிவண்ணன் கூட்டணி அடிக்கும் லூட்டிக்கு வாய்விட்டுச் சிரிக்கலா... நிச்சயம் நோய்விட்டுப் போகும். நக்மாவை மட்டும் எங்கெங்கு பிரமாண்டமாக படமாக்கவேண்டும் என்று நுட்பமாக தெரிந்துவைத்து கமராவை அவர்மீது மேயவிட்டிருக்கிறார்கள். ஜொள்ளர்களுக்கும் தலை சுற்றும். (சிஷ்யாவில் ரோஷினி எந்த மூலைக்கு)

'பிஸ்தா' நன்றாக ஓடுவதால் கார்த்திக் தன் மார்க்கெட்டை தக்கவைத்துக் கொள்ளலாம். தொடர்ந்து நடிப்பதா, விடுவதா என்று படங்களை ஒப்புக்கொள்ள பிகு பண்ணிய நக்மாவும் மறுபடி மனம்மாறி பிஸியாகலாம்.


கார்த்திக்-தேவயாணி
படம்: உதவிக்கு வரலாமா

## ரஜினியின் கலாட்டா

படப்பிடிப்பில் ரஜினிகாந்த் ரொம்ப ஜாலியான பேர்வழியாம். இதோ ரம்பா தன் அனுபவத்தை சொல்கிறார் கேளுங்கள்.

"நான் அருணாச்சலம் படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது, ரஜினிசார் என்கிட்டே "என்ன ரம்பா நீ.... எப்பவும் உம்முன்னு இருக்கே. சௌந்தர்யாகூட நடிக்கிறப்பதான் கலகலன்னு ஜாலியா இருக்கு" என்பார்.

அவர் அப்படிச் சொல்லும்போது 'அடடா! நிஜமாகவே நாம பயங்கரமான உம்மணா மூஞ்சிதான் போலிருக்கு'னு நினைச்சுக்குவேன்! படப்பிடிப்பு முடியறப்போ ஒரு நாள் சௌந்தர்யாகிட்டே இதைச் சொல்லி நான் வருத்தப்பட அவங்க ஆடிப்போயிட்டாங்க.

"ரம்பா! ரஜினிசாரை நம்பாதீங்க. என்கிட்டவந்து அப்படியே உல்டா அடிச்சு "ரம்பா மாதிரி நீ கலகலப்பாக இல்லேன்னு சொன்னாரு" என்று சௌந்தர்யா சொன்னதும்தான் ரஜினிசார் விளையாடி இருக்கார் எண்ணு புரிஞ்சுது" என்று சொல்கிறார் ரம்பா.

மற்றொரு அனுபவத்தையும் சொல்லிச் சிலிர்த்துப் போகிறார் ரம்பா. 'அருணாச்சலம்' படப் பூஜையன்று ரம்பா விடைபெற்றுத் திரும்பிய போது முதுகில் ஒரு அறை விழுந்ததாம். அலறியபடி திரும்பிப் பார்த்தா எல்லோரும் சாதுவாக அவரவர் பேச்சில் ஈடுபட்டிருந்தனர். குழப்பத்துடன் திரும்பி நடக்க மறுபடி முதுகில் அறை. பின்னர் ரம்பா துப்பறிந்து பார்த்தபோது அப்படி அடித்துக் கலாட்டா பண்ணியது ரஜினிதானாம்.

## பாம்புக் கனவு

நடிகை ரம்பா தூங்கமுன்னர் ஒரு டம்ளர் தண்ணீர் குடிப்பது வழக்கமாம். மெல்லிய பஞ்சு மெத்தையில்தான் படுப்பாராம். ரம்பா சொல்லும் மற்றொரு முக்கிய தகவல், சில நாட்களாகப் பாம்புகள் சண்டை பிடிப்பது போன்ற கனவு வருகிறதாம். காரணம் தெரியாமல் தவிக்கிறார் ரம்பா.

## 'உங்களால் முடியாது'

ரீசேர்ட், ட்றவுசர் அணிந்து மந்த்ரா குலுங்கிக் குலுங்கி ஓடினார். அதனைக் கண்ட வயோதிபர்கள் நாலுபேர் மந்த்ரா பின்னால் ஓடிவந்தனர். நாலுபேரும் கோடீஸ்வரர்கள்.

அவர்களைக் கண்டதும் மந்த்ரா 'ஹலோ யங் பிரண்ட்ஸ் என்னோடு ஈடு கொடுத்து ஓடமுடியுமா? என் வேகத்துக்கு நீங்க சமாளிக்க மாட்டீங்க.' என்று ஜோக் அடிக்கிறார்.

இது நிஜக்காட்சியல்ல. படக்காட்சி. 'கங்கா கௌரி' படத்துக்காக படமாக்கப் பட்டது. அருண், மந்த்ரா ஜோடியுடன் வடிவேலு, லியோனி, பாண்டு ஆகியோர் நடிக் கிறார்கள். இயக்கம்: மகேஸ்வரன். இசை: சிற்பி.


சுபாஸ்ரீ-பிரியங்கா
படம்: உரிமைப்போர்

## 'காதல் ஒழிக'

என்ன தலைப்பைப் பார்த்ததும் ஆச்சரியமாக இருக்கிறதா? ஆச்சா... யப்படுத்தி பிரபல... கவே சூட்டப்பட்ட ... தான் அது. அப் பெ... சூட்டி இருப்பவர் பார்...

காதலை பாராட்... பெயர்கள் சூட்டப்படு... தன் அடுத்தபடத்திற்... யான பெயரைச் ... பார்த்திபன் தைரிய... படத்தை இயக்குவது

## சொல்லுகிறோம்

நடிகைகள் மட்டுமல்ல. பழம் நடிகை
டனர். 'எம்.ஜி.ஆர். பட நாயகிகளில்
க சமீபத்தில் அப்பாஸை சந்தித்து
அப்பாஸ் அதிர்ந்து போகுமளவுக்கு
ாராம். தற்போது சில படங்களில்
நடித்துக் கொண்டிருப்பவர் அந்த
ாஸை சந்திக்கச் சென்ற இயக்குநர்
சிந்திருக்கிறது.

ள்ளைதான் பிடிக்கும். இப்போதெல்லாம்
பிடிப்புக்களில் பேசி அறுக்கிறாராம்.
உதவிகரமாக இருக்க வேண்டியவரிடம்
ன்றனர் சக நடிகைகள்.

ம் நடித்தார் அந்த 'சாந்தமான' இளம்
ாடிக்கொண்டிருக்கிறார். சாந்தமான
ாத நேரங்களிலும் தட்டிக்கொடுத்து
வே கிடையாது. ஜாலியாகப் பழகுவாங்க'

## துவட்டப்பட்ட நடிகர்

நடிகர் விக்னேஷ் திருமணம் செய்துவிட்டார். ஆனாலும் உபரியான தொடர்புகளையும் விடவில்லை. நடிகை சுவாதியுடனும் ஏகப்பட்ட நெருக்கம். அது ஒருபக்கமிருக்க மற்றொரு சிக்கலில் வகையாக மாட்டியிருக்கிறார்.

திருமணத்தின் முன்னர் சினிமா உலகம் சாராத பெண் ரசிகை ஒருவருடன் நட்பாக இருந்திருக்கிறார். விக்னேஷின் வீடு தேடிவந்து ரசிகை சந்திப்புக்கள் நடத்தினாராம். தன்னிடமிருந்த நூறு பவுண் நகையை கடனாகவும் கொடுத்து உதவினாராம். இப்போது நகையைக் கேட்டிருக்கிறார் ரசிகை. நடிகர் சாக்குப்போக்குச் சொன்னதால் ரசிகையின் கணவருக்கு விஷயம் தெரிந்துவிட்டது. அவர் ஒருபெரிய புள்ளி. அதனால் அடியாட்களுடன் வந்து நடிகரை துவட்டிவிட்டார். கொஞ்சம் கொஞ்சமாக திருப்பித்தருவதாக உறுதியளித்திருக்கிறார் நடிகர்.

## தேவயாணியின் ஆசை

கொஞ்சம் தளர்த்துவதில் தவறேயில்லை முன்னைய முடிவை என்கிறார் தேவயாணி. அதனால் கவர்ச்சியாக நடிக்க ஓகே சொல்ல ரெடியாகிவிட்டாராம். கவர்ச்சி நாயகியாக அறிமுகமானாலும் 'காதல் கோட்டை' வெற்றிக்குப் பின்னர் கவர்ச்சிக்கு டாட்டா காட்டினார் தேவயாணி. தொடர்ந்து டாட்டா காட்டினால் படவுலகமும் டாட்டா காட்டிவிடுமோ என்ற பயம் வந்துவிட்டது. முடிவை தளர்த்திவிட்டார்.

தேவயாணியின் கனவு என்ன தெரியுமா? சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். ஒஸ்கார் விருது பெறவேண்டுமாம். "கஷ்டம் என்பது எனக்குத் தெரியும் ஆனாலும் ஒரு முறை அதை தொட்டுப் பார்க்கணும்போல் இருக்கிறது." என்கிறார். முயற்சி திருவினையாகட்டும்.

## கமலின் சாடல்

சமீபத்தில் தமிழ்நாட்டில் சாதிக்கலவரம் தலைவிரித்தாடியது. மிகவும் வருந்தத்தக்க இக்கலவரம் தொடர்பாக கமல் கூறியுள்ள கருத்து இது:

"நான் அதிகம் படித்தவனல்ல. 8ம் வகுப்புவரைதான் படித்திருக்கிறேன். இத்தகைய கலவரங்கள் கூடாது என்று நான் நினைக்கிறேன். படிக்காத எனக்கு இருக்கும் இந்த அறிவு கலவரத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இல்லாமலா போய்விடும்? உண்மையைச் சொன்னால் இதில் அரசியல் தான் தலைதூக்கி நிற்கிறது. அரசியலில் மனிதம் மரித்துப் போய்விட்டது. அரசியல் என்றால் நான் குறிப்பிட்ட சிலரை மட்டும் சொல்வதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். இங்கிருப்பவர்களில் இருந்து கிளின்ரன்வரை எல்லோரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்!"

## போன இடத்தில்

'ஜீன்ஸ்' படப்பிடிப்புக்காக அமெரிக்காவில் இருந்த பிரசாந்துக்கு பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல பறந்து போயிருந்தார் அல்லவா அப்பா தியாகராஜன். போன இடத்தில் பிரசாந்தை வைத்து அமெரிக்காவில் மற்றொரு படத்தை தானே இயக்கவும் முடிவு செய்து, படப்பிடிப்பு நடத்தக்கூடிய இடங்களையும் பார்த்து வைத்துவிட்டு வந்து விட்டார்.

'ஜீன்ஸ்' வெற்றிபெறும் என்று நம்பி பிரசாந்தை வைத்து பல திட்டங்களை தீட்டியிருக்கிறார் அப்பா தியாகராஜன். ஜீன்ஸ் வந்தால்தான் திட்டங்கள் உருப்பெறும்.

## மீனா அக்கா

முன்னணி ஹீரோக்களுடன் மட்டும்தான் நடிப்பேன் என்று மீனா சொல்லிவருகிறார். இளம் ஹீரோக்களுடன் நடிப்பதை தவிர்த்தே வருகிறார். பல இளம் ஹீரோக்களுக்கு மீனாவுடன் ஒரு முறையாவது நடித்துவிட ஆசை. சமீபத்தில் தன் ஆசையை மீனாவிடம் சொன்னாராம் விஜய்.

அதற்கு மீனா சொன்ன பதில்: "நான் உங்களுடன் நடித்தால் அக்காமாதிரி இருப்பேன். அதனால் வேண்டாம் ப்ளீஸ்!"

## சுந்தர பாண்டியன்

விக்னேஷ்-மந்த்ரா இருவரும் ஜோடி சேரும் படம் 'புதுக் குடித்தனம்' கதை, திரைக்கதை, இயக்கம் ரகுவாசன். மணிவண்ணன், செந்தில், கோவை சரளா உட்பட பலர் நடிக்கின்றனர். இசை தேவா. பாடல்கள், பழனி பாரதி.

கார்த்திக் மூன்று வேடத்தில் நடிக்கும் படம் 'உதவிக்கு வரலாமா' என்பது தெரிந்த செய்தி. கார்த்திக் இரட்டை வேடத்தில் நடிக்கும் புதிய படம் 'சுந்தர பாண்டியன்'. சுந்தரம், பாண்டியன் என்று இரு பாத்திரங்களில் நடிக்கிறார். கதாநாயகிகளில் ஒருவர் ஹீரா.

இயக்கம்: ஆர்.ரகு.
இசை: சிற்பி.

**முகப்பில்**

கனகா
சங்கீதா
வெங்கடேஷ்





சாக்ஷி
படம்: கண்மணி ஒரு கவிதை

## மந்த்ராவின் சீற்றம்

நடிகை மந்த்ராவுக்கு சினிமா நிருபர்கள்மீது கோபம் என்றால் அப்படியொரு கோபம். "என் நடிப்பைப் பற்றி எழுதுங்க. வேண்டாம் என்றா சொன்னேன். என் அங்கங்களைப் பற்றி ஏன் எழுதுகிறீர்கள்? அங்கங்களை பெரிதாக பிளாஸ்ரிக் சர்ஜரி செய்ததாகக்கூட சில பத்திரிகைகள் என்னைப் பற்றி இல்லாததும், பொல்லாததும் எழுதுகின்றன. நான் இயற்கையாகவே வளமான தேகமுள்ள பெண்தான்" என்று பொரிந்து தள்ளுகிறார். மந்த்ராவிடம் ஒரு கேள்வி, நீங்கள் எந்தப் படத்தில்தான் நடித்திருக்கிறீர்கள், நடிப்பைப் பாராட்ட?

மந்த்ரா பற்றித்தான் இப்போது தினம் ஒரு கிசுகிசு கோடம்பாக்க வட்டாரத்தில் அடிபடுகிறது. சமீபத்திய கிசு கிசு அந்த மூன்றெழுத்து திலக வாரிசுடன் ராசியானதால் இப்போதெல்லாம் அருண் நடிகரை சந்திப்பதில்லையாம் மந்த்ரா.



## ஷில்பா தரிசனம்

ஆர்.கே.செல்வமணி இயக்க மம்முட்டியின் ஜோடியாக தரிசனம் தரப்போகிறார் ஷில்பா ஷிரோத்கர். தரிசனம் எப்படி இருக்கும் என்பதற்கு சிறுதுளி உதாரணம் இங்கே தேடினால் காணலாம்.

இந்திப் படவுலகில் நம்பர் வன் இடத்தில் இல்லாவிட்டாலும், அதற்கான சகல ரகமான, சகல விதமான தகுதிகளும் ஷில்பா ஷிரோத்கரிடம் இருக்கின்றன. துணிச்சலைப் பற்றி சொல்லவேண்டியதில்லை.

மும்பாயில் இருந்து வந்த ஷில்பா ஷிரோத்கரை களைப்புத்தீர தண்ணிரில் போட்டு நனைத்துவிட்டார்கள். ரசிகர்களையும் கவர்ச்சி மழையால் குளிரவைத்து தமிழ்ப் படவுலகில் நீடிப்பாரா, மாட்டாரா? அரசியல் வரட்டும், பொறுத்திருப்போம்.



மந்த்ரா
படம்: தேடினேன் வந்தது

## மினி சினி

* விஜயகாந்தை வைத்து 'வைதேகி காத்திருந்தாள்', 'என் ஆசை மச்சான்' போன்ற படங்களை இயக்கிய ஆர்.சுந்தர்ராஜன், மீண்டும் விஜயகாந்த் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.
* 'செல்வா' படத்தில் அறிமுகமான ரீவா, தற்போது 'ரோஜா மலரே' என்ற படத்தில் நடித்து வருகிறார். இவர் அண்மையில் 'மிஸ்டர் இந்தியா', 'பண்டிட் குயின்' போன்ற படங்களை இயக்கிய சேகர்கபூர் இயக்கும் இந்திப்படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.
* கே.பாக்யராஜ் இயக்கி நடித்து வரும் 'வேட்டிய மடிச்சுக்கட்டு' படத்திற்கான பாடல் காட்சியொன்றைக் கனடாவில் படமாக்கவுள்ளார். அத்துடன் அவரது தயாரிப்பில் உருவாகி வரும் 'கபடி கபடி' படத்திற்கான பாடல்காட்சி ஒன்றையும் கனடாவில் படமாக்கவுள்ளார்.
* 'அருணாச்சலம்' படத்தில் ரஜினியுடன் நடித்திருந்த போதும் புதிய படவாய்ப்புக்கள் எதுவும் சௌந்தர்யாவுக்கு வந்து குவிந்துவிடவில்லை. சமீபத்தில் இவருக்கு மலையாளப்படம் ஒன்றில் நடிக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. கதாநாயகன்-சுரேஷ்கோபி.
* 'இளைஞர் அணி' படத்தில் கார்த்திக்கும், 'பூவே உனக்காக' படத்தில் முரளியும் ஒரே ஒரு பாடல் காட்சியில் மட்டும் நடித்திருந்தனர். தற்போது கேயார் இயக்கும் 'காதல் ரோஜாவே' படத்தில் ராம்கி ஒரு பாடல் காட்சியில் மட்டும் தோன்றி நடித்துள்ளார்.
* இதுவரை தனது இயக்கத்தில் மட்டுமே நடித்து வந்த கே.எஸ்.ரவிக்குமார் 'பகைவன்' படத்தில் ரமேஷ் கிருஷ்ணன் இயக்கத்தில் நகைச்சுவை வேடத்திலும், ஆர்.சி.சக்தி இயக்கும் 'இத்தனை நாள் எங்கிருந்தாய்' படத்தில் காவல்துறை அதிகாரி வேடத்திலும் நடித்துவருகிறார்.
* 'அரவிந்தன்' படத்தை இயக்கிய டி.நாகராஜன் அடுத்து 'அன்புடன்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இந்தப் படத்தில் கதாநாயகியாக 'ரங்கீலா', 'இந்தியன்' படங்களில் நடித்துள்ள ஊர்மிளா நடிக்கவுள்ளனர்.
* ஆர்.பி.சௌத்ரி தயாரித்த 'லவ்டுடே' படம் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் பாலசேகர். இவர் அடுத்து இயக்கும் படத்தையும் ஆர்.பி.சௌத்திரியே தயாரிக்கிறார். இப்படத்திற்கு 'சொல்லாமலே' என்று பெயரிடப்பட்டுள்ளது.
* சில மாதங்களுக்கு முன் வெளியான 'அரவிந்தன்' படத்தில் கௌரவ வேடத்தில் நடித்துள்ள பார்த்திபன், கே.எஸ். அதியமான் இயக்கும் 'சொர்ணமுகி' படத்திலும் கௌரவ வேடத்தில் நடிக்கவுள்ளார்.
* 'கண்ணுபடப்போகுது' படத்தில் ராமராஜனுக்கு ஜோடியாக சுவலட்சுமி நடிப்பதாக அறிவிக்கப்பட்டது. இப்போது சுவலட்சுமிக்குப் பதிலாக ரோஜா நடிக்கிறார். ராமராஜன்-ரோஜா ஜோடி சேரும் முதல் படமிது.



www.padippakam.com
படிப்பகம்

# கண்படுமே ஊரார் கண்படுமே...!

அழகான பெண்கள் மீது அனேகமான கண்கள் மொய்ப்பதுண்டு. எல்லாக் கண்களும் கண்ணல்ல... கொடிய கண்களும் அவற்றில் அடங்கும். கண் கொதி; கண்ணூறு என்றெல்லாம் நம் முன்னோர் கூறிவைத்தவை வெறும் கட்டுக்கதையுமல்ல; மூட நம்பிக்கையுமல்ல.

குழந்தைகளின் குறும்புத்தனத்தையெல்லாம் மெச்சிப் பலரிடமும் பெற்றார் புகழ்வதுண்டு. அப்பெற்றாரின் கண்களும் தங்கள் குழந்தைகளின் மீது பட்டுத் தீங்கு விளைவித்து விடுவதுமுண்டு.

கண்ணூறு என்பது ஒரு வகை உள வசியத்(Mesmerism)துடன் தொடர்புடையது. ஒரே இடத்தை- ஒரே பொருளை அல்லது ஒரு நபரைப் பலர் பார்த்து தங்கள் கருத்தை அத்திசையில் பிரயோகிக்கும் போது அப்பொருள் அல்லது அந்நபர் தாக்கத்துக்குள்ளாகிறார். அழகிய பெண்கள் மீது



திருஷ்டி ஏற்பட்டுப் பாதிப்புக்குள்ளாவதும் இதனால்தான்.

பிறர் கண்களால் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கவே நம் முன்னோர் பெண்களுக்கு மஞ்சளின் உபயோகத்தைக் கற்பித்துள்ளனர். மஞ்சள் பூசிக்குளிப்பதைப் பழக்கத்தில் கொண்டுள்ள பெண்களை கண்ணூறு பாதிக்காது.

மஞ்சள் ஒரு கிருமிநாசினியும் கூட. கறிகளுக்கு மஞ்சள் போடுவதும், வீட்டில் மஞ்சள் கரைத்துத் தெளிப்பதும் நோய்க் கிருமிகளை அழித்தொழிப்பதற்காகத்தான்.

பூச்சிக்கடி, சருமக்கிரந்தி ஆகியவற்றை மஞ்சள் தடவியே குணமாக்கிவிடலாம். சிறிதளவு மஞ்சள் துண்டை ஒரு ஊசியில் குத்தி நெருப்பில் அதை எரித்து அதிலிருந்து எழும் புகையை மூக்குத் துவாரத்தின் அருகில் பிடித்து சிறிதளவு உள் இழுத்தால் தலைவலி, தடுமல், மூக்கடைப்பு குணமாகும். மஞ்சள் தண்ணீரைச் சிறிதளவு உட்கொண்டால் காமாலை நோய் நீங்கிவிடும்.

# காலையில் எழுந்தவுடன்...

காலையில் எழுந்தவுடன் மலம் கழித்துவிட வேண்டும். முறையாக மலம் கழிக்காவிட்டால் அன்று எக்காரியமும் தூய்மையாக நடைபெறாது. எல்லாமே அதிருப்தியாகவே இருக்கும்.

காலையில் சுகமாக மலம் கழிய வேண்டுமென்றால் அதற்காக எந்த ஒரு மருந்துக் கடையையும் நாடி ஓட வேண்டாம். நம் கைக்கெட்டும் தூரத்தில் இயற்கை மருந்து இருக்கிறது.

காலையில் எழுந்தவுடன் வெறும் நீரினால் வாயை அலம்பிவிட்டு மளமளவென்று சுட்டாறிய தண்ணீர் 4 தம்ளர் பருகுங்கள். இவ்வாறு நீர் பருகிய அன்றைய தினமே உடனடியாக மலம் கழிந்துவிடும் என்று எதிர்பார்க்க வேண்டாம். இதே பழக்கத்தை தினசரி நடைமுறையில் கொண்டு வாருங்கள். ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் நல்ல பலன் கிடைக்கும். தண்ணீர் பருகியதும் உடன் மலகூடத்தைத் தேடி ஓட ஆரம்பித்துவிடுவீர்கள்!

உடலிலுள்ள பலதரப்பட்ட நோய்கள் நீர்ச் சிகிச்சையினாலே குணமாகிவிடும். உடல் சூடே பல நோய்களுக்கும் காரண



மாகும். உடலினுள் உள்ள சூட்டைத்தணிக்க தண்ணீரை விட வேறு எந்த மருந்தும் உதவப்போவதில்லை. ஒரு நாளைக்குச் சராசரி 8 தம்ளர் தண்ணீர் குடித்தாலே போதுமானது.

பசி எடுக்கும் போது நீரைப் பருகி வயிற்றை நிரப்பலாகாது. புசிப்பதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னர் நீர் அருந்தலாம்.

# பால்-பால் தாய்ப்பால்



குழந்தைகள் பிறந்து முதல் 3 மாதங்கள் வரை தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். அதன்பின்னர் கொதித்து ஆறி வடிகட்டிய நீர் ஒரு நாளைக்கு மூன்று தேக்கரண்டி வீதம் கொடுக்கலாம். குழந்தைக்கு வேண்டிய நீர் தாய்ப்பாலிலேயே உண்டு.

குழந்தை தாய்ப்பால் குடித்து இரண்டு மணி நேரத்துக்குள் அழுமானால் அது பசியினால் அழவில்லை என்று தெரிந்து கொள்ளலாம். வெப்பமான காலத்தில் தொண்டை வரண்டு போயிருக்கும். அவ்வேளையில் மட்டும் கொதித்து ஆறிய நீரைப் பருகக் கொடுக்கலாம்.

குழந்தைக்குத் தேவையான சத்துக்களெல்லாம் தாய்ப்பாலிலேயே இருக்கின்றன. குழந்தை தேகாரோக்கியத்துடன் இருக்குமானால் வேறு 'டொனிக்'குகளோ போஷாக்குணவுகளோ அவசியமில்லை.

தாய்மாருக்கு காய்ச்சல், தடுமல், இருக்குமானால் அவர்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதை நிறுத்தி விடுவார்கள். அது தவறு. அத்தகைய சிறிய உபாதைகள் இருந்தாலும் தாய்ப்பால் குழந்தையைப் பாதிக்காது. ஆனால் பால் கொடுக்கும் தாய்மார் தாங்கள் உண்ணும் உணவிலும் ஏனைய பழக்கவழக்கங்களிலும் போதிய கவனம் செலுத்த வேண்டும். தங்கள் உடைகளையும் பயன்படுத்தும் ஏனையபொருட்களையும் துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.

## டிப்ஸ்

அடிக்கடி தடுமல் இருமல் ஏற்படுமானால் ஆப்பிள் பழம் சாப்பிட்டு வர கட்டுப்படும்.

தலைமுடி நன்றாக வளர திராட்சை வற்றல் சாப்பிடலாம்.

நீரில் வேக வைக்காமல் வெறுமனே வெந்நீரில் கழுவிய காய்கறிகளை அடிக்கடி உண்ண வேண்டும். இதனால் மூளை சுறுசுறுப்படைவதுடன் கண்பார்வை துலங்கும். சோர்வும் நீங்கும்.

பீட்ரூட், கரட் மற்றும் பசலிக்கீரை ஆகியவற்றையும் பச்சையாக உண்பதனால் உடலுக்கு வேண்டிய இரும்புச் சத்துக் கிடைக்கிறது. சருமநோய்களும் நீங்கிவிடும்.

# நரைக்கு போட முடியுமா திரை?

சிலருக்கு மிக இளவயதிலேயே நரை விழுந்து விடுகிறது. வேறு சிலருக்கு 60 வயதைத் தாண்டிய பின்பும் தலைமயிர் கன்னங்கரேலென்றிருக்கும். இதற்குக் காரணம் பரம்பரையிலுள்ள குறைபாடாகும்.

பரம்பரை காரணமாக முடி நரைப்பதைக் குறைப்பது கடினம். இதற்கு 'டை' பூசித்தான் நிறத்தை மறைக்க முடியும். 'டை'- அதாவது சாயம் உற்பத்தி செய்ய பலதரப் பட்ட இரசாயனக் கலவைகள் சேர்க்கப்படுகின்றன. சிலருக்கு சில இரசாயனக் கலவைகள் ஒத்துக் கொள்வதில்லை. ஆகவே அவரவருக்கு ஒத்துவரக்கூடிய டையையே தெரிவு செய்வது நல்லது.



தங்களுக்கு ஒத்துக்கொள்ளக் கூடிய 'டை' எது என்று கண்டுபிடிப்பது, அப்பொருளை வாங்கிப் பயன்படுத்தி மட்டுமே அறிந்து கொள்ள முடியும். இதில் வைத்தியரின் உதவியை நாடிப் பயனில்லை.

முடியைக் கருமையாக வைத்திருக்க உதவுவது 'மெலான்' எனும் ஒரு வகைத் துகள்தான். 40 வயதைத் தாண்டியதும் இந்தத் துகள்கள் உற்பத்தியாவதில்லை. போதிய போஷாக்கு உணவு உட்கொள்ளாவிட்டாலும் முடி நரைத்துவிடும். அதிக கவலை, தூக்கம் கெட்டுப் போதல் ஆகியவற்றாலும் உரிய ஹோமோன்கள் உற்பத்தி சீராக இருப்பதில்லை. இவையும் நரை ஏற்படக் காரணமாகிவிடுகின்றன.

நெல்லிக்காயைப் பயன்படுத்துவதால் இளநரை வராமல் தடுக்கலாம், கரட், பீட்ரூட், கொடிமுந்திரி வத்தல், அன்னாசிப்பழம் போன்றவற்றில் சொரோலின் சத்து அதிகம் உள்ளது. இவற்றை அவ்வப்போது உணவில் சேர்த்து வந்தால் இள நரையைத் தடுக்கலாம்.

தலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நரை தென்பட்டால் அவற்றை ஒவ்வொன்றாகப் பிடுங்கி எறிவதில் நம்மவர்கள் ஈடுபடுவதுண்டு. ஆனால் இது தவறானது. இதனால் மேலும் நரை மயிர் கூடுதலாக முளைக்க ஆரம்பித்து விடக்கூடும்.

## முடி உதிர்காலம்

முடி கொட்டுவதும் ஒரு பரம்பரை விவகாரம். சிலருக்கு மலேரியா, நெருப்புக் காய்ச்சல், அம்மை, காமாலை போன்ற நோய்கள் வந்தால் முடி கொட்டிவிடும்.

கர்ப்பிணிப் பெண்களுக்கும் முடி கொட்டும். சில பெண்களுக்கு குழந்தை பிறந்தவுடன், கொட்டும், சிலருக்கு கர்ப்பமுற்றிருக்கும் போது கொட்டும் முடிகள், குழந்தை பிறந்து அடுத்தடுத்த மாதங்களில் முளைத்துவிடவும் கூடும். அவரவர் உடம்பைப் பொறுத்தே இது அமையும்.

பொதுவாக பெண்கள் குழந்தை பெற்றபின் உதிரப் பெருக்கு இருக்கும். இதன் பயனாகவும் இரும்புச்சத்து இன்மையினாலும் முடி உதிர்ந்துவிடும். தக்க மருத்துவரிடம் ஆலோசனை பெறவும்.

வயதாக ஆக மயிர்க்கால்கள் சுருங்கிவிடுகின்றன. முடி உதிர்ந்த இடங்களில் வழுக்கை ஏற்படுமானால் அந்த இடத்தில் மீண்டும் மயிர் வளர வைத்தல் இயலாத காரியம்.

வழுக்கை விழுமுன்- மயிர்கள் வளர உதவும் 'எண்ட்ரோஜன்' எனப்படும் சுரப்பினை ஊக்குவிக்க மருத்துவர்களின் உதவியை நாடவேண்டும்.



தலையில் பொடுகு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கூடுமானவரை தலையைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் வாரத்தில் இரண்டு தடவையாவது தலையைத் தண்ணீரால் சுத்தமாகக் கழுவ வேண்டும். தலைமுடியில் நீர்ப்பிடிப்பு இல்லாமல் சுத்தமான துணியால் துடைத்துவிட வேண்டும். தலைக்கு சோப்புப் போடுவதைத் தவிர்த்து தரமான ஷம்பூ பாவிக்கலாம். ஷம்பூ போடும்போது முடி உதிர்ந்தால் அதனைப் பயன்படுத்துவதை நிறுத்திக் கொள்வது நல்லது.

சீயக்காய் மற்றும் வெந்தயம் சேர்த்து நீரில் வேகவைத்து அவற்றை எடுத்து நன்றாகக் கசக்கி தலையில் நன்கு அழுத்தித் தேய்க்க வேண்டும். 10 நிமிடங்களின் பின்னர் வெதுவெதுப்பான நீரில் முழுகினால், முடியும் சுத்தமாகும் மயிர்க்கால்களும் உறுதிபெறும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? திக்குவல்லை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

ஆர். செஷ்மிலா
177, யோனகபுர, திக்குவல்லை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை BV

பெயர்:....................

முகவரி:....................

....................

கையொப்பம்:....................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 21-06-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுகந்தினி

## தயிர் அவல் பிரட்டல்

தேவையானவை:-

அவல்- 100 கிராம்.
தயிர்- 1 கப் (புளிக்காதது)
கரட்- 2 சிறியது.
வெள்ளரிக்காய்- 2 சிறியது.
தக்காளி- 2 சிறியது.
பச்சை மிளகாய்- 2
ஈர வெங்காயம்- 6 பல்
கடுகு- 1 தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு- 1 தேக்கரண்டி
கறிவேப்பிலை- தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய்- 1 மேசைக்கரண்டி.

செய்முறை:-

அவலை தண்ணீரில் களைந்து பின்னர் நீரில்லாமல் பிழிந்து கொள்ளவும். 10 நிமிடங்களில் அவல் நன்றாக இளகி இருக்கும். கரட், வெள்ளரிக்காய் ஆகியவற்றை பூப்போல துருவிக் கொள்ளவும், தக்காளியை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும், அவலுடன் கரட், வெள்ளரிக்காய் தக்காளி, தயிர், சிறிதளவாக அரிந்த பச்சை மிளகாய் மற்றும் உப்பு ஆகியவற்றைப் பொட்டு நன்றாகக் கலக்கிக்கொள்ளவும்.

வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெயை ஊற்றி நறுக்கிய வெங்காயம், கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டு கடுகு பொரித்ததும் அவல் கலவையில் போட்டுத் தாளித்து பரிமாறலாம்.

# 'பெரிசு'கள் சொன்னாக் கேட்டுக்கணும்!

வீடுகளில் சின்னஞ்சிறுசுகள்- அந்த வீட்டின் பிரதான தலைவன்/தலைவி தாமே தான் என்று சாதிப்பார்கள். சிறுவர்கள் மட்டும்தான் இவ்வாறு அடம்பிடிப்பார்கள் என்பதில்லை. வீட்டிலுள்ள முதியவர்களும் இவ்வாறு ஆதிக்கம் செலுத்துவார்கள்.

குறிப்பாக வீட்டில் ஏதாவது விசேஷம் நடைபெற்றால் இவர்களின் குரல்தான் ஓங்கி ஒலிக்கும். தமது பிள்ளைகளுக்கோ, பிள்ளைகளைக் கைப்பிடித்த மருமக்களுக்கோ- பேரப்பிள்ளைகளுக்கோ எதுவுமே தெரியாது, என்று முடிவு கட்டிவிடுவார்கள். தாங்கள் நினைத்தபடிதான் அந்த வீட்டில் எல்லாம் நடைபெற வேண்டும் என்று ஆதிக்கம் செலுத்துவார்கள்.

தங்களுடைய இளமைக் காலத்தில்- தங்கள் வீட்டுப் பெரியவர்கள் தங்கள் மீது சவாரிவிட்ட மாதிரி, தாங்களும், தங்கள் வீட்டிலுள்ள தங்கள் சந்ததியினர் மீதும் ஆதிக்கம் செலுத்த நினைப்பதனால் ஏற்படும் தாக்கம்தான் இது.

ஓடி ஆடி வேலை செய்ய முடியாத நிலையிலும்- தங்கள் முன்னால் ஓடி ஓடி வேலைகள் செய்யும் மக்கள், மருமக்கள் மீது குறைகளைக் கூற ஆரம்பித்து விடுவார்கள்.

அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் நமக்கு ஒத்துவராது போனாலும் பெரியவர்கள் கூறுவதைக் கேட்க வேண்டும். அவர்கள் கூற்றை நாம் சிரத்தையுடன் கவனிப்பதாக 'நடித்தாவது' காண்பிப்பது வரவேற்கத்தக்கது. இதனால் அவர்களின் மனம் புண்படாமல் பார்த்துக் கொள்ளலாம்.

என்ன இனிமேல் 'பெரிசு'களின் மனம் கோணாதபடி நடப்பீர்கள்தானே?

# தேன் இருக்கப் பயமேன்?

சுத்தமான தேன் ஒரு போத்தல் உங்கள் வீட்டில் இருப்பது இன்றியமையாததாகும்.

நம்மவர்களுக்கு இதய சம்பந்தமான நோய்களினால் நொந்தரவு ஏற்படுவது சகஜம். காலையில் இரண்டு தேக்கரண்டி தேனை உட்கொண்டு வந்தால் இருதயப் பலவீனம் நீங்கிவிடும். இருதயத்துடன் தொடர்புடைய நோய்களும் குணமாகும்.

- ★ இரத்த அழுத்தமுள்ளவர்கள் காலையில் அரை முடி எலுமிச்சம் பழச்சாறை இரண்டு அவுன்ஸ் வெந்நீரில் கலந்து அதனுடன் இரண்டு தேக்கரண்டி தேன் விட்டுச் சாப்பிட்டு வந்தால் அழுத்தம் சமப்பட்டுவிடும்.
- ★ பனிக்காலத்தில் தடுமல், இருமல் ஏற்பட்டு தொண்டை வலி இருக்குமானால் சிறிதளவு தேனை தொண்டையில் (வெளிப்புறத்தில்) பூசிவந்தால் குணமாகி விடும்.
- ★ பித்தத்தினால் சங்கடப்படுபவர்கள் இஞ்சியை தோல் சீவி சிறு சிறு துண்டுகளாக்கி தேனில் ஊற வைத்து உண்டு வந்தால் குணம் காணலாம்.
- ★ எலுமிச்சம் பழச்சாறில் தேன் துளிகள் சிலவற்றைச் சேர்த்து முகத்தில் தேய்த்து சிறிது நேரம் ஊறியபின் கழுவி வந்தால் முகத்திலுள்ள கரும் புள்ளிகள் மறைவதுடன் முகம் பளபளவென்றிருக்கும்.
- ★ பூச்சிக் கடியினால் அல்லது சிறு சிரங்குகளினால் உபத்திரவமிருக்குமானால் வெள்ளைப் பூண்டைப் பொடிப் பொடியாக நறுக்கி அத்துடன் தேன் கலந்து தடவினால் குணமாகிவிடும்.
- ★ சிறு காயங்கள் மீதும் தேன் தடவினால் குணமாவதுடன் காயத்தினால் ஏற்படும் வடுவும் நீங்கிவிடும்.


## தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு— அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 15

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

# தேன் கிண்ணம்

## உன்னில் நான்

உன் சிரிப்பு
சில்லறையாகும் போது தானே,
எனக்கும் கொஞ்சம்
சந்தோஷம் வாங்க முடிகிறது?
*
நீ எட்டி உதைக்கும்
உன் பிஞ்சுக் கால்கள்
தட்டி விடுவது
உனது நேயத்தையல்ல,
என்-
மனதுக்குள்ளே அழுதுகொள்ளும்
சோகத்தைத்தான்!
*
உனக்காக எதையும்
சேமிக்கவில்லை என்றா
அடிக்கடி நீ-
கையில் கிடைப்பதை
கட்டிலோர இட்டையில்
இட்டு விடுகிறாய்?
*
இடம் பார்த்து
நடக்கும் புத்தி
உனக்கு இல்லை தான்!
அதனால் தானே
என. கால் பாதங்களில்கூட
முத்தம் தர
உன்னால் முடிகிறது!
*
உன் வயது
வருடம் காணாத போதும்!
இவனில்-
நீண்டகால நேசமாய்
நெஞ்சு சுமக்கும்!
*
உனக்கென ஓரிடம்
ஒதுக்கித் தந்தாலும்,
நித்திரையில்கூட-
பிரியாதிருக்கவே ப்ரியப்படும்
உன்னை நினைத்தால் தான்
எந்தன்-
ஈரக் கண்ணில் ஒற்றையாறு
ஓடி வழியும்!
*
இனியும் நீ-
என்னை விட்டு
எட்டி நின்றாலும்,
என்றும்-
என் பெயர் மட்டும்
உன்னில் 'இனிசியலா'ய்
ஒட்டியிருக்கும்-மறவாதே!
*

எம்.எம்.எ.சாதிகீன்-
கொழும்பு-12.

## சுதந்திர ஒளி

நெருப்பில் சமைக்கலாம்!
நிம்மதியாய்
உயிர் வாழ்தல் இயலுமோ?
**
யுத்த நெருப்பில்
நானும்-
எனது மண்ணும்
எரிந்து சாம்பலாகும் நாள்
நாளையும் தான்!
**
ஆனந்த உதய மொன்றை
அனுபவித்ததே இல்லை;
துப்பாக்கி வேட்டொலிகள்
பொழுதின்-
கதவுகளைத் திறக்கும்!
**
அஸ்தமன நேரம்
வாழ்வும் சேர்ந்து
அஸ்தமனமாகும்.
**
அவலந்தான் நாள் முழுக்க!
நிம்மதி என்பது
தொடுவானம் போலல்லவா
தோன்றுகின்றது?
**
இந்த மண்ணில்
எதிர்பார்ப்புகளை நான்
எத்தனை நாளுக்குத்தான்
சமப்பது?
**
வைராக்கியங்களால்
கனத்துப் போச்சு இதயம்!
நம்பிக்கைகள்-
தோல்வியின்
அணியில்தான்
தொடர்ந்து போகின்றன!
**
சோகங்களின் பெயரால்
பாரம் பொறுத்த
மலைகளையல்லவா
நெஞ்சில் சுமந்து
நிற்கின்றேன்!
**
அகல மறக்கின்றன
அமாவாசை இரவுகள்
என்றாலும்-
நான் நம்புகிறேன்!
எனது சுதந்திரம்
பூரண வெளிச்சம் பெற்று
மண் முழுக்க பரவுவதை!
**

காத்தான்குடி அனு.

## தடங்கள்

உன் நினைவரித்து
காலங்கள் எனைத்தின்றிற்று
திக்கற்று திணறினேன் அன்பே!
***
எமைக்கடந்து போயின வஸந்தங்கள்!
என்னருகில் நீயும்
உன்னருகில் நானுமான
அக்கணங்கள் இனிவருமோ?
***
முங்கிக்குளித்த தாமரைக் குளமும்
முத்தமிட்ட 'ஜே மர' நிழலும்
உன் திருமண நாளில்
குமுறின: என்னைப் போல் பொருமினவோ...
யாரறிவர்?
***
உன்னுடனான
காதற் தடங்கள்
கல்வெட்டென பதிந்திற்றே
என் மனப்பாறையில்!
***
ஒரு சவுக்கெடுத்து
சுழற்றி வீசிற்று உன்னது கையெழுத்து!
***
எப்படியடி மறத்தல் சாத்தியம்...
நீயொரு சூரியனாய் உதித்து
இரவாய் குளிர்ந்து,
நிலவாய் எரிந்து
என்னுள் ஓடிக்கொண்டிருக்க....?

என். சுஹா-கள்-எலிய

## அன்றும்... இன்றும்...

காற்றின் கவிதையால்
கடலும் வானமும்
பாடியே வாழ்ந்தன;
கானமிசைத்தன.
••
சாலைகள் எல்லாம்
சோலைகளாக,
இளமை மேகம்
வான வீதியில்
வலம் வந்தது.
••
வண்ணத்தாரகையும்
பூரணச் சந்திரனும்
எங்கள் கிராமத்தின்
மூலைமுடுக்கெங்கும்
ஊர்வலம் செய்தன. தவிர,
-அமாவாசையும்
அட்டமியுமல்ல-
••
இன்று...
வான்முகில் ஏதோ
வாடிக்கிடந்தது;
வானத்தில் வேதனை
மேகங்கள்
நச்சரித்தன.

தென்றல்
தேகத்தில்
சுட்டுச் சென்றது.
••
சுற்றும் முற்றும்
சடசடத்தது.
புதிதாக ஏதோ
புகுந்துவிட்டது.
••
எங்கள்
காற்றும் குலைந்தது;
கானம் முடிந்தது;
ஆசைகள் எல்லாம்
அமாவாசையாயிற்று.
••
கரிய மேகங்கள்
கதிரவன் வரவை
கடைந்தெடுத்தன;
-மனமெல்லாம்
மரணயோகம்-!
••

யாழ்-ஞானகனேசன்.

## நினைவு நாட்களான பண்டிகைகள்!

தைப்பொங்கல்
சித்திரை
தீபாவளி
என்று
வருடப்
'பிறப்புகள்'
இல்லை.
0-0
எல்லாம்
'இறப்புக்கள்'தான்.
0-0
தை மாதம்
'சுப்ப சொனிக்'கால்
கொட்டிவிட்டது
விழுந்து
அப்பாவும்:
சித்திரை மாதம்
'செல்' விழுந்து
அம்மாவும்
சொல்லாமல்
கொள்ளாமல்
சொந்தத்தை
விட்டனர்.
0-0
தைப்பொங்கல்
வந்தால்
அப்பா
நினைவு நாளும்,
சித்திரை
வந்தால்
அம்மா
நினைவு நாளும்
வரும்...!
0-0
'ஒரு' வருடம்
பிறந்தால்
'இரு' இறப்புக்கள்
நினைவூட்டப்படும்.
0-0
எமது
வரவு செலவில்-
பிறப்பே
துண்டு விழும்
தொகை!
0-0

மாரிமுத்து யோகராஜன்,
அக்கரைப்பற்று-02.

## புரியவில்லை.... ஏன் இப்படி...?

நான் சிரிக்கிறேன்...
எனக்காக அல்ல,
உன் முன்,
அழக்கூடாது
என்பதற்காக!
*

நான் பேசுகிறேன்...
உன்னுடன் தான்: அது
உன் அன்புக்காக அல்ல,
உன் முன்,
ஊமையாகக் கூடாது
என்பதற்காக!
*

நான் வருவேன்...
உன்னுடன்-அது
துணைக்கு அல்ல-நீ
வேறுயாருடனும்
செல்லக்கூடாது
என்பதற்காக!
*

நான் இருப்பேன்...
உன்னுடன்-அது
என் சுயநலத்துக்கல்ல-நீ
தனித்திருக்கக் கூடாது
என்பதற்காக!
*
???

எஸ்.சிவா, வட்டவளை.



## பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப்போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள். பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் 200 பேரின் பெயர் விபரங்கள் தொடர்ந்து வெளியாகும். முதல் 80 பேரின் பெயர் விபரங்கள் கடந்த வாரங்களில் வெளியாகியிருந்தன. அடுத்த 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ:

81. ரி.ஜே.கொலின்
503,மீகனுவ
அம்பிட்டிய, கண்டி
82. எஸ்.எச்.கே.நிசா
த.பெ.இல: 67047
கோட் இல: 43761, பயான், குவைத்.
83. எம்.நளினிதேவி
எஃப் 2/4, கம்கருபுர தொடர் மாடி
கொழும்பு-14.
84. எஸ்.பிரபாகரன்
மாதெனிய
வறகாப்பொல.
85. ம.ஆனந்தேஸ்வரி
விபுலானந்தர் வீதி
வாழைச்சேனை.
86. திருமதி.அ.ஜெகசிங்கம்
873 2/4, மருதானை வீதி
கொழும்பு-10.
87. எம்.எஸ்.எஸ்.ரம்ஸியா
ஜி 25, பொன்சோ பில்டிங்
பதுளுபிடிய, பதுளை.
88. க.சுரேஸ்குமார்
85, கட்டுவ றோட்
ஏத்துக்கால, நீர்கொழும்பு.
89. ஜி.சுகந்தி
85/15, கொள்ளுப்பிட்டி ஒழுங்கை
கொழும்பு-03.
90. ஜி.வேதநாயகம்
கந்தசேனை தோட்டம்
நமுனுகுல.
91. நளினி தங்கவேல்
12/07, பெமிலி வீதி
நாவலப்பிட்டி.
92. திருமதி.சிவசுந்தரம்
198, கோவிலடி
மஸ்கெலியா.
93. பி.விஜயகுமார்
கலதுர குரோசரி
மெத-கலதுர, இரத்தினபுரி.
94. இ.அண்ணாத்துரை
ஈச்சந்தீவு-3.
கிண்ணியா.
95. த.டிலோஜன்
127, மத்திய வீதி
திருகோணமலை.
96. எம்.ஜே.சமீம் அஹமட்
70, பிரதான வீதி
கல்முனைக்குடி-5.
97. டி.ஜி.சுபாசன்
தாதிகள் விடுதி, யார்ட் றோட்
கல்முனை (கி.மா).
98. எஸ்.மாலினி
எல்லப்பர் மருதங்குளம்
வவுனியா?
99. வை.சலாஹசதீன்
40 பீ, கம்பிரிகஸ்வெவ
அனுராதபுரம்.
100. வி.முத்துலிங்கம்
சரஸ்வதி தேவி
சில்வக் கண்டி, ஆல்கரனோயா.

(ஏனைய விபரங்கள் அடுத்தவாரம்)

## யார் இவர்

முத்துராமனின் ஜோடியாகக் காட்சிதரும் இந்த நடிகை யார் சொல்லுங்கள் பார்க்கலாம்? இப்போதும் நடித்துக் கொண்டிருக்கிறார். நகைச்சுவையான பாத்திரங்களிலும், பாட்டி வேஷங்களிலும் கலக்குகிறார். ஒரு பெரும் தலைவரின் பெயரும் இவர் பெயருக்குள் அடக்கம். என்ன ஓ.கேயா. விடையைச் சரிபார்க்க பக்கம் 18க்கு செல்க.



## இந்த வாரம் உங்கள் பலன்

(15.06.1997 தொடக்கம் 21.06.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மிதுனம் - சூரியன், வெள்ளி.
சிம்மம் - இராகு.
கன்னி - செவ்வாய்.
மகரம் - வியாழன்.
கும்பம் - கேது.
மீனம் - சனி.
இடபம் - புதன்.

சந்திரன்- கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| மீனம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செல்வாக்கு மேன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 4 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| புதன்- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| மேடம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், தேககம் பாதிப்பு. | மு.ப. 9 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், தொழில் கஷ்டம். | பகல் 12 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| இடபம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பி.ப. 3 மணி |
| புதன்- பயனுள்ள செயல், வீண் முயற்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- காரியானுகூலம், இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பெரியோர் சகவாசம். | பகல் 11 மணி |
| சனி- கௌரவம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| மிதுனம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் நன்மை, பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் பேறு, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| சனி- உயர்ந்த நட்பு, பொருள் பேறு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| கும்பம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் பேறு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் கலக்கம், அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| சனி- பயனற்ற செயல், காரியக்கேடு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| கர்க்கடகம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, செலவு அதிகம். | பி.ப. 3 மணி |
| புதன்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- இனசன நன்மை, கடன் தொல்லை நீங்கும். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| மகரம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- வீண் கலக்கம், பொருள் செலவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| புதன் - இனசன நன்மை, உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 1 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் பேறு. | பி.ப. 2 மணி |
| சனி- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| சிம்மம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, செலவு அதிகம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- செல்வாக்கு மேன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பண வரவு. | பகல் 11 மணி |
| சனி- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| தனு | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், வீண் விரோதம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் படல். | பகல் 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| விருட்சிகம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| திங்கள்-புதிய முயற்சி, பண வரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் நஷ்டம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, பொருள் விரயம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வீண் விரோதம், மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| துலாம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- ஆடம்பர வாழ்க்கை, செலவு அதிகம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- கௌரவம், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வீண் கலக்கம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| கன்னி | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, உயர்ந்த நட்பு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- காரியானுகூலம், பண வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, பணக் கஷ்டம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5




படிப்பகம்

www.padippakam.com



திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்!
-சுப்பிரமணிய பாரதியார்.



## மழையில் நனைந்து....

மின்னலோடு இடியிடித்து
மழையும் பொழிந்தது-வீட்டுத்
திண்ணையில் சாரலோடு
தூறல் விழுந்தது!

பெய்த மழை நீர் நிறைந்து
ஓடையானது-நான்
செய்த கப்பல் ஓடையிலே
மிதந்து போனது!

மகிழ்வுடனே நனைந்து நான்
மழையில் ஆடினேன்-மறுநாள்
தகதகவென காய்ச்சலை நான்
கொண்டு வாடினேன்!

மாத்திரையும் மருந்துமாக
நிறையச் செலவுதான்-என்னிடம்
நேற்றுவரை இருந்த பல
குறும்பும் அழிவு தான்!

-வி. இளந்தமிழன்-

பாப்பா முரசு சிறுகதை

# இரும்புக் கவசம்

கொல்லன் ஒருவனை அழைத்து வரச் சொல்லி வலிமையான இரும்புக் கவசம் ஒன்றைத் தயாரித்து வருமாறு உத்தரவிட்டார் அக்பர் சக்கரவர்த்தி.

சில நாட்களின் பின் கவசத்தைக் கொண்டு வந்தான் கொல்லன். கவசத்தின் வலிமையைச் சோதிக்க விரும்பிய அக்பர், அந்தக் கவசத்தை ஒரு மரப்பொம்மைக்கு அணிவித்து விட்டு அதை வாளால் தாக்கினார். கவசத்தோடு வாணப்பட்ட பொம்மை இரண்டாகப் பிளந்தது.

கொல்லனைப் பார்த்து அக்பர், "நீ தயாரித்த கவசம் வலிமையுடையதாக இல்லை. ஆகையால் வாள் வீச்சுக்கு உடையாத கவசத்தை மறுபடி தயாரித்து வா. வாள் வீச்சுக்கு அந்தக் கவசம் உடையுமானால், உன் தலையும் அவ்வாறு உடையும்" என்று எச்சரித்து அனுப்பினார்.

வீட்டிற்கு வந்த கொல்லன் அரண்மனையில் நடந்தவற்றை மனைவியிடம் கூறினார். அதைக் கேட்ட அவன் மனைவி, அவன் காதில் ஏதோ இரகசியமாகக் கூறினாள்.

அதன் பின்னர் விரைவாகக் கவசம் ஒன்றைத் தயாரித்தான் கொல்லன். அதை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

கவசத்தைப் பார்த்து அக்பர், மறுபடியும் அதைச் சோதிக்க விரும்பி, மரப்பொம்மைக்கு அணிவிக்கும்படி கூறினார்.

"அரசர் பெருமானே! ஒரு வேண்டுகோள்! மரப்பொம்மைக்குக் கவசத்தை அணிவிக்க வேண்டாம். நான் அணிந்து கொள்கிறேன். என்மீது சோதனை செய்து பாருங்கள்," என்றான் கொல்லன்.

அரசர் அதற்குச் சம்மதிக்க, கொல்லன் இரும்புக்கவசத்தை அணிந்து கொண்டு நின்றான். சிப்பாய் ஒருவன் அவனை நோக்கி வாளை ஓங்கினான். கவசம் அணிந்திருந்த கொல்லன் பயங்கரமாகச் சத்தமிட்டான். அவன் போட்ட சத்தத்தினால் வாளை ஓங்கிய சிப்பாய், தாக்க முற்படாமல் அப்படியே நின்றுவிட்டான்.



அக்பர் கொல்லனை நோக்கி "ஏன் சத்தமிட்டாய்?" என்று கேட்டார்.

"மன்னர் மன்னவரே! யுத்தத்தின் போது கவசத்தை மரப்பொம்மை அணிந்து கொள்வதில்லை. சிப்பாய்தான் அணிந்து கொள்வான். எதிரி தன்னைத் தாக்க வரும்போது தன்மீது வாள்வீச்சுப் படாமல் இருக்க எப்படியாவது தடுக்க முற்படுவான் அல்லவா? அதைத்தான் இப்போது நான் செய்தேன்!" என்று கூறினான் கொல்லன்.

கொல்லன் கூறியவை யாவும் உண்மையானதாகவும், புத்திசாலித்தனமானதாகவும் அக்பருக்குத் தெரிந்தது. இப்படி யார் இவனுக்குப் புத்திசாலித்தனமாகப் பேசக் கற்றுக் கொடுத்தது என்று அறிய விரும்பி அவனிடமே கேட்டார்.

கொல்லன் புன்னகையுடன், "மன்னர் பெருமானே! தாங்கள் போட்ட உத்தரவினால் மனச்சோர்வோடு வீட்டிற்குச் சென்றேன். என் மனைவி, இதற்காகத் துக்கப் படலாமா? பீர்பாலிடம் ஆலோசனை கேட்டு வரும்படி என்னை அனுப்பி வைத்தாள்.

அவரிடம் சென்று, என்னைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டேன். அவர் கற்றுக் கொடுத்த யோசனையே இவை. அவரால் மன்னரின் தண்டனையில் இருந்து தப்பினேன்," என்று கூறி பீர்பாலையும் வணங்கி நின்றான்.

அக்பர், பீர்பாலை அழைத்து எல்லோர் முன்னிலையிலும் அவரைப் பாராட்டினார்.

## வாரம் ஒரு நாடு

### வியட்நாம்




தலைநகர் - ஹனோய்
பரப்பு - 3,29,566 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 7.45 கோடி
மொழி - வியட்னாமி, ஃபிரெஞ்சு, ஆங்கிலம், சீனம்
எழுத்தறிவு - 86%
சமயம் - டாவோயிசம், புத்தமதம், கன்பியூஷியானிசம், கிறிஸ்தவம், இஸ்லாம்.
நாணயம் - டோங்
தனிநபர் வருமானம் - 230 டொலர்.

**அமைவிடம்:**
சோஷலிசக் குடியரசான வியட்னாம் ஆசியாவின் தென்கிழக்கே அமைந்துள்ள மலைகள் நிறைந்த நாடு. நாட்டின் முழு நிலப்பகுதியிலும் அன்னமைட் மலைத்தொடர் அமைந்துள்ளது.

**வரலாறு:**
1884ல் ஃபிரான்ஸின் ஆதிக்கத்திற்குட் பட்டிருந்தது. 1940ல் ஜப்பான் இதைக் கைப்பற்றியது. ஜப்பானிடமிருந்து விடுதலையடைந்ததும்- 1954ல் வியட்னாம் வட வியட்னாம், தென் வியட்னாம், எனப் பிரிக்கப்பட்டது. தென் வியட்னாம் அமெரிக்காவின் ஆதிக்கத்திலும், வட வியட்னாம் ரஷ்யா, மற்றும் சீனாவின் ஆதிக்கத்திலும் இருந்தன. 1976ல் இரண்டு வியட்னாமும் ஒன்றுபட்டன.

**பொருளாதாரம்:**
இது விவசாய நாடு. அரிசி முக்கிய விளைபொருள். கரும்பு, இறப்பர், கோப்பி, தேயிலை போன்றவை பிற விளைபொருட்கள். நிலக்கரி, தகரம், செம்பு, குரோமியம், பொஸ்பேட்டுக்கள் இந்நாட்டின் வடபகுதியில் கிடைக்கின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.06.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 197
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 195

பரிசுக்குரியவர்:
சு. கஜன்,
விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ப. சோபிகா, இல 1 R.D.D. விடுதி, பூங்கா வீதி, வவுனியா. | ஜி. ரமேஸ், பால யெல்கொல்ல கடே, தெம்மோதரை. |
| அனிதா திருச்செல்வம், எல்லை வீதி, பாண்டிருப்பு-02, கல்முனை. | செல்வி பாத்திமா முப்ராஸா உசைன், மா/ ஆமினா ம.வி., மாத்தளை. |
| ஏ.ஜி. சித்தி பர்ஹானா, கமு அல்-அஸ்ரப் ம.வி., இறக்காமம். | பா. பார்த்தீபன், 124, கீழ்த்தள வீதி, உவர்மலை, திருக்கோணமலை. |
| ஐ. மீஸால், அல் அக்ஸா மகா வித்.,சின்னக்கிண்ணியா,கிண்ணியா-02. | எச். எம். ஸம்சுல் ஹினாயா, மட்/ அல் முனீறா மகளிர் மகாவித்தியாலயம், ஏறாவூர். |
| பெசில் மிக்கலஸ், மமா/ அம்/ஒட்டரி த.வி., டிக்கோயா. | பாத்திமா சில்மியா, 18/2, ஒழுங்கை4, மாய்யாவ, கண்டி. |

## பூமி பூமி




* புறப் பரப்பளவு-51 கோடியே 1 இலட்சத்து 500 சதுரகிலோமீட்டர்
* நிலப்பரப்பளவு-14 கோடியே 89 இலட்சத்து 50 ஆயிரத்து 800 சதுரகிலோமீட்டர்.
* நீர்ப்பரப்பளவு-36 கோடியே 11 இலட்சத்து 49 ஆயிரத்து 700 சதுரகிலோமீட்டர்.
* நிலநடுக்கோட்டின் சுற்றளவு- 40 ஆயிரத்து 67 கிலோமீட்டர்.
* சூரியனில் இருந்து உள்ள தூரம்-14 கோடியே 94 இலட்சத்து 7 ஆயிரம் கிலோமீட்டர்.
* தன்னச்சில் ஒரு முறை சுழல்வதற்கு ஆகும் காலம் 23 மணித்தியாலயம், 56 நிமிடம், 4.09 நொடிகள்.
* சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுக்கும் காலம்-365 நாட்கள், 5 மணித்தியாலயம், 48 நிமிடங்கள்.

## சின்னச் சின்ன செய்திகள்

* இறப்பர் உற்பத்தியில் தற்போது முன்னணியில் உள்ளநாடு தாய்லாந்து. இதற்கடுத்து இந்தோனேஷியாவும், மலேசியாவும் உள்ளன.
* ஐரோப்பாக் கண்டத்தில் இருப்பதை விட அதிகமான தாவரங்கள் பனாமா என்னும் மிகச் சிறிய நாட்டில் உள்ளன.
* ஜப்பானில் உள்ள நாகசாகி நகரில் 1945ம் ஆண்டு- ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி போடப்பட்ட அணுகுண்டு வெடித்தவுடன் அதிலிருந்து 20 ஆயிரம் அடி உயரத்திற்குப் அனல் புகை மண்டலம் எழுந்தது.
* பல் வைத்தியர்கள் அதிகமாக உள்ள நாடு அமெரிக்கா. இங்கு 1 1/2 இலட்சம் பல்வைத்தியர்கள் உள்ளனர்.
* நயாகரா நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியில் தண்ணீர் குளிர்ச்சியாகவும், கீழே விழும்பகுதியில் வெதுவெதுப்பாகவும் இருக்கும்.

## பிரமிட்

உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிட் எகிப்தில் உள்ளது. இது போன்ற இன்னொரு பிரமிட் போலந்து நாட்டில் உள்ள ரோஸ்னோவ் என்னுமிடத்தில் உள்ளது. இந்த பிரமிட் கி.பி. 1780ம் ஆண்டு கட்டப்பட்டது.

முழுவதும் செங்கல் கற்களாலேயே கட்டப்பட்ட இந்தப் பிரமிட்டின் உயரம் 40 அடியாகும். இங்கு கொஹன் சோலர்ன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். எனினும் எகிப்திய பிரமிட்டிற்குள் இருந்தது போன்று எந்த உடலும் இதற்குள் இருந்து இதுவரை எடுக்கப்படவில்லை.



## விடுகதைகளும் விடைகளும்

1. பாய்ந்து வரும் புலியும் அல்ல, அடித்து இழுத்துச் செல்லும் புயலும் அல்ல.
அது என்ன?
2. உச்சிக் குடுமியுண்டு மனிதர் அல்ல; உடம்பெங்கும் ரோமம் உண்டு- குரங்கும் அல்ல; மூன்று கண்-உண்டு சிவனும் அல்ல.
அது என்ன?
3. ஊசி போட்ட வைத்தியர் ஊமை போலப் போகிறார்.
அவர் யார்?
4. எலும்பில்லா மனிதன், கிளையில்லா மரத்தில் ஏறுகிறான்.
அவன் யார்?
5. ஐந்து விரல்கள் உண்டு; ஆனால் இரத்தமும் இல்லை, சதையும் இல்லை.
அது என்ன?
6. கைகள் இரண்டு, கண்கள் பன்னிரெண்டு.
அது என்ன?
7. கையுமில்லை, காலுமில்லை ஆனால் பயணத்தில் தடை இல்லை.
அது என்ன?
8. போட்டதை எடுக்க முடியவில்லை; ஆனால் இரசிக்க முடியுது. அது என்ன?
9. எலும்பில்லாதவன், எலும்பை ஒடிக்கவும் வைப்பான். அவன் யார்?
10. வெள்ளைச் சீமாட்டிக்கு தலைக்கு மேலே விளக்கு.
அது என்ன?

### விடைகள்

1. வெள்ளம் 2. தேங்காய் 3. தேள் 4. பேன் 5. கையுறை 6. கடிகாரம் 7. கடிதம் 8. கோலம் 9. நாக்கு 10. மெழுகுவர்த்தி.

தொகுப்பு-ஏ.அகல்யா.

## தீப் பந்த மின்னல்



பலத்த மழைக்காலங்களில் வானில் திடீரென தீப்பந்து போல ஏற்படும் மின்னலுக்குத் தீப்பந்து மின்னல் என்று பெயர். சுமார் ஒரு அடி விட்டமுள்ள இந்தத் தீப்பந்து மின்னல் விநாடிக்கு 4.5 மீட்டர் வேகத்தில் நகரும். ஒரு நிமிடம் வரை இருந்து விட்டு வெடித்து மறையும்.

இந்தத் தீப்பந்து மின்னல் மிக அபூர்வமாகத்தான் தோன்றும். வெள்ளை, மஞ்சள், சிவப்பு, நீலம் ஆகிய எல்லா நிறங்களிலும் தீப்பந்து மின்னல் காணப் படும்.

இது காற்று மண்டலத்திலுள்ள ஓசோன் வாயு, மின்னாற்றல் ஏற்பட்டு தூசிப்படலத்துடன் சேர்ந்து எரியும் போது தோன்றுகின்றது. இப்பந்து மையத்தில் தோன்றும் வெப்பத்தின் அளவு என்ன தெரியுமா? 2000 பாகை சென்டிக்கிரேட்.



படிப்பகம்

www.padippakam.com

# உடைந்த இரவு




டெலிபோனில் சிரித்துக் கொண்டே ஒலித்த அந்தப் பெண் குரலைக் கேட்டு பயத்தில் முகம் பூராவும் வியர்த்தாள் மைத்ரேயி.

"தெரியலையே... நீ... யார்....?"

"மனசாட்சி! இப்போதைக்கு என்பேர் இதுதான்..."

மைத்ரேயி திகைத்துக்கொண்டிருக்கும் போதே மறுமுனையில் ஒரு பெரிய சத்தத்துடன் ரிஸீவர் வைக்கப் பட்டது.

"ஹலோ... ஹலோ...." மைத்ரேயி குரல் எக்கிக் கத்திவிட்டு கைநடுக்கத்துடன் ரிஸீவரை கவிழ்த்தாள்.

பாஸ்கர் பக்கத்தில் வந்து அவளுடைய தோளைத் தொட்டான். "மைத்ரேயி"


"ம்..."

"போன்ல யாரு... ஏன் என்னவோ மாதிரி ஆயிட்டே?"

"பா...பாஸ்கர்..."

"என்ன....?"

"யா...யாரோ... ஒரு பொ... பொண்..ணு..."



"பொண்ணு...?"

"போ.... போன் பண்ணி...."

"பண்ணி....?"

"இது நியாயமா....? புருஷன் கட்டின தாலி கழுத்துல இருக்கும்போது கட்டிலை வேற ஒருத்தன் கூட பகிர்ந்துக்கறது நியாய்மான்னு கேட்டா..."

பாஸ்கரின் முகம் உடனே வெளுத்தது.

"யார்... அந்த பொண்ணு...?"

"கே... கேட்டேன்...."

"என்ன சொன்னா...?"

"அவ பேரு மனசாட்சியாம்...."

பாஸ்கர் தளர்வாய் அங்கிருந்த நாற்காலியில் சாய்ந்தான். "எவளோ... உனக்கும் எனக்கும் இருக்கிற இல்லீகல் தொடர்பை 'ஸ்மெல்' பண்ணிட்டா..."

"யாராயிருக்கும் பாஸ்கர்...?"

"கண்டுபிடிக்கணும்..."

"எப்படி...?"

"மறுபடியும் அவ போன் பண்ணாம இருக்கமாட்டா. பண்ணினா... அவளோட மோட்டிவ் என்னான்னு கேட்டு தெரிஞ்சுக்க... பேசும் போது குரலை கவனி. அவ பேசற மாடுலேஷனை நோட் பண்ணு.... இந்த ரெண்டையும் மனசுல வெச்சுக்கிட்டு நீ சந்தேகப்படற பெண்களோட குரலையும் மாடுலேஷனையும் ஒப்பிட்டுப்பாரு... யாராவது மாட்டுவாங்க..."

மைத்ரேயி கலவரமாய் நிமிர்ந்தாள்.

"எனக்கு பயமாயிருக்கு பாஸ்கர்..."

"எதுக்கு பயம்...?"

"டெலிபோன்ல பேசின அந்தப் பொண்ணு நம்ம தொடர்பைப் பத்தி என்னோட கணவர்கிட்டே சொல்லிட்டா....?"

"சொல்லமாட்டா..."

"எப்படி அவ்வளவு நிச்சயமா சொல்றீங்க?"

"அப்படி சொல்றவளாயிருந்தா.... உனக்கு போன் பண்ணி மனசாட்சி அது இதுன்னு பேசியிருக்கமாட்டா... நேரா உன் புருஷனுக்கு போன் பண்ணி விஷயத்தை சொல்லியிருப்பா..."

"அப்படீன்னா... அவளோட நோக்கம்....?"

"இன்னுமா உனக்குப் புரியலை மைத்ரேயி.... உன்னையும் என்னையும் பிளாக் மெயில் பண்ணி பணம் பறிக்கறது தான் அவளோட நோக்கம். இன்னிக்கோ நாளைக்கோ அவ மறுபடியும் போன் பண்ணுவா..."

"பாஸ்கர்..."

"ம்...."

"இத்தனை நாளும் இல்லாமே இப்போ திடீர்னு இவ எங்கிருந்து முளைச்சா...?"

"பயப்படாதே மைத்ரேயி... முளைச்சதை அழிச்சிடலாம். இதை மொதல்ல அழிச்சிட்டு அப்புறமா உன் புருஷனோட ஆயுளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறதைப் பத்தி யோசிப்போம்."

"பாஸ்கர்... கொஞ்ச நாளைக்கு நாம ரெண்டு பேரும் சந்திக்காம இருந்தா என்ன...?"

"என்னால இருக்க முடியாது.... உன்னை ஒருநாள் பூராவும் பார்க்காமே இருந்தா எனக்கு பைத்தியமே புடிச்சுடும்..."

"என்னால மட்டும் இருக்க முடியுமா என்ன...? பிரச்னை பெரிசாகாமே இருக்கணும்ன்னா நாம ரெண்டு பேரும் மனக் கட்டுப்பாடோட இருக்க வேண்டியது அவசியம்... போன் பண்ணினது யார்ன்னு தெரிஞ்சுட்டா டென்ஷன் கொஞ்சம் குறையும்..."

"கவலைப்படாதே.... அவ எப்படியும் மாட்டிக்கத்தான் போறா...."

"சரி பாஸ்கர்.. அந்தப் பொண்ணு யார்ன்னு தெரிஞ்சபின்னாடி நாம என்ன பண்ணப்போறோம்...?"

"அவ வாழ்ந்தது போதும்ன்னு வாழ்க்கைக்கு அவசர, அவசரமா வழியனுப்புவிழா நடத்த வேண்டியதுதான்..." சொன்ன பாஸ்கரின் குரலில் அமிலத்தின் காரம் தெறித்தது.

"சரி... இனிமே நீங்க இங்கே இருக்க வேண்டாம் பாஸ்கர்... கிளம்புங்க... அந்தப் பெண் மறுபடியும் போன் பண்ணினா உங்களுக்கு தகவல் தர்றேன்...."

பாஸ்கர் மைத்ரேயின் நெற்றியில் ஒரு முத்தமிட்டு அவளுடைய கன்னத்தை தட்டி விட்டு நகர்ந்தான்.

★★★

தினேஷ், ரிசர்வ் பாங்க்லிருந்து வந்த செக்கிங் ஸ்க்வாட் ஆபீஸர்களை பார்த்து பேசி அனுப்பிவிட்டு வீடு திரும்பியபோது சாயந்தர வேளை சிறிது சிறிதாய் இருட்டிக் கொண்டிருந்தது.

போர்ட்டிகோவில் காரை நிறுத்திவிட்டு ஹால் சோபாவில் சாய்ந்தான். மைத்ரேயி உள்ளேயிருந்து வந்தாள். கேட்டாள்: "என்ன இங்கேயே உட்கார்ந்துட்டீங்க....?"

"ஏகப்பட்ட மெண்டல் பெடிக்... ரிசர்வ் பேங்க் ஸ்க்வாடில் வந்த ஆபீஸர்ஸ் ஒவ்வொருத்தனும் எமகாதகன். கேள்வி மேல கேள்வி கேட்டு துளைச்சு எடுத்துட்டானுக...."

"எந்த பிரச்னையும் இல்லையே....?"

"நம்ம பைனான்ஸ் கம்பனியோட கணக்குகள் எப்பவும் க்ளீன்தான். பிரச்னை வர வாய்ப்பே இல்லை...."

"காப்பி கொண்டு வரட்டுமா...?"

"வேண்டாம்.... நான் மொதல்ல குளிக்கணும்!"

"போய் குளிச்சுட்டு வாங்க.... ரெண்டு பேரும் காத்தாட வெளியே போய்ட்டு வரலாம்...."

"எங்கே போகலாம்...?"

"பீச்சுக்கு...."

"வேண்டாம்... ஏதாவது கோயிலுக்கு போய்ட்டு வரலாம்... ரிசர்வ் பேங்க் ஆட்கள் வந்துட்டுப் போனதிலிருந்து மனசே சரியில்லை." சொல்லிக்கொண்டே எழுந்த தினேஷை டீபாயின் மேல் இருந்த டெலிபோன் அலறி நிறுத்தியது.

ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ...."

"....."

"ஆமா! நீங்க... யாரு...?"

"......"

"அப்படியா... ஒரு நிமிஷம் லைன்ல இருங்க...." சொன்ன தினேஷ், மைத்ரேயிடம் ரிஸீவரை நீட்டினான்.

"யாரோ.... உன்னோட ப்ரெண்டாம்..."

மைத்தேயி ரிஸீவரை வாங்கிக் காதுக்கு கொடுத்தாள்.

"எஸ்.... மைத்ரேயி ஹியர்....."

"நான் மனசாட்சி..."

அந்தக் குரலைக் கேட்டதுமே மைத்ரேயின் தலைக்குள் கோபரத்தம் பாய்ந்தது. தினேஷ் உள்ளே இருந்த பாத்ரூமை நோக்கிப் போய்க் கொண்டிருக்க மைத்ரேயி கொஞ்சம் அமைதி காத்து விட்டு குரலைத் தாழ்த்திக் கொண்டு பொரிந்தாள்.

"உனக்கு என்ன வேணும்...."

"எனக்கு வேண்டியது ரெண்டு."

"என்ன....?"

"நியாயம். நேர்மை..."

மைத்ரேயி கோபத்தில் மௌனமானாள்.

குரல் சிரித்தது.

"என்ன பேச்சையே காணோம்...? உன்கிட்டே இல்லாத ரெண்டை கேட்டுட்டேனா....?"

"இதோ பார்..... இந்த கேலிப் பேச்செல்லாம் என் கிட்ட வேண்டாம்...."

"பின்னே யார்கிட்ட வெச்சுக்கறது....? பாஸ்கர் கிட்ட வெச்சுக்கலாமா...?"

"என்ன ப்ளாக்மெயில் பண்றியா...?"

"நோ.... நோ.... ஒயிட் மெயில்...."

"ஏய்.... இந்த கிறுக்குத் தனமான பேச்சையெல்லாம் விட்டுட்டு நேரிடையா விஷயத்துக்கு வா..."

"நேரிடையா விஷயத்துக்கு வர்றதா.... அப்படீன்னா...?"

"உனக்கு எவ்வளவு பணம் வேணும்...?"

"எனக்கு பணமா... எதுக்கு...?"

"இனிமே நீ வாயைத் திறக்காம இருக்கறதுக்கு...."

"அதாவது.... நீ சோரம் போயிட்டிருக்கிற விஷயத்தைப் பத்தி இனிமே நான் வாயைத் திறக்கக்கூடாது...?"

"ஆமா..."

"நான் வாயைத் திறக்காம இருக்கணும்ன்னா.... உன்னோட பணம் எனக்கு வேண்டாம்..."

"பின்னே...?"

"எனக்கு ஒரு வாக்குறுதி வேணும்...."

"வாக்குறுதியா...?"

"ம்..."

"என்ன வாக்குறுதி...?"

"உன்னோட கணவனுக்கு இனிமே நீ துரோகம் பண்ணக்கூடாது. அந்த பாஸ்கர் உறவை உடனடியா துண்டிக்கணும்....."

"....."

"வாக்குறுதி கஷ்டமாயிருக்கா...?"

மைத்ரேயி எரிந்து விழுந்தாள். "இதோ பார்....! இதெல்லாம் உனக்கு தேவையில்லாத விஷயம்..."

"சோரம் போறது மட்டும் முக்கியமான விஷயமா?"

"ஏ.... ஏய்ய்..."

"இந்த மிரட்டல் எல்லாம் என்கிட்ட வேண்டாம்.... உனக்கு சரியா ஒரு வாரம் டயம் தர்றேன். அதுக்குள்ளே நீ திருந்தியாகணும்...!"

"இல்லேன்னா...?"

"உன் கணவரோட காதுக்கு விஷயத்தைக் கொண்டு போறது தவிர எனக்கு வேறு வழியில்லை....."

"...."

**(தொடர்ந்து வரும்)**

**இதுவரை**

தினேஷ்–மைத்ரேயி தம்பதிக்கு சிறந்த தம்பதி என்று விருது கிடைக்க இருக்கிறது. அத்தகவலை மைத்ரேயிடம் மகிழ்ச்சியுடன் சொல்கிறான் தினேஷ். மைத்ரேயிக்கும் பாஸ்கர் என்ற இளைஞனுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருக்கிறது. தினேஷை கொல்ல பாஸ்கருடன் திட்டம் போடுகிறாள் மைத்ரேயி. அப்போது ஒரு போன் வருகிறது. போனில் ஒரு பெண்குரல் மைத்ரேயி– பாஸ்கர் தொடர்பை தெரிந்து வைத்து மிரட்ட மைத்ரேயி திகைத்து நிற்கிறாள்.

**இனி...**

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: வி.சண்முகலிங்கம்.
வயது: 24
முகவரி: சிவன் கோவில் வீதி, செட்டிபாளையம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: எஸ்.ரதி.
வயது: 25
முகவரி: தபாலகம், மன்னார்.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஆருரன் சந்திரசேகரம்.
வயது: 25
முகவரி: 162.CHIPWOOD CR, NORTH YORK (ONT), M2J 3X7, CANADA.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஆர்.முகமட்.
வயது: 24
முகவரி: 8/1-ஏ, வரக்காப்பொல வீதி, எல்வல, உக்குவளை.
பொழுதுபோக்கு: வானொலி, உதைபந்து.

பெயர்: எஃப்.ஷனாஸா.
வயது: 29
முகவரி: P.O.BOX-1415, CODE NO-44508, KUWAIT.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். பஹ்மி.
வயது: 27
முகவரி: P.O.BOX-50, PIN CODE-211, SALALAH, SULTANATE OF OMAN.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: எம்.ராபிர்.
வயது: 23
முகவரி: 39,ஹொரன்டெனிகொட வீதி, மாவனல்லை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: எல்.கமால்.
வயது: 19
முகவரி: 413, புளியடை வீதி, நிந்தவூர்-13.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஏ.அச்சுதன்.
வயது: 18
முகவரி: 21/8, வித்தியாலய வீதி, திருமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: ஆர்.ரவீந்திரன்.
வயது: 26
முகவரி: 761, மருதானை வீதி, கொழும்பு-10.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம்.ஞானி.
வயது: 23
முகவரி: 28. TORRINGTON GARDEN, PERIVALE, GREENFORD, MIDDLESEX, UB6 7EN, U.K
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: எம். ஆஸிக்.
வயது: 18
முகவரி: 150/1, மன்னார் வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை.


படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 15

**இதுவரை**
சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.
ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.
கணேஷனும் தேடிவருகிறான் கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.
உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பிறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.
சுமதி பழையதை நினைக்கிறாள்.
கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள். **இனி...**

**போ**கும் வழியில் சுமதி அப்பாவிடம் கேட்டாள்.

"அப்பா?"

"சொல்லும்மா!"

"ஒரு மனிதனை அவர் நல்லவர் என்றோ கெட்டவர் என்றோ, எப்படி அப்பா கண்டுபிடிப்பது?"

அப்பா யோசித்துவிட்டுச் சொன்னார்.

"கண்ணைப் பார்த்துக் கண்டு பிடிக்கலாம்மா.... கண்ணில் ஒரு மனிதனின் குணம் தெரியும். பாரதியார் கூட சேவகன் என்கிற வேலைக்காரனைப் பற்றிச் சொல்லும் போது, 'கண்ணிலே நல்ல குணம்'னு சொல்லவில்லையா? மற்றபடிக்கு அவன் வார்த்தைகளில் கண்டு பிடிக்க முடியாது."

"அப்பா! கல்யாணத்துக்குப் பிறகு சிலபேர் மாறுவார்களா? முந்தி இருந்த நல்ல குணம் அப்படியே இருக்குமா? அல்லது முந்தி இருந்த கெட்ட குணம் மாறுமா?"

அப்பா எச்சிலை ஓரம் சென்று துப்பிவிட்டு வந்தார்.

"இதுக்கெல்லாம் ஒரு இலக்கணம் இல்லேம்மா, கல்யாணத்துக்குப் பிறகு அங்கு கணவன் மனைவி இரண்டு பேர் வந்து விடுகிறார்கள் அல்லவா? இரண்டு தலை, இரண்டு மூளை, இரண்டு மனம், இரண்டு ரசனை வந்து விடும் அல்லவா! இந்த இரண்டும் சேர்ந்து பிரச்சனையைக் குறைக்கவும் செய்யும் அதிகரிக்கவும் செய்யும். திட்டவட்டமாக எதையும் சொல்லிவிட முடியாது......"

மறுநாள் நர்ஸ் வசந்தியைச் சந்திக்கச் சென்றாள் சுமதி. கணேசனைத் தான் திருமணம் செய்து கொள்ள உத்தேசித்திருப்பதையும் சொன்னாள். ஒரு நெருங்கிய ஆத்மாவிடம் தன்னை ஒப்புவித்துக் கொள்ள வேண்டும் என்கிற ஆசையில் தான் அதைச் சொன்னாள். அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு வசந்தி சொன்னாள்:

"நீ தப்பு செய்கிறாய் சுமதி!"

சுமதி திடுக்கிட்டாள். அவள் அப்படிப்பட்ட பதிலைச் சொல்வாள் என்று எதிர்பார்க்கவில்லை!

கணேசனைத் திருமணம் செய்து கொள்வது என்று சுமதி எடுத்த முடிவை மிகக் கடுமையாக வசந்தி எதிர்த்தது, அவளுக்குத் திகைப்பாய்த்தான் இருந்தது.

"சுமதி! மிகத் தவறான முடிவை எடுத்து விட்டாய் என்றே எனக்குத் தோன்றுகிறது."

சுமதியின் முகம் சோர்ந்து போயிற்று.

"எப்படித் தவறு என்றுதான் விளக்கமாகச் சொல்லேன். தயவு செய்து சொல் வசந்தி."

வசந்தி, குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி யோசித்தவாறு இருந்தாள். பிறகு சொன்னாள்:

"நீ முடிவை எடுத்துவிட்டு என்னிடம் சொல்ல வந்திருக்கிறாய். என் அபிப்பிராயம் உன் முடிவை மாற்றப் போவதில்லை. என்றாலும், ஒரு சிநேகிதி என்ற அளவில், என் கருத்தைச் சொல்லாமல் மறைப்பது தவறு. உனக்கு அந்த கணேசன் எந்த வகையிலும் பொருத்த மானவனாக எனக்குப்படவில்லை, சுமதி"

"ஏன்? அவர் படித்திருக்கவில்லையா? பேராசிரியராக இருக்கிறார். நல்ல சம்பளம். அப்புறம் என்ன?"– சுமதி இதைச் சொல்லும் போதே, அந்தச் சொற்களில் உள்ள கருத்து பலவீனத்தால், அவள் குரல் நைந்தது. வார்த்தைகள் பிசு பிசுத்தன.

"என்ன அபத்தமாகப் பேசுகிறாய், சுமதி? படித்திருப்பதும், பேராசிரியராகப் பணியாற்றுவதும், கை நிறையச் சம்பளம் வாங்குவதுமா, ஒரு கணவனுக்கான தகுதி? உன்னை அவன் புரிந்துகொள்வானா, உன்னை அவன் அன்பு செலுத்துவானா? உனக்கான சுதந்திரத்தை அவன் ஒப்புக் கொள்வானா, காலம் முழுக்க ஒரு நல்ல துணையாக உன்னுடன் அவன் வருவானா, என்பதல்லவா நீ அறிய வேண்டிய அவன் தகுதிகளாக இருக்க வேண்டும்?"

"இப்போது இல்லையென்றாலும், கல்யாணத்துக்குப் பிறகு அவர் நீ சொன்ன மாதிரியெல்லாம் ஆகக்கூடும்தானே?"

"குழந்தை மாதிரிப் பேசாதே. கல்யாணத்துக்குப் பிறகு ஆணுக்குப் பெண்ணின் மீதும், பெண்ணுக்கு ஆணின் மீதும் இருக்கிற ஈர்ப்பு குறையவே செய்யும். நம் நாட்டில், கல்யாணத்துக்குப் பிறகே உறவு என்று ஏற்படுத்தி வைத்திருக்கிறோம் அல்லவா? கல்யாணத்துக்குப் பிறகு அவனை அவளும், அவளை அவனும் அறிந்து கொண்டுவிட்ட பின்னால், பொட்டலத்துக்குள் என்ன இருக்கும் என்கிற ஆர்வம் கலந்த ஆசை நிறைவேற்றப்பட்ட பிறகு, மிகுதி இருக்கும் பல காலமும், அவர்கள் ஒன்று சேர்ந்து வாழ வேண்டும் என்றால், அதற்குத் தேவைப்படுவது அன்புதான், சுமதி. அன்பு மாத்திரத்தால்தான் ஒரு ஆணும் பெண்ணும் காலம் முழுதும் வாழ முடிகிறது. வெறும் காமம், சில நாள் கொண்டு செலுத்தும். வாழ்நாள் வழித்துணை என்பது கலப்படமற்ற அன்பினாலும், நிஜமான சிநேகத்தாலும் தான் சாத்தியம். கணேசனுக்கோ இந்த இரண்டு குணங்களுமே இல்லை என்றுதான் எனக்குப் படுகிறது. அவன் கல்யாணத்துக்கு முன்னாலேயே, மனைவியாகப் போகிறவளைக் கை தொட்டு அடிக்கிறான் என்றால், நிச்சயம் காட்டு மிராண்டியாகத்தான் இருக்க முடியும். கல்யாணத்துக்குப் பிறகு ஹிம்சை செய்கிறவனும் காட்டுமிராண்டிதான். இந்த ஆளைப் போயும் போயும் எதற்குத் தேர்ந்தெடுத்தாய்?"

ஒரு எழுதும் மேசையை ஒட்டி அவர்கள் அமர்ந்திருந்தார்கள். சுமதி, வசந்தியின் பேச்சைக் கேட்டும், அதில் உள்ள உண்மையை உணர்ந்து கொண்டதன் பயனாகவும், கன்னத்தில் கை வைத்தபடி அமர்ந்திருந்தாள். வசந்தி, தான் அவளைத் தேற்ற வேண்டியிருந்தது.

"நான் சொன்னது உனக்குப் புண்பட்டிருந்தால், தயவுசெய்து என்னை மன்னித்துவிடு, சுமதி. நான் எனக்குத் தோன்றுவதைச் சொல்லாமல் போவேனாகில், உனக்குத் துரோகம் செய்தவள் ஆவேன்.

**பிரபஞ்சன்**

எனக்குக் கணேசன் நல்லவன் என்று படவில்லை."

சுமதியும் அதை உணர்ந்தே இருந்தாள்.

மகிழ்ச்சிகரமாக ஒரு நாளைக் கழிக்க, அவளும், கணேசனும், வசந்தியும், அவள் நண்பனுமாக மலைக்குச் சென்ற அன்று, செடிகளையும், கிளைகளையும் ஒடித்து அவன் அடித்த அடிகள் இன்றும் வலிக்கவே செய்தன. ஆனால் அதற்கு அடுத்தநாள் கணேசன் அவளைப் பார்க்க வரவில்லை. அதற்கு மறுநாளும் வரவில்லை. சுமதி தவித்தாள். ஏதோ ஒரு பிசாசு மனசுக்குள் புகுந்து கொண்டு, அவளை அமைதி இழக்கச் செய்து கொண்டிருந்தது. வேலைகளில் மனம் செல்லவில்லை. குளித்துவிட்டு வந்து தலையைத் துவட்ட மறந்து நின்றாள். எத்தனை இட்டலிகள் தட்டில் இருந்தன என்பதை மறந்தாள். எப்போதும் அழகாக, பாந்தமாக உடை உடுத்துபவள் அவள், ஆடைகளில் கவனம் செல்லவில்லை. உடனடிக்குறிப்பு எழுத வேண்டிய பைல்களைக் கூடக் கட்டி வைத்தாள். மதியம் பசிக்கவில்லை. ஆகவே அவளால் உண்ணவும் முடியவில்லை. இந்தத் துயரை அவளால் தாங்கமுடியவில்லை.

ஆகவே அன்று மாலை அவன் தங்கியிருந்த அறைக்குச் சென்றாள். ஒரு சாய்வு நாற்காலியில் படுத்திருந்தான் கணேசன். அவன் முகத்தில் மூன்று நாள் தாடியிருந்தது. தலை கலைந்திருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

"என்ன கணேசன்! உடம்புக்கு ஏதேனும் சுகமில்லையா?" என்று இயல்பாகவே பேச்சைத் தொடங்கினாள் அவள்.

அவன், திடுக்கிட்டுப் போகுமாறு, கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். சுமதி துடித்துப் போனாள். யார், எதன் காரணமாக அழுதாலும், அது தான் சம்பந்தப்பட்டதாய் இருக்கையில். இரக்கம்மிக்க யாருக்கும் ஏற்படும் பச்சாதாபமே அவளுக்குள் மேலோங்கியது.

"ப்ளீஸ்.... கணேசன்..... அமைதி அடையுங்கள்... அமைதி அடையுங்கள்!" என்று மீண்டும் மீண்டும் சொல்லி அவனைச் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது அவளுக்கு. அவன் அமைதி அடைய நீண்ட நேரம் பிடித்தது. அவன் தலையைத் தொட்டு, தடவி அவனைச் சமனப்படுத்த வேண்டியிருந்தது அவளுக்கு. அவன் மனம் தேறியபின், அவள் கேட்டாள்:

"கல்லூரி போனீர்களா?"

"......"



"சாப்பிட்டீர்களா?"

"......"

நித்ய கருமங்கள் எதையும், ஆற்றாதும், உண்ணாதும் அவன் இருந்தது அவளை மிகவும் நெகிழ்த்துவிட்டது. இரக்க குணமுடைய பெண்கள் வீழ்ந்து போவது இந்த இடத்தில்தானே! அந்தக் கணத்தில் அவனை அவள் மன்னித்து விட்டாள்.

சுமதி சொல்லக் கேட்ட வசந்தியும் ஒரு கணம் மன நெகிழ்வுக்கு ஆளானாள். பிறகு சொன்னாள்:

"பரவாயில்லை, சுமதி... தப்பு செய்வது சகஜம்தான். அவர் செய்த தப்புக்கு மனம் வருந்தினாரே அதுவே போதும். தப்புக்குப் பிராயச்சித்தமும் கிடைத்து, தப்பும் மன்னிக்கப்பட்டு விடுகிறது. சரி; ஒரு முடிவை எடுத்துவிட்டாய். அதைத் தொடர்ந்து செயல்படுத்து! எக்காரணம் கொண்டும் பின் வாங்காதே!"

சுமதிக்கு மனச் சங்கடம் மாறவில்லை.

"இன்னொரு விஷயத்தையும் நான் உனக்குச் சொல்ல வேண்டும். வசந்தி, இந்தத் திருமணத்தை நான் நிச்சயப்படுத்திக் கொண்டதுக்குக் காரணமே ஒன்றுதான். எனக்கும் அவருக்கும், தவிர்க்க முடியாமல் ஒரு சமயம் உறவு ஏற்பட்டுவிட்டது. மனத்தளவில் மட்டும் அவருக்கு இசைந்த நான், அன்று– அதுதான் அவர் ஆஸ்பத்திரியில் இருந்தாரே அன்று– உடம்பாலும் மனைவியாகிவிட்டேன். அதன் பிறகு நான் வேறொரு மனிதரை நினைக்கவே கூச்சமாக இருக்கிறது. என்னை நான் என்ன செய்வது? அதை என்னால் மறக்கவும் முடியவில்லை."

வசந்தி யோசித்துவிட்டுச் சொன்னாள்:

"நம் பிரச்சனையே இதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. நாம் பழமையையும் விடமுடியவில்லை. கல்யாணமும் நமக்குத் தேவைப்படுகிறது. நவீனத்தையும் ஏற்க முடியவில்லை. 'மில்க் டைரி' என்று அச்சிட்ட பனியனையும் போட்டுக் கொண்டு, காலை ஸ்நானம் முடித்துத் துளசி மாடத்தையும் சுற்றுகிற 'டைப்'பாய் நாம் இருக்கிறோம். நம் தலைமுறை இப்படித்தான் இருக்கும் போலும். ஒரு ஆணுடன் உறவு கொண்டுவிட்டு, பிறகு அவன் அயோக்கியன் என்று தெரிந்தாலும், அவனுக்கு மனைவி ஆகத்தான் வேணுமா? உறவால் உடம்பு கெடுமா...? சரிம்மா, ஒரு சந்தோஷ சமாச்சாரம் சொல்ல வந்திருக்கிறாய். ஸ்வீட் இல்லையா? என்னை ஏமாற்றிவிடலாம் என்று மட்டும் நினைக்காதே!"

சுமதியின் கலகலப்பு மீண்டது. அவள் சிரித்தாள். பிறகு சொன்னாள்:

"ஸ்வீட் என்ன....ஒரு நல்ல சாப்பாடே சாப்பிடலாம்; புறப்படு எங்காவது போவோம்...."

அவர்கள் புறப்பட்டார்கள்.

அப்பா, கணேசனின் தாய் தந்தையரைப் பார்த்துப்பேசப் புறப்பட்டார். அதற்கு முன் கணேசனைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஒரு நாள் சுமதி கணேசனை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள். அப்பா, கை குவித்து நமஸ்காரம் செய்து அவனை வரவேற்று அமரச் செய்தார். கணேசனிடம் அப்பா சொன்னார்:

"சார்... சுமதி உங்களைப் பற்றி என்னிடம் சொன்னாள். நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் விரும்புவதாகத் தெரிந்தது. கல்யாணத்துக்கு நானும் சம்மதித்துவிட்டேன். அப்படிச் சொல்வது கூடத் தவறு. நான் யார் சம்மதிக்க? தந்தை என்கிற முறையில் என் பொறுப்பு, உங்கள் திருமணத்தை முன்னின்று நடத்தி வைப்பது மட்டும்தானே, நீங்கள் உங்கள் தந்தையின் வீட்டு முகவரிக்குக் கடிதம் எழுதுங்கள். எனக்கும் முகவரி கொடுங்கள். நானும் அவரைச் சென்று பார்க்கிறேன்" என்றார்.

(தொடர்ந்து வரும்)

---

# மாமிக்கு...!

**வெ**ளி விறாந்தையில் கிடந்த அந்த சாய்வுநாற்காலியில் அமர்ந்தவாறு, இனிப்பில்லா தேனீரை சுவைப்படுத்திக் கொள்ளாது, அருந்திக் கொண்டிருந்த பார்வதி அம்மாளின் எண்ணங்கள் நாலா திசையிலும் பறந்து கொண்டிருந்தன.

'சீ' என்ன காரியம் செய்துவிட்டாள்?: பார்வதி அம்மாளின் நெஞ்சில் அலைகள் புரண்டு புரண்டு அடித்துக் கூறிக் கொண்டிருந்தது.

திரும்பும் திசையெல்லாம் அந்த 'அவமான' நிகழ்வு கைதட்டி நகைப்பது போல ஒரு பிரமை.

வாசலில் மணியடித்த தபாற்காரன், அவரின் பிரமையின் பிடியைத் தளர்த்தினான்.

தபால் உறையின் எழுத்துக்கள் பார்வதியம்மாளுக்கு பரிட்சயமான எழுத்துக்கள். அவரின் பெயருக்கு கடிதம்.

நிதானத்தை இழக்காத ஆத்திரத்துடன் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள்.

அன்புள்ள மாமிக்கு,

நலம், நலமாக பிரார்த்திக்கிறேன். நான் ஏற்படுத்தியதாக நீங்கள் கருதும் அந்த அவமானத்தை எண்ணி புழுங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இக்கடிதம் எழுதுவது பொருத்தமில்லை என்று நான் உணர்ந்தாலும், என் நிலையை வேகமாக உங்களுக்குத் தெரியப்படுத்தும் நிலையில் உள்ளேன்.

நான் இந்த திருமண முடிவிற்கு வந்தமை, சுடுபட்டு இறந்துபோன என் கணவருக்கு, அதாவது உங்கள் மகனுக்கு துரோகம் இழைக்கும் எண்ணமல்ல; இதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். என் கணவர் இறந்ததன் பின்னர் உங்களுடன் நானும், எனது மகனும், வாழ்ந்தபோது ஏற்பட்ட துன்ப நினைவுகளை எல்லாம் எழுத முற்படின் இது கடிதமாகாது, சோக காவியமாகும்.

நானும் உங்களைப்போல ஒரு பெண் தானே! எனக்கும் உணர்வுகள் உண்டு என்பதை ஏன் எண்ண மறந்தீர்கள்? கணவன் இல்லாத பெண் என்றால் சமூகத்தின் பார்வை தரக் குறைவாகவா இருக்க வேண்டும்? கணவருடன் நான் வாழ்ந்தபோது எத்தனை பக்குவமாக என்னுடன் நடந்து கொண்டீர்கள். அவரின் மறைவிற்குப் பின்னர் என்னை வேலைக்




**கனகசபை தேவகடாட்சம்**

காரியாக பயன்படுத்தியிருந்ததைக்கூட நான் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் அடிமையாக, சகுனத்திற்குதவாதவளாக, என் நடத்தையில் எந்நேரமும் ஐயம் கொண்டவராக நீங்கள் நடத்தியதை எண்ணும் போதுதான் என்னால்.... ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை....

இவைகள் தான் என்னை மீண்டும் ஒரு திருமண வாழ்விற்கு வழிகோலியது.

இதை நியாயப்படுத்துவதற்காக இக் காரணங்களை சோடிக்கவில்லை.

ஏன்... என்மனதில் வாழும் உணர்வு இருக்கக்கூடாதா?

நீங்களும் உங்களது கணவரும்– அதாவது எனது மாமனாரும் எப்போதாவது தனித் தனியே படுத்திருப்பீர்களா? இந்த வயதிலும்– மகனைப் பிரிந்த பின்னரும்கூட...!

இவற்றிற்கு நான் மட்டும் விதி விலக்காக இருக்க வேண்டும் என்ற உங்கள் எண்ணம், எத்தனை சுயநலமிக்கது?

உங்கள் இளையமகன் அண்ணி, அண்ணி, என அழைத்துக் கொண்டு என்னை ஆள முயன்றதை எப்படிக் கூறுவேன்? அண்ணியை தாயாக எண்ணுவது எம் பண்பாடு. இப்படியான கேவலங்களிலிருந்து விடுபட்டு, என் மகனின் எதிர் காலத்திற்காகவும், ஒரு சராசரிப் பெண்ணாகவும் வாழ்வதற்காக– இத் திருமணத்தை ஏற்றுக்கொண்டேன்.

பொட்டழிந்தவள் என்று எத்தனை தரம் திட்டியிருப்பீர்கள்? இப்போது..... குங்குமப்பொட்டு வைக்கிறேன் தெரியுமா...?

உங்களை வேதனைப்படுத்த இதை எழுதவில்லை. எம்போன்ற அனைவருக்கும் இது ஒரு திருப்புமுனையாக அமைய வேண்டும் என எழுதுகிறேன்.

முடிக்கிறேன்.

இப்படிக்கு,
என்றும் மறவா,
திருமதி.க.பரமேஸ்வரி.

பார்வதி அம்மாளுக்கு உலகமே சூனியமாகிவிட்டது போல் தோன்றியது. மெதுவாக கடிதத்தை மடித்து பத்திரமாக கைக்குள் சிறைப்படுத்தினாள், அதை காலம் காலமாக வைத்து பாதுகாக்க வேண்டிய பொக்கிசமாக எண்ணி!


படிப்பகம்

www.padippakam.com

**ஸ்டெல்லா அப்பாவின் முகத்தை திருப்பி இவன் இருந்த திக்கில் சுட்டிக்காட்டினாள்....**

# பொய்கள்



மலையாள மூலம்: **மாதவிக்குட்டி**

மலையாளத்திலிருந்து தமிழில்: **நிர்மால்யா**

குழந்தை இரண்டாம் முறை தூங்கியெழுந்ததும் அம்மா அவன் முன்னே நின்றிருந்தாள்.

"அம்மா, அம்மா" அவன் சடக்கென எழுந்து அமர்ந்தான்.

"என்னெ தூக்கு." அம்மாவின் கைகள் குளுமையாய் இருந்தன. அவனை முத்தமிடுகையில் அம்மாவின் கண்களில் நீர் திரண்டது.

"அம்மா போய் எத்தனை நாளாச்சு?" அவன் தவிப்போடு ஏறிட்டு நோக்கினான். அவனை அப்பாவிடமும், முரட்டுக் கைகளையுடைய சமையற்காரனிடமும் நிர்க்கதியாய் விட்டுச் சென்றதற்காக அம்மாவை ஒரு போதும் மன்னிக்கப் போவதில்லை என்ற தீர்மானத்தில் இருந்தான். அவனது அபிப்பிராயத்தை யாருமே கேட்டறியவில்லை. யாரும் அவனது சம்மதத்தைப் பெறவில்லை. 'அம்மா திரும்பிவரும்போது நான் சிரிக்க மாட்டேன். பார்த்ததும் சந்தோசத்தைக் கூட வெளிக்காட்ட மாட்டேன்' என்ற யோசனைகளெல்லாம் அவனுள் இருந்தன. ஆனால் அம்மாவின் கரங்களில் எட்டியவுடன் அவன் ஏக்கத்தால் அழத் துவங்கினான்.

"என்ன அப்பு, நான் போய் ரெண்டு நாள்தானே ஆச்சு?" அம்மா அவனைத் தூக்கியவாறு சமையற்கட்டுக்குள்போனாள். நாற்காலியை மேசைக்குப் பக்கமாய் இழுத்துப் போட்டு அவனை இருத்தினாள். அப்பா வேறொரு நாற்காலியில் செய்தித் தாளின் பின்னில் அமர்ந்திருந்தார்.

"இன்னிக்கு அப்பு எங்ககூட ஒண்ணா இருந்து காப்பி குடிக்கணும். அப்புறமா நான் கொண்டு வந்த பலகாரங்களைத் தருவேன்." அம்மா அலமாரியைத் திறந்து இரண்டு டின்களை எடுத்து வந்து மேசை மீது வைத்தாள்.

'அம்மா என்னை சந்தோஷப்படுத்த முனைகிறாள். என்னை முட்டாளாகக் கருத விடக்கூடாது.'

"எனக்கு வேண்டாம்."

செய்தித்தாளைக் கீழிறக்கி அப்பா அவனைப் பார்த்தார். பிறகு சிகரெட்டை உதட்டிலிருந்து எடுத்து புகையை மெதுவாக ஊதினார்.

"கோபப்படாதே அவனை."

"அவனெக் கெடுத்து வெச்சிருக்கிறது ராதாதான். சொல்றது எதையுமே கேட்கிறதில்லே. ரொம்ப அதிகப் பிரசங்கி!"

"பாவம்! சின்னக்குழந்தைதானே?" அம்மா அவனது தட்டில் ஒரு சிறிய லட்டும், ஒரு முறுக்குத் துண்டும் எடுத்து வைத்தாள். அப்பா சிகரெட்டை வாயிலிருந்து எடுத்து, உதட்டை லேசாய்க் குவித்து அவனை வெறித்தவாறே புகைவிட்டார்.

லட்டில் அளவுக்கு மீறின இனிப்பு. முறுக்கை வாயில் வைத்துக் கடித்து மெல்லும்போது அவனுக்குத் தோன்றிற்று. 'நான் அனைத்தையும் அம்மாவிடம் சொல்வேன். அம்மா இல்லாத போது நடந்த அனைத்தையும்- புளித்தமோர் சேர்த்த சாதத்தை அவனுக்கு சாப்பிடத் தந்ததை; விளக்கை அணைத்ததை; ஓர் அறையில் தனியே தூங்க வைத்ததை; ஸ்டெல்லா வந்தபோது இரவு நெடுநேரம் மாடிப்படியின் கீழே சில ஆட்களோடு சேர்ந்து கூப்பாடு போட்டு ரகளை செய்ததை; சிரித்ததை; புட்டிகளை உடைத்ததை எல்லாம் சொல்வேன்.'

அப்புறம் அம்மா என்னைப் படுக்கையில் கிடத்தும்போது சொல்லமாட்டாள்- "அப்பாவுக்கு அப்பு மேலே எத்தனை ஆசை தெரியுமா? அப்பு, அப்பா சொல்றதையெல்லாம் கேட்கணும்." என்று.

அம்மா புரிந்து கொள்ளட்டும், அப்பா எவ்வளவு மோசமானவரென்று. அதன் பிறகு அப்பா ஆபீஸிலிருந்து சாயந்திரம் திரும்பியதும் அம்மா இவனை மறக்க மாட்டாள்.

"அப்பு குறும்பு ஒண்ணும் பண்ணலியே. இங்கே என்னமோ, ஏதோங்கற யோசனையிலே நான் கொஞ்சம்கூட நிம்மதியா இருக்கலே."

அப்பா, அம்மாவின் கையைப் பிடித்திழுத்து மடியில் அமர்த்தினார். அவன் அதைப் பார்க்காத பாவனையில் தலையைக் கவிழ்த்துக் கொண்டான். லட்டை உடைத்துத் தட்டில் பரப்பினான். பார்த்தால் தானே அப்பா, அம்மாவைக் கடிந்து கொள்வார்.

அம்மா வருவதற்கு முந்தைய நாள் இரவில் மாடிப்படி இறங்கி இவன் கீழே சென்றபோது அப்பாவின் மடிமீதில் ஸ்டெல்லா அமர்ந்து இருந்தாள். ஸ்டெல்லா சாயங்காலமே போய்விட்டாள் என்று அவன் நினைத்திருந்தான். எல்லோரும் தூங்கும் நேரத்தில் விளக்கை எரியவிட்டு எதற்காக ஸ்டெல்லா அப்பாவின் மடி மீது அமர்ந்திருக்கிறாள்.

"ஸ்டெல்லா!" அவன் மாடிப்படி கைப்பிடியில் சாய்ந்து நின்றவாறு கம்பிகளுக்கிடையினூடே மெதுவாக அழைத்தான். ஸ்டெல்லா தலையை உயர்த்தி இவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். ஆனால் எதுவும் பேசவில்லை. கொஞ்சம் கழித்து தொண்டை வலி பிடித்தமட்டில் அப்பா வினவினார். "நீ எதுக்கு சும்மா சிரிக்கறே?" ஸ்டெல்லா எதுவும் பேசவில்லை.

"சொல்லு."

"குழந்தை."

ஸ்டெல்லா அப்பாவின் முகத்தைத் திருப்பி, இவனிருந்த திக்கில் சுட்டிக்காட்டினாள். அப்பா துணுக்குற்று எழுந்தார். ஸ்டெல்லா விழுந்துவிட்டாளெனத் தெரிந்தது. பிறகு அப்பா இவனைத் தூக்கியெடுத்துக் கொண்டு மாடிக்குப் போனார். விளக்கை எரியச் செய்து இவனைக் கட்டிலின் மேல் கிடத்தி என்னென்னவோ பேசினார். சிறிது நேரம் இவனது பாதங்களை வருடினார். இவன் கேட்டான்:

"ஸ்டெல்லா ஏன் இன்னும் வீட்டுக்குப் போகாமல் இருக்குறா?"

அப்பா எழுந்து கால்மாட்டில் இருந்த ஜன்னலை அடைத்தார். "இப்போ போயிடுவா; ராத்திரி ஆகிறதுக்குள்ளே போயிடுவா."

"இப்போ ராத்திரிதானே?"

"குழந்தைகளுக்குத்தான்; பெரியவங்களுக்கு இப்பத்தான் சாயந்திரமாகுது."

அது ஒரு புளுகு என்று அவன் புரிந்து கொண்டான். ஏனெனில் அம்மாவின் அருகில் படுத்துத் தூங்கும் நாட்களில், சில சமயம் நடுவே விழித்தெழும்போது, அந்த அறையில் குருவிக்கடிகாரம் 'கூகூ'வென சப்தமெழுப்பும். அப்போது அம்மா உறங்கிக் கொண்டிருப்பாள். பிறகு அவன் அம்மாவின் மேல் ஏறியமர்ந்து காதில் ஊதி அவளை எழுப்புவான், தண்ணீர் அருந்துவதற்காக. எனவே அப்பா இப்போது சொன்னது பொய். அவன் மாடிப்படியிறங்கும்போது குருவிக் கடிகாரம் 'கூகூ'வென பல தடவை சப்தமெழுப்பியது.

"அப்பா என்னோட பக்கத்திலே படுங்க! எனக்கு தூக்கம் வர்றதில்லே..."

"அப்பு படுத்துக்க, நான் இப்போ வந்திடுறேன்."

அப்பா கதவை மெதுவாக அடைத்து விட்டு வெளியே செல்கையில் மறுபடியும் அவன் கேட்க விரும்பினான்;

"ஸ்டெல்லா ஏன் இன்னும் வீட்டுக்குப் போகாமல் இருக்கிறா?"

அதற்கு யாரும் விடை பகரவில்லை. ஆனால் கீழே அப்பாவின் உரையாடல் நீண்ட நேரம் கேட்டுக் கொண்டிருந்தது- கடுமையான குரலில் பின்னர் ஸ்டெல்லாவின் விசும்பலுக்கிடையே இனிய குரலில்....

**கா**லையில் கண் விழித்தெழுந்த பின்னும், தான் குதிரை மீதேறி ஆகாயத்தினூடே பறந்த அக்கனவை அவன் சிறிதும் மறந்திருக்கவில்லை.

"அம்மா நான் குதிரை மேலேறி ரொம்ப தூரம் போனேன்."

"எப்போ?"

"அம்மா இல்லாதபோது. அப்புறமா சாயந்திரம் ஸ்டெல்லா வந்ததும்...."

"யாரு?"

அப்பா செய்தித்தாளை இறக்கி அவனது முகத்தை உற்றுப் பார்த்தார். கனன்று கொண்டிருந்த சிறிய சிகரெட் துண்டை அவரது உதடுகள் கவ்விக் கொண்டிருந்தன.

"ஸ்டெல்லா இல்லே ஸ்டெல்லா? உயரமான ஸ்டெல்லா? மூஞ்செல்லாம் சாயம் பூசிட்டு...."

அப்பா சிகரெட்டை டீ கோப்பையின் தட்டில் வைத்து நசுக்கி அணைத்து விட்டு கம்பீரமாகச் சிரித்தார்.

"முதல்லே குதிரைன்னு சொன்னான். இப்போ ஸ்டெல்லா. இதெல்லாம் இவன் கனவு காணுறானா, எல்லாத்தையும் யோசிச்சு வெச்சு சொல்றானா?"

அம்மா அவனது பாலில் நிறம் சேர்க்க சிறிதளவு காப்பியை ஊற்றி அவனுக்கெதிரே வைத்தாள். அம்மாவின் முகத்தில் சிரிப்பு மலர்வதற்கான ஒரு பாவனை காணப்பட்டது.

அப்பா தன்னை சினந்து பார்ப்பதைப் போல உணர்ந்தான். இப்போது என்ன செய்வதென்ற யோசனையில் ஆழ்ந்தான் அவன்.

"ஸ்டெல்லா....., ஒவ்வொரு பேரா இவனுக்கு எங்கிருந்துதான் கெடைக்குதோ! ஒரு நாளைக்கு எத்தனை பொய்யைச் சொல்றான்னு ராதாவுக்குத் தெரியுமா?"

அப்பா மீண்டும் ஒரு சிகரெட்டை எடுத்து கொளுத்தினார். தீக்குச்சியை வீசியணைத்தார்.

"அவன் சின்னக்குழந்தைதானே?" அம்மா காபியை அவனது தட்டில் ஊற்றி ஆற்றினார்.

"இந்த பொய் பேசுற சுபாவத்தை நான் அடிச்சு மாத்துவேன்!" அப்பாவின் முகத்தில் சீற்றம் இருந்தபோதிலும், அப்பா இவனது முகத்தைப் பார்க்கவில்லை.

'பொய் பேசியது யார்? நானா? அப்பாவா? குதிரை மீதேறி சவாரி போனதும், ஸ்டெல்லா வந்ததும் எல்லாமே கனவு கண்டதா?' அவன் கண்ட கனவுகளில் மனித முகங்கள் இத்தனை துலக்கமாக இருந்ததில்லை.

ஸ்டெல்லாவின் சாயமிட்ட நகங்களும், அவளது கலகலத்த சிரிப்பும், அவளது ஆடையின் நறுமணமும் இப்போதுகூட நினைவில் நிற்பதற்குக் காரணம், ஸ்டெல்லா கனவில் வந்தவள் இல்லை என்பதால்தான்.

மாலையில் சமையற்காரன் வீட்டிற்குத் திரும்பிப் போவதைக் காண, இவன் பாதையோரத்தில் போய் நின்றிருந்த வேளையில் தான் ஸ்டெல்லா வந்தாள். அவனது மோவாயைத் தொட்டபடி விசாரித்தாள்:

"இங்க அம்மா இல்லே? நான் அம்மாவைப் பார்க்கத்தான் வந்தேன்." பிறகு என்னவோ சொன்னாள். அப்பாவும், ஸ்டெல்லாவும் இவனுக்கு விளங்காத மொழியில் நீண்ட நேரம் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். தேநீர் பருகியதும், கிளம்ப முற்படுகையில் கேட்டாள்: "குழந்தை ஸ்டெல்லாவை மறந்திடமாட்டே இல்லே?"

இதெல்லாம் பொய்யா? குதிரையின் முகம் நினைவில்லை. பாயும் போது ஆகாயத்தில் கிளம்பிய வெண்தூசு மட்டுமே நினைவில் உண்டு. அது கனவாக இருக்கலாம். ஆனால், ஸ்டெல்லா-

அப்பா எழுந்து நின்று சிகரெட் துண்டைத் தரையில் போட்டு நசுக்கியபடியே சொன்னார்:

"இனி இந்த மாதிரி பொய்களைத் தயார் பண்ணி சொன்னா, நான்...."

"எதுக்கு வீணா கோபப்படுறீங்க? அவன் சின்னக் குழந்தைதானே?"

அம்மா அவனை வெளியே எடுத்துப் போனாள். முற்றத்தில் பாய்விரித்து அமரச் செய்தாள். மரப்பெட்டியிலிருந்த காதுபோன முயலையும், சிவப்பு லாரியையும், கட்டைத் துண்டுகளையும் தரையில் எடுத்து வைத்தாள்.

"அப்பு விளையாடு."

அப்பா செய்தித்தாளை எடுத்துக் கொண்டு படுக்கையறைக்குப் போனார்.

அம்மாவும், அவனும் தனிமையில் இருந்தபோது அம்மா அவனது கைகளைத் தனது கைகளுக்குள்வைத்த வண்ணம் சொன்னாள்:

"அப்பு பொய் பேசக்கூடாது தெரிஞ்சதா? மகன் பெரியவனாகி அப்பா மாதிரி ஆகணும் இல்லியா?"

அம்மாவின் கரங்கள் இதமாய் இருந்தன. அம்மாவின் நெற்றியில் இடப்பட்டு இருந்த குங்குமத்தில் கொஞ்சம் மூக்கின் மீது சிதறியிருந்தது. அம்மா மிகவும் அழகாக இருப்பதாய் அவனுக்குத் தோன்றியது. அவன் கேட்டான்:

"அம்மா குதிரையெப்பத்திக்கூட சொல்லக்கூடாதா?"

---

**"நான் எதுவும் பிழை செய்யவில்லை. அண்ணனின் சிநேகிதன் என்று பழகியிருக்கலாம்!"**

# கறுப்பு வெள்ளை



**களுவாஞ்சிக்குடி யோகன் – அவுஸ்திரேலியா**

**சு**கிர்தாவிற்குக் கல்யாணம் முற்றாகியிருந்தது. அவளின் தாயார்தான் இதை முற்றாக்கினாள். மாப்பிள்ளை சுவிஸில் இருந்தார். அங்கு 'மக்டொனாட்ல்ஸ் ரெஸ்ற்ரோறண்'டில் மனேஜராம்; யோகேஸ்வரன் பெயராம்! யோகன் என்று அழைப்பார்களாம்! இதர விபரங்களையும் சொல்லிய தாய், மாப்பிள்ளையின் முழு அளவுப் ஃபோட்டோ ஒன்றை மகளுக்குக் கொடுத்தாள்.

நல்ல உயரம், அரும்பு மீசையுடன் அழகாக இருந்தார் அந்த யோகன். அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

அவர் கொழும்பு வந்து சுகிர்தாவைத் திருமணம் செய்துகொண்டு சுவிஸுக்குத் திரும்புகிறாராம்.

திருமணத்திற்குத் திகதிகள் குறித்துப் பரிமாறப்பட்டது, கல்யாண ஏற்பாடுகளுடன் சுகிர்தா, தாய், சில சொந்தங்கள் அனைவரும் தலைநகருக்குப் பயணமாகினர்.

பிரபல்யமான ஒரு லொட்ஜில் அவளின் குடும்பம் தங்கியிருந்தது. அதற்கு அடுத்த தெருவில் மாப்பிள்ளைப் பகுதியினர் இருந்தார்கள். சுகிர்தாவுடன் மாப்பிள்ளை இரண்டு தடவை ரெலிஃபோனில் கதைத்து விட்டார். அன்றும் அவள் எங்கேயும் போகவில்லை. அவரின் ரெலிஃபோனுக்காகக் காத்திருந்தாள். ரெலிஃபோன் உங்களுக்குத்தான்! லொட்ஜ் காரர்கள் அழைத்தார்கள். விரைந்துசென்று "ஹலோ" என்றாள். "நான்தான் குமார். ஜெர்மனியிலிருந்து கதைக்கிறன்!" என்றது மறுமுனை, பழக்கமில்லாத குரல். யாரென்று அடையாளம் தெரியாமல் திகைத்து நின்றாள்.

"என்னைத் தெரியல்ல. இறந்துபோன உமது அண்ணனின் சினேகிதன் குமார்," என்று தனது ஊரையும் விபரத்தையும் சொன்னான். ஞாபகப்படுத்திக் கொண்ட சுகிர்தா, "குமார் அண்ணா! எப்படியிருக்கிறீர்கள்?" விசாரித்தாள்.

"நான் அண்ணா இல்லை, உம்மைக் கல்யாணம் செய்யப்போறவன். அந்த நேரம் உம்மில் ஆசப்பட்டன். இதை உன் அண்ணனிடமும் சொல்லிவைத்தன். அதனால் எனக்குத்தான் நீ சொந்தம். என்னைத்தான் நீ கல்யாணஞ் செய்ய வேணும்!" என்று நிறுத்தினான் குமார்.

கடுகளவும் எதிர்பார்க்காத நிகழ்வை திடீரெனக் கேட்டதும் அடங்கிப் போனாள் சுகிர்தா. அவளால் வாய்திறக்க முடியவில்லை. தவித்துநின்றாள். அவனே மறுபடியும் தொடர்ந்தான்.

"உமக்குச் சுவிஸிலிருந்து மாப்பிள்ளை வருவதாகக் கேள்வி. இந்தக் கல்யாணம் நடக்காது. நடக்கவும் விடமாட்டேன். இப்பவே இந்த ஏற்பாடுகளை நிறுத்தச் சொல்லு. என்னைத்தான் செய்யப்போகிறேன் என்று உன் அம்மாவிடம் முடிவாகச்சொல்லு. இல்லாவிட்டால் வரும் மாப்பிள்ளையிடம், "நீ எனது காதலியென்று என்னுடன் பழகிவிட்டு இப்போ பணத்திற்காக மாறியிருக்கிறாய் என்று சொல்லி இந்தக் கல்யாணத்தை நிறுத்துவேன். இதை மனதில் வைத்து நல்ல முடிவாக சிந்தித்துவை. நான் மறுபடி எடுக்கிறேன்." என்று ரெலிஃபோனைத் துண்டித்துக்கொண்டான் குமார். கல்யாணத்தை நிறுத்துவேன் என்றதும் சுகிர்தாவைப் பயம் கௌவிக்கொண்டது. அப்படியொரு நிகழ்வு நடந்தால் அம்மாவை உயிருடன் பார்க்க முடியாதென்று அவளுக்குத் தெரியும். இத்தனைக்கும் அவள் ஒரு தவறும் செய்யவில்லை. இந்தக் குமார் அவர்களது பக்கத்து ஊரில் வசித்தவன். அவளுடைய அண்ணன் படிக்கும் காலத்தில் அண்ணனுடைய சினேகிதன் என்று வீட்டுக்கு வந்து போவான். அப்பவே அவளின் அம்மம்மாவிற்கு இவனைப் பிடிக்காமல் இருந்தது. அவளின் அம்மாதான் "நல்ல பொடியனாகத் தெரிகிறான்: வந்துற்றுப் போகட்டுமே!" என்று சொல்லிவைத்தாள்.

சுகிர்தா, அவளின் அம்மா, அண்ணன் இவர்கள் குடும்பமாக எங்கேயாவது போனால் இவனும் வந்து ஒட்டிக்கொள்வான்.

திடீரென ஒருநாள் சுகிர்தாவின் தமயன் போர்க்கால சூழலினால் மாண்டுபோனான். அதன் பிறகு அவளின் குடும்பம் இவனை மறந்துபோயிற்று. இப்பொழுது கல்யாணம் முற்றாகி திருமண ஏற்பாடுகளும் முடிந்து விட்ட நிலையில் அதை நிறுத்திவிடுவேன் என்றால், நடுங்கிப்போனாள்.

'நான் எதுவும் பிழைசெய்யவில்லை. அண்ணனின் சினேகிதன் என்று அப்போது பழகியிருக்கலாம். அதற்காக இவர் ஆசையை வளர்த்துக் கொண்டால் நான் என்ன செய்வது?' என்று அவளது மனச்சாட்சி சொன்னது.

இருந்தும் அவளுக்கு நிம்மதியில்லை. ஆண்கள் எதையும் சுலபமாகச் சொல்லக் கூடியவர்கள். நாளை இங்கு அவளுடைய வருங்காலக் கணவர் வருகிறார். அவரிடம் எதையாவது சொல்லி இந்தக் கல்யாணம் நின்றுவிட்டால்! அந்த அவமானத்தை எப்படித் தாங்குவது? யோசித்தபோது தலை சுற்றியது.

அப்போது திரும்பவும் "ஃபோன்" வந்தது. ஆனால் குமார் கதைக்கவில்லை, அவளின் மாப்பிள்ளைதான் கதைத்தார்.

"சுகி, நான் சிங்கப்பூரில் நிற்கிறன். இன்னும் ஐந்து மணித்தியாலம் போனதும் உன்னை வந்து சந்திக்கப்போறன்." சொல்லி விட்டு வைத்தார்.

அவளுக்கு எதுவும் செய்யத் தோணவில்லை. அனலில் புழுவாய்த் துடித்தாள்.

சொன்னபடி சுகிர்தாவின் மாப்பிள்ளை கொழும்பு வந்து இறங்கினார். அவரின் பெற்றோரைப் பார்த்துவிட்டு, ஆவலுடன் அவளிடம் வந்தார்.

அவளின் அறைக்குள் வரும்போதே ரெலிஃபோன் வந்திருக்கிறது என்றார்கள். "வந்து சேர்ந்தது பற்றி விசாரிக்க நண்பர்கள் எடுக்கிறார்கள்!" சொல்லிவிட்டு மாப்பிள்ளை றிசீவரைத் தூக்கினார். உடலெல்லாம் உதறிய வண்ணம் சுகிர்தா நின்றாள்.

மறுமுனை கதைத்தவற்றைக் கேட்டவரின் முகம் மாறிக்கொண்டு வந்தது.

"இப்படியொரு சமாச்சாரம் இருக்கிறதா? யார் அந்தக் குமார்?" என்று கேட்டவர் வெளியேறிப் போய்விட்டார்.

அவளுக்குக் கண்ணீர் கசிந்தது. அவமானம் ஏற்பட்டாயிற்று; இருந்துதான் என்ன பயன் என்று அழுதாள். அப்போது திருமண ஏற்பாடுகளைக் கவனிக்க வெளியில் போயிருந்த தாயும் வந்து சேர்ந்தாள். இனியும் மறைக்க முடியாது என்று நடந்தவைகளை சுகிர்தா தாயிடம் சொன்னாள்.

கல்யாணம் குழம்பிவிட்டது எனத் தாய் கதற ஆரம்பித்துவிட்டாள், செய்வதறியாது திகைத்து நின்றாள் சுகிர்தா.

அழுகை ஆரவாரங்கள் அடங்கியிருந்த வேளை; அவர்களின் அறைக்கதவு தட்டப்பட்டது. திறந்தபோது மாப்பிள்ளை நின்றிருந்தார். மீண்டும் சுகிர்தாவிற்கு விம்பல் தோன்றியது. உள்ளே வந்தவர் "என்ன நடந்தது சுகிர்தா?" என்று பரிவாக விசாரித்தார். நடந்த உண்மைகளை அவள் கண்ணீருடன் சொன்னாள்.

அழுது கொண்டிருந்த அவளின் தாயை அழவேண்டாம் என்று தேற்றினார் அவர்.

அப்போது அந்தக்குமார் திரும்பவும் ஃபோன் எடுத்தான்.

ஃபோனைத் தூக்கிய மாப்பிள்ளை, அவன் சொன்னவை அத்தனையையும் கேட்டார்.

பின் அமைதியாக "சுகிர்தா அந்தநேரம் உங்களைத் திருமணமே செய்திருக்கலாம்; அது எனக்கு முக்கியமல்ல, அவளின் இப்போதைய முடிவுதான் முக்கியம்!"

என்றவர் அவளிடம் "றிசீவரை"க் கொடுத்தார்.

"அண்ணனின் நண்பனான உங்களை, நான் இன்னொரு அண்ணனாகத்தான் நினைத்துப் பழகினேன், என் நெஞ்சில் வேறெந்த நினைப்பும் இருக்கவில்லை" என்று சொல்லி றிசீவரை வைத்தவள் மாப்பிள்ளையைப் பார்த்தாள்.

அவரின் கையில் அழகான 'நெக்லெஸ்' ஒன்றிருந்தது.

"இதுதான் நான் உமக்கு வாங்கிய திருமணப்பரிசு இதை வாங்கத்தான் அப்போது வெளியேறிப் போனேன்!" என்றார்.

அவர் வாங்கிய அந்தப் பரிசை நன்றியுடன் அழகுபார்த்தாள் சுகிர்தா. அப்போது அவளைக் கண்ணால் அளந்து கொண்டிருந்தார் மாப்பிள்ளை.



படிப்பகம்

மறந்துவிடுங்கள்" என்றாள்.
விழிகளில் சோக இருள்.

"மறந்துவிடுவதற்காகவா
காதல் வானில் பறந்தோம் கண்மணி?"

"பறந்தது உண்மைதான்
தொடர்ந்தும் பறந்தால்
அம்புபட்டு மடிந்து போவோம்!"

"மரணம் நம்மைப் பிரிக்கும்
என்றா நினைக்கிறாய்?
மரணத்தையே மரணிக்கச் செய்யும்
அமர காதலடி நம் காதல்!"

"மரணத்திலும் நாம்
பிரிந்துவிடக்கூடாது என்பதற்காகவே
தருணம் அறிந்து செய்த முடிவு இது?"

"சாதல் என்றதும்
காதலை பதுக்கிக்கொண்டாயா?"

"என் உயிர் எனக்கு
வெல்லமல்ல-உங்கள்
உயிர் ஓய்ந்துவிடக்கூடாதே
என்பதுதான் என் நிரந்தர அக்கறை!"

"போடி பைத்தியக்காரி,
உன்னைக் காணும்வரைதான்
உயிர் என்ற ஒன்று இருந்தது
உன்னைக் கண்ட பின்னர்
உயிரே நீயாகிவிட்டாயடி தெரியாதா?"

"வார்த்தைகளை அம்பாக்கி
என்னை வதைக்காதீர்கள்!"

"வாழ்க்கையே வதையாகிவிடுமே
நீவேறு நான் வேறு என்றாகிவிட்டால்!"

"பிரியப்போவது நாங்கள்தான்
பிரியமான நம் காதலல்ல!"

"வேரோடு பிடுங்கப்பட்ட மரமும்
வேறொரு மண்ணில் வாழலாம்.
வேறாகிவிட்ட நமக்கு
வேறொரு வாழ்க்கை இருக்க முடியுமா?"

"நினைவுகள் நீருற்றும்
சோகங்களே நிழலாகும்
இணைந்திருந்தால் வாழ முடியாது என்றால்
பிரிந்திருந்தாவது நம்மில் ஒருவர் வாழலாமே!"

"உன்னால் முடியுமா?"

"முயற்சிப்பேன்-முயற்சிப்போம்!"

"முயன்றுபார் கண்மணி
மூன்று நாள் அவகாசம் தருகிறேன்!"

"இது என்ன
காதலுக்கு காலக்கெடுவா?"
சோகத்திலும் புன்னகைத்தாள்.

"இல்லையடி கண்மணி
காதலை
சலவை செய்து பார்க்க
உனக்கொரு சந்தர்ப்பம்!"

"சுத்தமானதுதான்
என் காதல்- சோதனை எதற்கு?"

"என்ன செய்வது
எப்படியோ ஒரு கரும்புள்ளி
வெள்ளைக் காதலில் விழ்ந்துவிட்டதே!"



# இலக்கிய நயம்

"புள்ளி காதல் மீதல்ல
காதலர்மீது!"

"யார் வைத்தது?"

"என் தந்தை!"

"அங்கீரிக்கப்பட்ட
எந்தக் காதலுக்கும்
அமர காதல் என்று பெயர் கிடையாதே!"

"அமர காதல் கதையெதிலும்
காதலர்கள்
கடைசிவரை வெல்லவேயில்லையே!"

"போடி பைத்தியம்!
காதல்
அவர்களை வாழவைத்தது!
அவர்கள்
காதலை வாழவைத்துப் போனார்கள்!"

"வேதாந்தம்
வாழ்க்கைக்கு உதவுமா?"

"வாழ்க்கையே
ஒரு வேதாந்தம்தானே!"

"உங்களோடு
வாதித்து வெல்ல முடியாது!"

"உன்னோடு
வாழாமல் என்னால் வெல்ல முடியாது!
துடுப்பில்லாத தோணி
கரை சேராது கண்மணி!"

பிரிந்தனர்
மூன்று நாட்களும்
இருவரும் முள்ளின்மேல் கிடந்தனர்.

"பஞ்சணை நொந்ததடி
பாலும் கசந்ததடி" என்ற
பாடலின் அர்த்தம் புரிந்தது.

"மங்கிய நிலாவொளியும்
மனதுக்கு இனிமையில்லை
ஊரெல்லாம் உறங்கும் நேரம்
உள்ளத்தில் அமைதியில்லை"
புரண்டாள்-புழுங்கினாள்.

"மூன்று நாட்களா?
மூன்று நொடிகள்கூட
உன் நினைவில்லாமல்
என் உயிர் தாங்காது காதலா!"
அவளுக்குப் புரிந்தது.

உதட்டால் உச்சரித்து
உருவான காதலல்ல
உள்ளத்தால்
உயிர்விட்டு வளர்த்த காதல்!

நினைத்தால் தேன் சிந்தும்
அணைத்தால் தேகம் சிலிர்க்கும்
அதை நினைத்தால் இன்றும் தகிக்கும்.

இதழ்கள் சிறையிருக்க
இனிமை மடை திறக்க
இதயம் பட படக்க
உதயம் புதுக் கவிதை!
காதலும் கவிதைதான்
காதலில் ஊறிய காமமும் கவிதைதான்!
விம்மினாள் தாபத்தில்
விம்மினாள் சோகத்தில்!

மூன்றாம் நாள்
அவன் முன்னே தோன்றினாள்.

பார்த்தான்-
கண்களால் படமெடுத்தான்!

மல்லிகை
வாடியது போலிருந்தாள்.
ரோஜா
இதழ் உதிர்ந்தது போலிருந்தாள்.

"என்ன
சலவை செய்து பார்த்தாயா?"

பதில் சொல்லாமல்
கண்களில் காதலோடு
கண்மணி அவளைப் பார்த்தான்!

"முடியுமா
காதலை முறித்துப் போட?"

மௌனம்!

"முடியுமா
ஒரு பாதி உயிர் பிரிய?"

மௌனம்!
மௌனம்!
மௌனம்!

# தருவது ரசிகன்

"உன்னில் என்னையும்
என்னில் உன்னையும்
இடம் மாற்றிக் கொண்டபின்
தடம் மாறுவது முடியுமா?"

கண்கள் பேசின.

நெருங்கினான்
நெருக்கி அணைத்தான்!

"நான்தான்
விடையே சொல்லவில்லையே
கோபமே இல்லையா?"

அவன் சொன்னான்:

"வாய்வழி பேசவில்லை
விழி வழி பேசிவிட்டாய்
உதட்டுக்கு நீ
தடைதான் போட்டாலும்
உன்னையும் கடந்துவந்து
உன் கண்கள் பேசுமடி
உள்ளதை உடனே சொல்லுமடி
கண்களின் வார்த்தை புரிந்துவிட்டால்
காதலர் வாழ்வில் வருத்தமில்லை!"

சிரித்தாள் அவள்
சிலிர்க்க வைத்தான் அவன்.

காதலியின்
உத்தரவையும் கடந்துவந்து
கண்கள் சொல்லும் செய்திக்கு
குறளும் சாட்சி.

"கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்க லுறுவதொன்று உண்டு

குறள் 1271- அதிகாரம் 128

# சொல்லாமல் தெரியும்

"என்ன, இப்படிக் கேட்கிறாய்? நான் திருப்தியாக முழுமையாகக் குடித்திருந்தால் அங்கேயே- சாராயக்கடையிலேயே விழுந்து கிடந்திருப்பேன். என்னை யாராவது பத்திரமாக வீட்டிற்குக் கொண்டுவந்து போட்டிருப்பார்கள். இப்படி அரைகுறையாகக் குடித்ததால் வீட்டிற்கு நாமே போய்விடலாம் என்று நடக்க ஆரம்பித்தேன். வழியில் சாக்கடையில் விழுந்து கணுக்காலை ஒடித்துக்கொண்டேன்."

# சிந்தியா பதில்கள்

* மாணவர்கள் எப்படி இருக்க வேண்டும்?

த. செல்வமதி, பதுளை.

எப்படி இருக்கக்கூடாது என்று சொல்கிறேன். இப்படி:

முத்தமிடுதலின் தீமைகளைப் பற்றி ஒரு மருத்துவப் பேராசிரியர் மாணவர்களுக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார்.

"ஒரு பையன் பெண்ணை முத்தமிடும்போது 40,000 கிருமிகளை அவனது வாயிலிருந்து அவளது வாய்க்கு வழங்குகிறான். இதனை எப்படிச் சரி செய்வது?"

ஒரு மாணவி எழுந்து பதில் சொன்னாள்: "அந்தப் பெண்ணும் பதிலுக்கு அவனுக்கு ஒரு முத்தம் கொடுத்தால் அதே 40,000 கிருமிகளை இடமாற்றம் செய்துவிடலாமே சேர்!"

* இவ்வருட இறுதிக்குள் அரசியல் தீர்வு காணப்படும் என்று செய்திகள் வருகிறதே?

மா. தவேந்திரன், கொழும்பு-09.

எப்போது வேண்டுமானாலும் தீர்வு காணலாம்: எப்படியான தீர்வு என்பதுதானே பிரச்சனை. சாப்பாடு என்றால் கட்டுச்சோறும் கொடுக்கலாம்: கடித்துப் போட்ட எலும்புத்துண்டும் கொடுக்கலாம். முன்னது தேவை என்றால் நம் முஷ்டிகள் பலமாக இருக்கவேண்டும். பின்னது தேவை என்றால் நாம் முட்டி போட்டு இருக்கவேண்டும்.

* டியர் சிந்தியா! அமைச்சரவையில் மாற்றங்கள் வரும் என்கிறார்களே? ஏன் திடீர் மாற்றங்கள்?

என். முஹமட், காத்தான்குடி.

அதுதான் மாற்றிவிட்டார்களே. சில மாற்றங்களுக்குக் காரணம் புகார்கள்தானாம். அதெல்லாம் இருக்கட்டும் பிரேமதாசா காலத்தில் அவர்மீது பொதுஜன முன்னணி சொன்ன குற்றச்சாட்டுக்களில் ஒன்று அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் தொகை அதிகம் என்பது. ஆனால் இன்று....? பிரேமாஸ்டைலை மேடம் ஃபாலோ பண்ணுறாங்களா?!

* சமீபத்தில் வியக்கவைத்த செய்தி?

செல்வி ஆ. சாந்தினி, வட்டவளை.

அவுஸ்திரேலியாவில் ஒரு கழுதைக்கு வீரவிருது கொடுத்திருக்கிறார்கள். இரண்டாம் உலகப்போரில் காயப்பட்ட அவுஸ்திரேலிய வீரர்கள் பலரை சுமந்துசென்று பத்திரமாகச் சேர்ப்பித்ததாம். எண்பது வருடத்தின் பின்னர் நினைவுவைத்து நன்றிக்கடன் செய்திருக்கிறார்கள். நேற்று செய்த உதவியையே இன்று மறக்கும் உலகில் இது வியப்பான விஷயம்தானே!



ரம்பா, சிம்ரான்

* ரம்பா ஒருபுறம் சிம்ரான் மறுபுறம், அப்பாஸ் யார் பக்கம் சாய்வார்?

எம். நியாஸ், கொழும்பு-06.

இருபுறமும்!

* சோனியாவின் திடீர் அரசியல் பிரவேசம் ஏன்?

ஆர். குகதாசன், வவுனியா.

கணவர் பெயரைக் காப்பாற்றும் ஆசை ஒன்று; பிரியங்காவுக்குத் திருமணமானதால் சுமை குறைந்தது மற்றொரு காரணம்.

* சிந்தியா! நம்நாட்டிலும் இலஞ்சம் தலை விரித்தாட ஆரம்பித்திருக்கிறதே? இதற்கு யார் காரணம்?

ஏ. விஜி, மாத்தளை.

இலஞ்சம் வாங்கியதற்காக ஒரு அதிகாரியைக் கைதுசெய்து சிறையில் வைத்தார்கள். சிறையில் அவரைச் சந்தித்த நண்பர் ஒருவர் கேட்டார்,

"எப்படி இந்த இக்கட்டில் இருந்து மீளப்போகிறீர்கள்?"

அதிகாரி சொன்னார்: "ஓ.... அதுவா, அது ரொம்பச் சுலபம். இலஞ்சம் வாங்கினேன், என்பதற்காக இங்கே வந்திருக்கிறேன். இங்கிருந்து வெளியேபோக நான் இலஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கும்: அவ்வளவுதான் வித்தியாசம்."



'ஒன்ஸ்மோர்'–சிவாஜி, சரோஜாதேவி

* விஜய்-சுவலட்சுமி நடித்த 'லவ் டுடே' எப்படி சிந்தியா?

செ. பாமினி, வவுனியா.

நகைச்சுவை ஓ.கே. காதல் கதை சீசனில் மற்றொரு லட்டு. காதலும் கற்று மற என்று முடிந்திருக்கும் கிளைமாக்ஸ் வித்தியாசம். பார்க்கலாம்!

* தமிழ்நாட்டில் தி.மு.க.- த.மா.கா. உறவு எந்த நிலையில் உள்ளது?

என். நவரட்ணம், இராகலை

'நம்ப நட,நம்பி நடவாதே' என்ற நிலையில்.

* தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் ஆதரவு 'பந்த்' எதிர்பார்த்த அளவில் இல்லைப்போல் இருக்கிறதே?

கா. மாணிக்கராஜ், கொழும்பு-12.

'தி.மு.க. நீயுமா?' என்றுதான் கேட்க வேண்டியுள்ளது.

* நம்நாட்டில் இன்றைய ஹீரோ யார்?

வி. புவனேஸ்வரன், மட்டக்களப்பு.

ஹீரோ-யுத்தம்: ஸீரோ-தமிழ் கட்சிகள்.

* ஜெயா-சசி மறுபடி சேர்ந்துவிட்டார்களாமே?

செல்வி க. இந்திராணி, மஸ்கெலியா.

அவர்களாகப் பிரியவேயில்லையே! சிறைதானே பிரித்தது. சிறைமீண்ட சசியும் ஜெயாவும் விடிய விடியப் பேசிக்கொண்டே இருந்தனராம். சசிகலா விடுதலையான தினத்தன்று ஜெயாவீட்டுப் படுக்கையறை விளக்குகள் அதிகாலை இரண்டு மணிக்குத்தான் அணைந்தன என்று தமிழகப் பத்திரிகை ஒன்று செய்திபோட்டிருக்கிறது. இனி பத்திரிகைகளுக்குக் கொண்டாட்டம்தான். தீனி கிடைக்குமே!

ஸ்போர்ட்ஸ்

# கூடையிலே பணக்கட்டு!



அமெரிக்காவின் பிரபலமான கூடைப்பந்து விளையாட்டு வீரர் மைக்கல் ஜோர்டான். வயது 33. நெடு நெடு உயரம். கூடைக்குள் பந்தை அலட்டிக்கொள்ளாமல் தள்ளிவிட வசதியான உயரம்.

'சிகாகோ புல்ஸ்' என்னும் கூடைப்பந்து அணிக்காக விளையாடிவரும் மைக்கேல் ஜோர்டானின் ஒரு ஆண்டு வருமானம் அதிகமில்லை; ஆக, 110 கோடி. இது தவிர விளம்பரப் படங்கள் மூலம் மேலும் கொஞ்சம் வருகிறது. ஆக, 60 கோடி..

இதுவரை உலகில் வேறெந்தக் கூடைப்பந்துவீரரும் சம்பாதிக்காத தொகை இது. கூடையிலே பந்தைப் போடுகிறார். தனது கூடையிலே பணக்கட்டுக்களை வாங்கி அடுக்கிக்கொண்டு போகிறார்.

இப்போது மைக்கேல் ஜோர்டானுக்கு மற்றொரு வாய்ப்பு: சினிமாவில் நடிக்கத் தொடங்கிவிட்டார். 'ஸ்பேஸ் ஜாம்' என்னும் காட்டுன் படத்தில் நடித்திருக்கிறார். அமோக வரவேற்புக் கிடைத்திருக்கிறதாம். ஏதோ மேலும் கொஞ்ச வருமானத்திற்கு வழி பிறந்திருக்கிறது.

# யார் இந்த ஜெயசூர்யா?



"சனத் ஜெயசூர்யா- இந்த நட்சத்திரக் கிரிக்கெட்காரரின் தோள்கள் எலும்பால்தான் ஆனதா? அல்லது இரும்பாலா? என்று இரசிகர்களுக்குச் சந்தேகம். புயல்வேகம், ரயில் வேகம் என்ற உவமைகளுக்கெல்லாம் அடங் காத ராட்சஸ வேக ரன் குவிப்பாளர்.

யார் இந்த ஜெயசூர்யா?

அதிகம் படித்தவரில்லை. படு ஏழையான குடும்பம். ஆனால் கிரிக்கெட்டில் மட்டும் அசாத்திய ஆர்வம்.

ஒரு செஞ்சரிகூட வேண்டாம். வெறுமனே அணியில் இடம்பெற்றாலே தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் கட்டிக்கொண்டு விடுகிற கிரிக்கெட்டர்களுக்கு நடுவே. இவர் எளிமையின் இலக்கணம்.

பணிவு என்றால் அப்படி ஒரு பணிவு. எட்டுமுழ வேட்டியுடன் வெறும் தரையில் படுத்துத் தூங்குகிறவர். கட்டில் கூடக் கிடையாது.

கிரிக்கெட் ஆடாத சமயங்களில் வண்ணமயமாய் பெர்முடா, நிஜாரில் சக ஆட்டக்காரர்கள் வலம் வந்தாலும் இவர் வேட்டியை விடாதவர்.

இன்னும் திருமணமாகாத- மகாராஜா நிறுவனத்தில் வேலைபார்க்கும்- கொழும்பில் சொந்தவீடு கட்டிக் கொண்டிருக்கும் ஜெயசூர்யாவுக்கு அபார தெய்வ பக்தி. தினமும் பிரார்த்தனை செய்யும் வழக்கமுள்ள இவர் புத்த மதத்தைச் சேர்ந்தவர். ஆயினும் திருப்பதி வெங்கடாசலபதிமேல் மாளாத காதல். இந்தியாவுக்கு வரும்போதெல்லாம் அங்கு சென்று வழிபட்டுவரத் தவறமாட்டார்.

இந்த முறை கூட சக ஆட்டக்காரர்களை நேரே டில்லிக்கு அனுப்பிவிட்டு, தனியாகத் தாம் மட்டும் திருப்பதி போய்வந்திருக்கிறார். ஜெயசூர்யாவுக்குத் தமிழ் தெரியும்." இத்தனை புகழாரமும் தமிழக சஞ்சிகையான 'கல்கி' ஜெயசூர்யாவுக்கு சூட்டியிருப்பவைதான்.

## இவர்தான் அவர்



காந்திமதி

* இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு தமிழர்களும், முஸ்லிம்களும் ஆதரவு காட்டுவது குறைவாக இருப்பது ஏன்?

சி. கரன், ஹட்டன்.

மேற்கிந்தியத்தீவுக்கு இலங்கை அணி சென்றிருக்கிறது. ஒருநாள் போட்டி காண கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தோம். போட்டி ஒளிபரப்பாகவில்லை. ஏன், எதற்கு? யாருக்கும் தெரியாதுங்க. சிங்களத்தில் மட்டும்தான் ஸ்ரையெல்லாம் கட்டிக்கொண்டு வந்து ஒருவர் அறிவிக்கிறார். தமிழர்களும், முஸ்லிம்களும் விழித்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்கவேயில்லை பாருங்கள். இதுதான் தேசிய ஒற்றுமை. இப்போது சொல்லுங்கள் நாம், நமது என்ற உணர்வுதோன்றத் தடை யாருங்க?!



'ஜீன்ஸ்'–பிரசாந்த், ஐஸ்வர்யா ராய்

* சிந்தியா! பிரசாந்த்-ஐஸ்வர்யா ராய் இருவரும் காதலிக்கிறார்களா? 'ஜீன்ஸ்' எப்போது வரும்?

எம். உதயா, கண்டி.

சேச்சே காதல் எல்லாம் கிடையாது. கலகலப்பாகப் பழகினார்களாம். பிரசாந்த் சுறுசுறுப்பான பையன் என்று ஐஸ்வர்யா ராய் சான்றிதழ் கொடுக்குமளவுக்கு மட்டும்தான் பழகியிருக்கிறார்கள். படப்பிடிப்பு ஓவர். விரைவில் வெள்ளித்திரையில்.

* குடிகாரர்களை திருத்தவே முடியாதா?

ஜே. எட்வின், நீர்கொழும்பு.

ரொம்பக் கஷ்டம்தான்! ஒரு குட்டிக் கதை: நண்பன் நொண்டி நொண்டி நடப்பதைக் கண்டு அனுதாபத்துடன் அவன் கேட்டான், "எப்படி இந்த விபத்து ஏற்பட்டது?"

நொண்டியவன் சொன்னான்: "எல்லாம் இந்தச் சாராயத்தால் வந்த வினை. சரியாகச் சாராயம் சாப்பிடாததால் இப்படி நடந்துவிட்டது."

"அப்படியா, ஆச்சரியமாக இருக்கிறதே! சாராயம் சாப்பிடாவிட்டால் இப்படிப்பட்ட விபத்துக்கள் நேருமா?" என்றான் நண்பன்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 87

## செயற்கரிய செயல் புரிந்த சுக்கிரீவன்

இராமபிரான் தன் அருகே நின்றிருந்த சுக்கிரீவன், திடீரென்று வானத்திலே கிளம்பிச் சென்றதைப் பார்த்தார். இராவணன் தன் கோட்டை மதில் மீது ஏறி நின்று தங்களை அவதானித்ததைக் கண்ட சுக்கிரீவன் கடும் சினங் கொண்டவனாகக் காணப்பட்டதை இராமபிரான் கண்ணுற்றார்; எனினும் தன்னிடம், கூட எதுவுமே கூறாமல் சுக்கிரீவன் இராவணன் நின்றிருந்த பக்கம் வானில் தாவிச் சென்றமை அவருக்குப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

வானில் தாவிச் சென்ற சுக்கிரீவன் இராவணனை அணுகி, அவனுடைய பத்துச் சிரசுகளையும் அலங்கரித்த கிரீடங்களைப் பறித்து கீழே வீசி எறிந்தான். என்னதான் நடந்தது என்று இராவணன் அனுமானிக்க முன்னே ஓடி மறைந்தான்; எனினும் அவ்விடத்தைவிட்டு உடனடியாக இராமபிரானிடம் செல்லவில்லை. கோட்டையின் சிகரங்களில் ஏறி நின்று, அக்கோட்டை அரண் செய்யப்பட்டிருந்த முறைகளைக் கண்ணுற்றான். மீண்டுமொருமுறை இராவணன் முன்தோன்றி இராவணனின் மலைபோல் திரண்ட மார்பில் தன் இருகைகளாலும் ஓங்கிக் குத்தினான். அத்தாக்குதலும் இராவணனைச் சற்று தடுமாற வைத்து விட்டது. அடுத்த தடவை சுக்கிரீவன் பாய்ந்து வந்து தனது வலது காலால் இராவணனின் மார்பில் உதைத்தான். ஆனால் அந்த உதை அவன் மார்பில் படவில்லை. தனது இருகைகளாலும் இராவணன் சுக்கிரீவனின் இரு கால்களையும் பிடித்துக் கொண்டான். அப்படியே மூன்று முறை சுற்றிச் சுழற்றிவிட்டு சுக்கிரீவனை கோட்டையின் கீழ்ப்புறத்தே இருந்த அகழியில் வீசினான். அகழியில் நீர் நிறைந்திருந்தது. அதனால் சுக்கிரீவனுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை. மீண்டும் தாவிக்குதித்து கோட்டைமீது ஏறிக்கொண்டான். இருவருக்கும் சிறிது நேரம் மல்யுத்தம் நடைபெற்றது. இருவருமே ஒருவரை ஒருவர் கட்டிப் புரண்டு ஒன்றாகவே



அகழிக்குள் விழுந்தனர்.

இராவணனுடன் சுக்கிரீவன் மோதிய காட்சியை இராமபிரானும் அவருடனிருந்த ஏனையோரும் தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரும் அகழிக்குள் வீழ்ந்ததை எவரும் காண முடியவில்லை. இதனால் தன் நண்பனான சுக்கிரீவனுக்கு என்ன நேர்ந்ததோ என்று தெரியாமல் இராமபிரான் மனம் கலங்கினார்.

இராவணன் மாபெரும் வீரன்; மாய விளையாட்டுக்கள், மந்திர தந்திரோபாயங்கள் தெரிந்தவன். சுக்கிரீவனுக்கு எத்தகைய கொடுமையைச் செய்து விட்டானோ என்று பெரிதும் விசனப்பட்டார்.

### இராமபிரானின் பெரும் துயர்

சீதையைப் பிரிந்த துயரத்தால் துடித்த இராமபிரான், சுக்கிரீவனைக் கண்டு அவனை நண்பனாக ஏற்றுக்கொண்டது முதல் ஓரளவு மன அமைதி கண்டவராகக் காணப்பட்டார். சுக்கிரீவனின் துணையுடன் சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனுடன் போர் தொடுக்க வானர சேனையைத் திரட்டிக் கொண்டு இலங்கை கரை வந்து சேர்ந்தார். இதே காலகட்டத்தில் சுக்கிரீவன் அதே இராவணனால் சற்றும் எதிர்பாராத நிலையில்-கொல்லப்பட்டு விட்டான் என்ற நிலை ஏற்பட்டால் எப்படி இருக்கும்! அவ்வாறு சுக்கிரீவன் இராவணனால் கொல்லப்பட்டிருந்தால், தான் உயிருடன் இருந்தும் எதுவித பலனும் இல்லை என்று இராமபிரான் வேதனைப்பட்டார். தனது தம்பி இலக்குவனை அருகழைத்து வேதனையுடன் கண்ணீர்விட்டார். இலக்குவன் தேறுதல் சொன்னார். "சுக்கிரீவனும் இணையில்லாத வீரன்; கதிரவனின் மகன். இராவணனுக்குச் சமமான பலம் படைத்தவன். அவனுடைய உயிரைப் போக்க இராவணனால் முடியாது," என்று இலக்குவன் ஆறுதல் கூறி அண்ணனைத் தேற்றலானார்.

அப்போது தான் சுக்கிரீவன் தெற்கு வானில் மிதந்து வருவது தெரிந்தது. தனது உற்ற நண்பன் சுக்கிரீவன் உயிருடன் திரும்பி வருவதை அண்ணன் இராமனிடம் தம்பி இலக்குவன் சுட்டிக் காட்டினார். அக் காட்சியைக் கண்டதும் இராமபிரானின் முகத்தில் மலர்ச்சியும் மகிழ்ச்சியும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டன.

சுக்கிரீவனைக் கண்டதும் இராமபிரான் தன்னுடைய உணர்வினை வெளிக்காட்டும் முறையில் கம்பர் பெருமான் கூற்று இது:

**இந்நிலை விரைவின் எய்தாது**
**இத்துணை தாழ்த்தி ஆயின்**
**நல் நுதல் சீதையால் என்**
**ஞாலத்தால் பயன் என் நம்பி**
**உன்னை யான் தொடர்வல் என்னைத்**
**தொடரும் இவ்வுலகம் என்றால்**
**பின்னை என் இதனைக் கொண்டு**
**விளையாடிப் பிழைப்ப செய்தாய்?**
(யுத்த காண்டம்-873)

**பொருள்:**

"இந்த நேரத்தில் **விரைவாக** நீ இங்கு வந்து சேராமல் **காலம்** தாழ்த்தியிருந்தால் உனக்குத் தீங்கு நேர்ந்துவிட்டது என்றே நான் எண்ணியிருப்பேன். அவ்வாறு **உனக்**குத் தீமை ஏற்பட்டிருக்குமானால், நல்ல அழகான நெற்றியை உடைய சீதையைப் மீட்டும் எதுவிதமான பலனும் ஏற்படப்போவதில்லை. இந்த உலகத்தால் தான் எத்தகைய பலன் ஏற்படப் போகிறது! **உன்னைப் பின்** தொடர்ந்து நானும் என் **உயிரை விட்டிருப்**பேன். என்னைப் பின்பற்றி உலகத்தவரும் **உயிர் துறப்பர். இத்தகைய விபரீதமான விளையாட்டில் ஏன் நீ ஈடுபட்டாய்?**"

இராமபிரானிடம் கூறி விடைபெற்றுச் செல்லாமல், இராவணனைக் கண்டதும் ஏற்பட்ட கோபத்தால் திடீரென வானில் தாவி இராவணனுடன் பொருதச் சென்ற தனது மடமையை உணர்ந்து சுக்கிரீவன் வேதனைப்பட்டான். தான் அவ்வாறு நடந்து கொண்டமை தவறானதுதான் என்று இராமபிரானிடம் மன்னிப்புக் கோரினான். அவசரப்பட்டு எக்காரியத்திலும் திடீரென இறங்குவது, தான் சார்ந்த வானர குலத்துக்குரிய குணமெனக் கூறினான்.

### கைமாறு செய்யக் கடமைப்பட்டவன்

கிட்கிந்தை இராச்சியத்தையும் தனது அன்பு மனைவியையும் தனக்கு மீட்டுத் தந்து பெருமைப்படுத்தியமைக்குக் கைமாறாக எதையாவது உடன் செய்ய வேண்டும் என்ற துடிப்பினால் முன்யோசனைக்கு இடம்தராமல் நடந்து கொண்ட பேதமைக்காக உளமார மனம் வருந்தினான் சுக்கிரீவன்.

"சீதாப் பிராட்டியாரை வான வீதியில் இராவணன் கவர்ந்து சென்றபோது அவனை எதிர்த்துப் போராடி இறந்த சடாயு பெருமானைப் போல் நான் எதையும் செய்யவில்லை. கங்கையைக் கடப்பதற்குத் துணை புரிந்து, தக்கபடி உபசரித்த குகனைப் போல் என்னால் எதையும் செய்ய முடியாமற் போய்விட்டது. சீதாப்பிராட்டியாரை மீட்டுக் கொண்டுவந்து தங்களிடம் ஒப்படைக்கும் வலிமை இல்லாதவனாகிவிட்டேன். தங்களுக்கு கொடுமை புரிந்த தீயவனான இராவணனின் பத்துத் தலைகளையும் கிள்ளிக்கொண்டு வந்து தங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கவும் முடியாதவனாகிவிட்டேன். வீர ஆஞ்சநேயர் விண்தாவிச் சென்று ஜானகி தேவியைக் கண்டு, அரக்கர் படையை அதம் செய்து இலங்கை நகரைத் தீக்கிரையாக்கி விட்டு வந்தார். அந்தளவு ஆற்றலும் என்னிடம் இருக்கவில்லை. அரக்கர் தலைவனையும் அரக்கர் குலத்துக் கொடியவர்களையும் அழித்தொழிக்கும் கடமையை ஏற்றுள்ள தங்களுக்கு முன்னால் நான் பாய்ந்து சென்று பகை முடிக்க நினைத்தது தவறு என்பதை உணர்ந்து கொண்டேன். இருப்பினும் அந்த



இலங்கையர்கோனின் மணி முடிகளில் பொருத்தப்பட்டிருந்த விலை மதிப்பற்ற மாணிக்கப் பரல்களைப் பறித்துக்கொண்டு வந்துவிட்டேன். இவற்றை நான் கவர்ந்து வரவில்லை; அந்தத் தசகண்ட இராவணனின் தலைகளில் இனி முடி ஏறாது என்பதனையும் அவன் இனிமேல் தங்கள் தாள்களில் வீழ வேண்டியவன் என்பதனையும் விளக்கவே இவற்றைத் தங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்!"

இவ்வாறு சுக்கிரீவன் கூறி இராமபிரானின் தாள் தொட்டு வணங்கினான். இராமபிரான் உளம் நெகிழ்ந்தவராக சுக்கிரீவனை மெல்லத் தோள் தொட்டுத் தூக்கி நிறுத்தி இறுகத் தழுவிக்கொண்டார். அரியதொரு காட்சியைக் கண்டதனால் சுற்றியிருந்த அனைவரது கண்களும் குளமாயின.

### வீடணன் பாராட்டு

தனது அண்ணனாகிய இராவணனின் கிரீடங்களிலிருந்து சுக்கிரீவன் பெயர்த்து வந்த மணிகளைப் பார்த்து விபீடணன் வியப்புக்குள்ளானார். வலிமை மிக்கவனான இராவணனின் கிரீடங்களைப் பறித்தமை வீரதீர மிக்க செயலாகும் என்று பாராட்டினார். எவர்க்கும் எளிதில் கிடைக்க முடியாத அம் மணிகளைப் பெயர்த்தெடுத்தமையினால் இராவணன் தன் உயிருக்குமேலான மானத்தையே இழந்தவனாகிவிட்டான், என்று சுக்கிரீவனைப் புகழ்ந்தார்.

***

சுக்கிரீவனின் திடீர்த் தாக்குதலால் இலங்கையர்கோன் இடி விழுந்தவன் போலாகிவிட்டான். சோர்ந்து சோபை இழந்து தன் அரண்மனையை அடைந்தான். பெறற்கரிய வரங்களையெல்லாம் பெரும் தவமிருந்து பெற்றும், பத்துத் திக்குகளுக்கும் தன் ஆதிக்கத்தைப் பரப்பியும், ஈரேழு பதினான்கு உலகும் போற்றிப் புகழும் பெருமையை அடைந்தும் எக்குறையும் இல்லாமல் தலை நிமிர்ந்து வாழ்ந்த தனக்கு இத்தகைய இகழ்ச்சி ஏற்படக் காரணம் என்ன என்று சிந்திக்கலானான். எவ்வாறு சிந்தனையை மோதவிட்டாலும் சீதாப்பிராட்டியாரைத் தன்வசப்படுத்துவதற்காக தான் மேற்கொண்ட காரியமே பெரும் தீமையான செயல் என்பதனை எண்ணிப்பார்க்க அவன் மனம் ஒத்துக்கொள்ளவில்லை. ஜானகி மேல் கொண்ட பெரும் காமவெறியும் மமதையும் உண்மையை மறைத்துவிட்டன. சீதாப்பிராட்டியாரை எவ்வகையிலும் தான் அடைந்தே தீர வேண்டும் என்ற எண்ணமே தலை தூக்கியது.

அரண்மனையில் இருள் சூழ்ந்தது. விளக்கேற்றி வைப்பதற்கு வந்த தாதியரும் உள்ளே செல்ல முடியாது வெளியில் காத்து நிற்க- பூட்டிய கதவுகளைத் திறக்காமல் அந்த இருளிலேயே இராவணன் அமிழ்ந்திருந்தான். (தொடர்ந்து வரும்)

### இராஜகுமாரன்

---

**இராமாயணப் போட்டி: 85**

**சரியானவிடை:- சுகன், சாரன்.**

1. ஜெ. அகில்ராஜ், 'முல்லை', குடாஓயா, ஹட்டன்.
2. ஏ.எல்.எம். பாரூக், 9 ஏ, பரீட் நகர் புதிய காத்தான்குடி.
3. லாவண்ஜா திருவருள்நாதன், வகுப்பு-8ஜீ, இறம்பைக் குளம் மகளிர் ம.வித்., வவுனியா.
4. செல்வி தாரணி குணரெட்ணம், 17/5, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.
5. யோ. விக்டர் அரவிந்தன், வல்லை வீதி, தொட்டியடி, சங்கானை கிழக்கு, சங்கானை.

**போட்டி இல. 87** கேள்வி:- **கோட்டை மதிலைச் சுற்றியுள்ள நீர் நிலையை எவ்வாறு அழைப்பார்கள்?**

ஜூன். 21 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.87, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

---

**தமிழ்க்கட்சித் தலைவர் ஒருவரும்—சிங்களக் கட்சித் தலைவர் ஒருவரும் மனம்விட்டுப் பேசுகிறார்கள். ஒட்டுக்கேட்கிறார் காதிலை பூ கந்தசாமி.**

## மனம் திறந்த பேச்சுவார்த்தை

### காதிலை பூ கந்தசாமி

சி.க.தலைவர்: நாட்டைப் பிரிக்க முதலில் சதிசெய்ததே நீங்கள்தானே ஐசே!

த.க.தலைவர்: சும்மா பகிடி விடாதையும் மச்சான். பாம்பின் கால் பாம்பறியும். நீங்களும் அரசியல்வாதிகள். நாங்களும் அரசியல்வாதிகள். நீங்கள் சந்திர மண்டலத்தில் இருந்தாவது அரிசி கொண்டு வருவோம் என்றல்லோ சொன்னீர்கள். சந்திரமண்டலத்தில **என்ன** சரக்குக் கடையோ இருக்குது. சும்மா ஒரு பம்ஸ்தானே விட்டனியள். நாங்களும் அப்படித்தான் **மச்சான்** அடுத்த பொங்கலுக்குள் தமிழ் ஈழம் கொண்டுவந்து தாறோம் எண்டு சொன்னனாங்கள். தமிழ் ஈழம் என்ன பானைக்குள் இருந்தே வரும்? சும்மா ஒரு கப்சாதான் விட்டனாங்கள்.

சி.க.த:- கப்சாவிட்டது ஓ.கே மச்சான். இந்தளவுக்கு பிரச்சனைவர யார்காரணம்?

த.க.த:- எல்லாம் பொடியள்தான். இவங்களுக்கு பகிடியும் தெரியேல்லை. வெற்றியும் தெரியல்லை. ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை? எண்டு சும்மா ஒரு பேச்சுக்கு கேட்டனாங்கள். 'குட் பொயின்ட்' எண்டு சொல்லிக் கைதட்டிப்போட்டுப்போய் தங்கள் தங்கள் வேலையைப் பார்க்காமல், குறையில்லை எண்டு உறையில் இருந்து பிஸ்டலை உருவிக்கொண்டு வந்து நிண்டாங்கள் மச்சான்.



சி.க.த:- புத்தி சொல்லி அனுப்பியிருக்கலாமே மச்சான்.

த.க.த: அங்கேதான் மச்சான் ஒரு பெரிய பிழைவிட்டுப் போட்டோம். கெம்பிக் கொண்டுவந்திருக்கினம் தம்பிமார், இவைக்கு வேலை கொடுத்தா என்னவென்று யோசிச்சம். எங்களுக்குப் போட்டியா இருந்த அரசியல்வாதிகள் பக்கம் கையைக்காட்டி துரோகிகள் எண்டு சொல்லிப்போட்டம்.

சி.க.த:- கிரிமினல் மூளை மச்சான். ஏன் மச்சான் அந்தளவுக்கு போட்டியோ இருந்தது?

த.க.த:- தலையிடி. யூ நோ மிஸ்டர் துரையப்பா. அந்தாள் நவீன சந்தையைக் கட்டுறான். ஸ்டேடியம் கட்டுறான், திருவள்ளுவருக்கு சிலை வைக்கிறான், கூட்டுறவுச் சங்கத்திலை வேலை எடுத் துக் கொடுக்கிறான், அப்பப்பா விட்டால் யாழ்ப்பாணத்தையே சிங்கப்பூராக மாற்றி இருப்பான் அந்த மனுசன்.

சி.க.த:- சனம் உங்களுக்கு புள்ளடி போடாமல் பொல்லடி போட்டிருக்கும்.

த.க.த: தட்ஸ் ரைட். அதுதான் துரோகி எண்டு போட்டனாங்கள் ஒரு போடு. பொடியளும் அவரை மண்டையில் போட்டுட்டாங்கள்.

சி.க.த:- காரியத்தை சுளுவா முடிச்சுப் போட்டியள். பொல்லாத மூளை மச்சான்.

த.க.த:- வயிற்றெரிச்சலை கிளப்பாதேயும் மச்சான். நாங்கள் சுட்டிக்காட்டுற இலக்குகளைத்தான் சுடுவாங்கள் எண்டு தான் நினைச்சிருந்தம். கடைசியா எங்களையுமல்லோ இலக்காக வைச்சு சுட்டுப்பார்க்க வெளிக்கிட்டுப்போட்டினம்.

சி.க.த:- உங்களுக்கு ரீல் விடத் தெரியேல்லை. தட்டிக்கொடுத்தும், தடவிக் கொடுத்தும் வேலை வாங்கத் தெரியேல்லை.

த.க.த: ரீல் விடுறதைப் பற்றி எங்களுக்கோ தெரியாது. விட்ட ரீலுகளை எடுத்து விடுறேன் கேட்கிறீரோ?

சி.க.த:- சொல்லும் மச்சான், ஒரு அனுபவமாக இருக்கட்டும். எங்களுக்கும் இங்கே யூஸாகும்.

த.க.த:-

**ரீல் நம்பர் வன்:**

அடுத்த தேர்தலுக்குள் தமிழ் ஈழம் காண்போம். உங்கள் வாக்கு உதய சூரியனுக்கே.

**ரீல் நம்பர் டூ:**

பாராளுமன்றம் செல்வது பதவிகளுக்காக அல்ல, துரோகிகள் அங்கே செல்லாமல் தடுக்கவும், எங்கள் இலட்சியப் பாதையில் படிக்கட்டுக்களாக பயன்படுத்தவும்தான்.

**ரீல் நம்பர் திறீ:**

எதிர்க்கட்சித் தலைவர் பதவி மூலம் உலக அரங்கில் தமிழீழப் போராட்டத்திற்கு திரட்டுவோம் ஆதரவை. இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் நாளைய தமிழீழ முதல்வர்.

**ரீல் நம்பர் ஃபோர்:**

போர்க்களத்தில், தளபதியின் கட்டளையை மீறுகின்றவனுக்கே முதல் சூடு. தம்பிமார் தலைமைக்கு கட்டுப்பட்டு நடந்தால் தகுந்த நேரத்தில் தமிழீழப் போராட்டம் வெடிக்கும்.

**ரீல் நம்பர் ஃபைவ்:**

எதிர்க்கட்சித் தலைவர் பதவி மூலம் உலக ஆதரவை தமிழீழப் போராட்டத்துக்கு திரட்டோ திரட்டென்று திரட்டிவிட்டோம். இனி காலம் கனிவதைப் பொறுத்து **தகுந்த** நேரத்தில் தகுந்த முறையில் இங்கே தலைமை திட்டம் தீட்டித்தரும். அடுத்த மேதினத்துக்குள் தமிழீழம்.

**ரீல் நம்பர் சிக்ஸ்:**

மாவட்ட சபைகளை ஏற்றுக்கொண்டு அதனை தமிழீழப் போராட்டத்தின் படிக்கற்களாக மாற்றுவோம். தமிழீழப் போராட்டம் பல கட்டங்களைக் கொண்டது, அதில் ஒரு கட்டம் மாவட்ட சபைகளை பயன் படுத்துவது.

**ரீல் நம்பர் செவன்:**

தமிழீழத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதுமூலம் தமிழீழத்தின் நிர்வாகத்தை நம் கையில் வைத்திருப்போம். போராட்டத்துக்கு பயன்படுத்துவோம்.

சி.க.த:- போதும் மச்சான். தலைசுற்றுது. இத்தனை ரீல் விட்டுமோ உங்களை ஊரைவிட்டே துரத்தி துரத்திச் சுட்டுப் போட்டாங்கள்.

த.க.த:- எல்லா ரீலும் சாயம் வெளுத்துப் போச்சு. எங்கடை பொடியளும், சனமும் கொஞ்சம் யோசிக்கக்கூடியதுகள். அதுதான் வெகு கெதியாக மாட்டுப் பட்டுப்போனோம். சரி கொழும்பிலை எண்டாவது போய் இருக்கட்டும் எண்டுவிடாமல் பாவியள் எங்களை நாட்டை விட்டே ஓடவைச்சுப் போட்டாங்கள். அதுக்குத்தான் இப்ப பழிக்குப் பழி வாங்கிக்கொண்டிருக்கிறோம்.

சி.க.த:- என்ன மச்சான் சொல்லுறீர். நீங்கள் அகிம்சை வாதிகளல்லோ, பழிக்குப் பழி எண்டு கிளம்பலாமோ?

த.க.த:- எங்கள் கொள்கைப்படி பம்ஸ் விடுறது மென்முறை. பொம்ஸ் அடிக்கிறது வன்முறை. நாங்கள் இப்ப பம்ஸ் அடிச்சு அடிச்சு தம்பிமாரை ஒருவழி பண்ண ஏதோ எங்களால் முடிஞ்ச உதவிகளை செய்து கொண்டிருக்கிறம்.

சி.க.த:- யெஸ் மச்சான். நீங்கள் செய்த முன்னாள் உதவிகள்தானே இந்நாள் வரை எங்களுக்கும் கைகொடுக்குது.

த.க.த: நீர் எந்த உதவிகளைச் சொல்லுறீர்?

சி.க.த: ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல?

த.க.த: யெஸ். யெஸ். எண்ணமுடியாத உதவிகள். எண்ணமுடியாத உதவிகள். ஒண்டு ரெண்டைச் சொல்லும் மனம் குளிரக் கேட்பம்.

சி.க.த: தமிழ் ஈழம் இதுதான் என்று வரைபடம் கீறிக் காட்டினீர்களே மச்சான். அந்த வரைபடம்தானே மச்சான் நாங்கள் குடியேற்றம் நடத்த ஒரு உற்சாகம், ஒரு உத்வேகம் தந்தது. நீங்கள் கோடு போட்டியள், நாங்கள் அங்கே குடியேற்றம் நடத்தி ரோடு போட்டோம். திருமலைதான் தலைநகரம் என்டு எங்களுக்கு கேட்கக்கூடியதாக நீங்கள் உரத்துச் சொன்னதால்தானே மச்சான், நாங்கள் திருமலையிலும் ஒரு கண்வைத்து பல இன மண்ணாக்க முடிஞ்சது.

த.க.த: பார்த்தியளோ எங்கள் தேசிய ஒற்றுமை உணர்வை. தமிழ் ஈழம் நாங்கள் கேட்டது பிரிவினை நோக்கத்தால் அல்ல, தமிழ் ஈழம் என்றொரு பகுதியே இருக்கக் கூடாது, எதிர்காலத்தில் நாடு பிரியக்கூடாது என்று உங்களை எச்சரிக்கத்தான். யூ நோ மச்சான் இதுதான் சாணக்கியம்.

சி.க.த: மெத்தச் சரி மச்சான். நீங்கள் படம் கீறிக் காட்டினீர்கள். 'இடம் இருந்தால்தானே படம் கீறலாம் அந்த இடமே இல்லை யென்றால் எப்படிக் கிறலாம்?' என்ற தர்க்க வாதத்தை தக்க நேரத்தில் எங்களிடம் கிளறிவிட்டுப்போட்டுது. அது இப்ப நல்லா உபயோகம் ஆகுது. தாங்க்யூ வெரிமச் மச்சான்.

த.க.த: இப்ப பார்த்தியளோ தலைநகர் எண்டு சொல்லவும் இடமில்லை. தாயகம் என்று பிரிச்சுக் காட்டவும் வழியில்லை. இதைத்தான் அன்று நாங்கள் சூசகமாகச் சொன்னோம், ஒருத்தருக்கும் புரியேல்லை ஹி.ஹி.ஹி.

சி.க.த: என்ன மச்சான் அது.

த.க.த: அடைந்தால் தமிழ்நாடு. இல்லையெனில் சுடுகாடு. இரண்டும் கிடைக்கும் என்றா சொன்னோம். நோ நெவர், இரண்டில் ஒன்றுதானே கிடைக்கும். சுடுகாடு கிடைத்தாலும் வரப்பிரசாதம் தான். அதுவும் எமக்கொரு பிரசாரம்தான்!

சி.க.த: எது கிடைத்தாலும் வரப்பிரசாதம் என்பது உங்கள் வழக்கம் என்று தெரியும். அது எப்படி பிரசாரமாகும் என்று தெரியவில்லை.

த.க.த: நாமே தலைவர்களாக இருந்திருந்தால் தமிழ்நாடு கிடைத்திருக்கும். தம்பிமார் தலைவர்களாக மாறியதால் சுடுகாடு கிடைத்திருக்கிறது. இனிமேல் எங்கள் போக்குக்கே உங்கள் வாக்கு என்று பிளந்துகட்டி பிரசாரம் செய்வோம். எப்படி எம் ஐடியா?!

சி.க.த: ஐயா!

த.க.த: என்ன?

சி.க.த: நாங்கள் ஒரு கோரிக்கை விடப் போகிறோம்.

த.க.த: என்னவென்று?

சி.க.த: இந்நாள் தமிழினத்தை விடுவித்து முன்னாள் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று.

த.க.த: சபாஷ்! அதனால் உங்களுக்கு என்ன இலாபம்?

சி.க.த: ஆபத்தே இல்லாத அரசியல் விளையாட்டில் நாங்களும் களிக்கலாம். நீங்களும் சுகிக்கலாம். வேட்டுக்களின் பயமின்றி வோட்டுக்கள் திரட்டும் ரூட்டுக்களில் நாம் ஒருவரை ஒருவர் அடிப்பது போல அடிக்கலாம். தனிமையிலே அணைத்தபடி குளிர்பானம், குடிபானம் யாவும் உண்டு களித்து பதவி சுகங்களில் மிதக்கலாம்.

த.க.த: (பாடுகிறார்)

அந்த நாள் ஞாபகம்
நெஞ்சிலே வந்ததே நண்பனே நண்பனே
இந்தநாள் அன்றுபோல் இல்லையே
அது ஏன் நண்பனே நண்பனே நண்பனே?
(பாடிக்கொண்டே ஏங்கிநிற்கிறார்)



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி வெள்ளவத்தை கொழு-06
580230

# உல்லாச வேளை



➡ படத்தில் காணப்படுவது என்னவென்று தெரிகிறதா? சொன்னால் நம்பமாட்டீர்கள். பல்லி! மெக்சிக்கோ நாட்டின் ஏரிகளில் இந்தரகப் பல்லிகளைக் காணலாம். ஆனாலும் இது முழுமைபெறாத வடிவம். அதாவது இன்னமும் தன் முழுத்தோற்றத்தை அடையவில்லை.

அதற்காக இளக்காரமாக நினைத்து விடாதீர்கள். இந்த நிலையில் இருக்கும்போதே தங்களுக்கு இவை ஜோடி தேடிக் கொள்ளுகின்றன. முழு உருவம் பெற முன்னர் கால்கள் முளைத்திருக்கிறது பாருங்கள். அதுதான் விஷயம். கால்கள் முளைத்த உடனேயே துணை தேடத் தொடங்கிவிடுகின்றவ என்பதுதான் இப்பல்லி ரகத்தில் உள்ள விசேஷம். ஏனைய ரகப் பல்லிகளிடம் இந்தமாதிரியான வம்பு விவகாரங்கள் கிடையாது.

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

⬅ இந்த ரகப் பல்லி இனத்தில் பெண் பல்லி தனது முட்டைகளை ஏரியின் அடிப்பாகத்தில் காணப்படும் கல் அல்லது மரக்குத்திகளில் பத்திரமாக போட்டுவிடும். முட்டைக்குள் இருந்து புழுவடிவமாக குட்டிகள் வெளி வரும். வெளியே வந்தபின்னர் கால்கள் முளைக்கும் வரை இடத்தைவிட்டு நகராமல் இருக்கும்.

இவை நீரின் அடிப்பாகத்தில்தான் குடியிருக்கின்றன. எப்போதாவது வெளியே வந்தாலும் மறுபடி நீர்நிலைகளை நாடிப் போய்விடும். ■


# கொத்தி வாழவேண்டும்



➡ சாயம் எதுவும் பூசாமலேயே பல வர்ணச் சொண்டுடன் மாயம் காட்டுகிறதல்லவா இந்த வண்ணப்பறவை. நம்நாட்டில் கண்டிருக்கிறீர்களா? இவை மேற்கு ஆபிரிக்க நாடுகளில்தான் அதிகமாக காணப்படுகின்றன. 'லேடி றோஸ் துறாக்கோ' என்று பெயர். குயில் இனத்துக்கு நெருக்கமானது. ஆனால் குரல்தான் (பாத்ரும் பாடகர்களின் குரல் மாதிரி) சகிக்கமுடியாததாக இருக்கும். சில நேரங்களில் குரைப்பது போலவும் இருக்குமாம். அடர் காட்டு மரங்களில்தான் குடியிருப்பு. சொண்டுகள் தடிப்பாக உயர்ந்து எடுப்பாக காட்சியளிக்கும். இவற்றிடம் ஒரு பழக்கம் இருக்கிறது. 'அந்த' விஷயத்தில் இரகசியம் பாதுகாக்க தெரியாது. தன் ஜோடியுடன் கலந்திருக்கும்போது பலத்த சப்தமிட்டு தொலைத்து இரகசியத்தை பரகசியமாக்கிவிடும்.

மற்றொரு விஷயம் யாதெனில், தங்களுக்கு என்று கூடுகட்டும் பழக்கம் கிடையாது. வேறு பறவைகள் கட்டிவைத்துள்ள கூடுகளில் போய் முட்டைகளை இடுகின்றனவாம். சொண்டு இருந்தும் மரத்தைக் கொத்தி கூடுகட்ட சோம்பலாம். ■

# உச்ச விளாசல்



⬅ 13 வருடங்கள் முறியடிக்கப்படாமல் ரன்களால் கட்டப்பட்டிருந்த சாதனைக் கோட்டை அது. கட்டியவர் விவியன் ரிச்சர்ட்ஸ். 189 ரன்களால் கட்டப்பட்ட அக் கோட்டையை உடைத்துவிட்டார் சயீத் அன்வர். கடந்த ஆண்டு தென்னாபிரிக்கவீரர் கேரி கிறிஸ்டன் இரண்டு ரன்களால் அக் கோட்டையை உடைக்கும் வாய்ப்பை கைதவறவிட்டிருந்தார்.

29 வயதான சயீத் அன்வருக்கு தனது சாதனை மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் இரட்டைச் சதம் போட முடியாமல் 194ல் அவுட்டானது கவலைதான். விவியன் ரிச்சர்ட்ஸின் சாதனையை முறியடித்த சூட்டோடு இரட்டைச் சதம் போடும் இலக்கை நோக்கி ஒன்றும், இரண்டுமாக ஓட்டங்களை பெற நினைத்தாராம். அது முடியவில்லை என்பதில்தான் வருத்தம். முடிந்திருந்தால் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

"விவியன் ரிச்சர்ட்ஸ்தான் எனக்கு முன்மாதிரி. நான் அவர் விசிறி. அவரைப்போலவே ரன் எடுக்க கனவு கண்ட எனக்கு அவரது சாதனையை முறியடித்தது பெரிய சந்தோஷம்" என்றுள்ளார் சயீத் அன்வர். சயீத் அன்வரின் சாதனையை ஒரு திருவிழா மாதிரியே பாகிஸ்தானில் கொண்டாடி மகிழ்ந்தார்கள். அதுவும் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் படைத்த சாதனை என்றால் சொல்லவும் வேண்டுமா.

ஆனால் இந்தியாவில் வேறு மாதிரி இருக்கிறது. கப்டன் டெண்டுல்கரை திட்டுகிறார்கள். சயீத் அன்வர் 50 ஓட்டங்களின் பின்னர் தனக்கு பதிலாக ஓடி ரன் எடுக்க (ரன்னர்) அப்ரிடியை வைத்துக்கொண்டார். சயீத் அன்வர் சதம் போட்ட பின்னராவது டெண்டுல்கர் நடுவர்களிடம் தன் ஆட்சேபத்தை தெரிவித்திருக்கலாம். அலுங்காமல் குலுங்காமல் அன்வர் அடித்துவிட்டுப் போக விட்டுவிட்டார் டெண்டுல்கர் என்று புகார்கள் கிளம்பியுள்ளன.

சயீத் அன்வரின் சாதனையைக் குறிப்பது என்றால் அப்ரிடியின் பெயரும் அதில் இருக்கவேண்டும் என்று தம்நாட்டு சிங்களப் பத்திரிகை ஒன்றும் எழுதியிருக்கிறது. சில புகார்கள் பொறாமையில் கூறப்பட்டாலும் ரன்னர் வைத்துக்கொண்டது சயீத் அன்வர் களைப்பில்லாமல் ஆட உதவியிருக்கும் என்பதை மறக்க முடியாதுதான். ஆனால் ரன்னர் வைத்திருக்கலாம் என்பது கிரிக்கெட் போட்டி விதிகளுக்கு உட்பட்டது என்பதால் சயீத் அன்வர் விதிமுறைகளை மீறவில்லையே என்ற வாதமும் இருக்கிறது.

சர்ச்சைகளுக்கு அப்பால் சயீத் அன்வர் இன்றைய கிரிக்கெட் வீரர்களில் மிகச் சிறந்த ஆட்டக்காரர்களில் ஒருவர் என்பது யாராலும் மறுக்க முடியாதது. சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இதுவரை 12 சதங்களை விளாசியிருக்கிறார். 120 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடி 4379 ஓட்டங்களை குவித்து வைத்திருக்கிறார்.

சாதனையான 194ஐ எட்ட 206 நிமிடம் களத்தில் நின்று 146 பந்துக்களைச் சந்தித்தார். 22 பவுண்டரிகள், நான்கு சிக்ஸர்கள் அதில் அடக்கம். கராச்சியில் பிறந்த சயீத் அன்வர் கம்பியூட்டர் சயன்ஸ் படித்துவிட்டு விவசாயத்துறை அதிகாரியாக வேலை பார்த்துவருகிறார்.

விஷக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டதால் 10 வார ஓய்வில் இருந்தவருக்கு அதிஷ்டதேவதை சென்னையில் கடைக்கண் காட்டினாள். ■

# 1வது பிறந்த நாள் வாழ்த்து



சர்வீனா 24.05.97

கனடாவில் வசிக்கும் உதயகுமார்-செல்வலஷ்மி தம்பதியினரின் செல்வப் புதல்வி சர்வீனா தனது முதலாவது பிறந்த தினத்தை கனடாவில் 24.05.97 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, கனடாவிலுள்ள அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார், பூட்டி, சுவிஸில் உள்ள பெரியப்பா, பெரியம்மா மற்றும் இலங்கையில் உள்ள அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அத்தைமார், சித்தப்பா, சித்திமார், மாமாமார், பெரியம்மா, பெரியப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சர்வீனாவை ஞான செல்வ விநாயகர் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். றெக்ஸ்

# கண்டதுண்டா?



➡ பையனின் அருகே பாருங்கள்: கத்தரிக்கப்பட்ட குரோட்டன் செடி தெரிகிறதா? ஆம் என்றால் உடனே கண்வைத்தியரை நாடுங்கள். ஏனென்றால் அது செடியல்ல நாய். உயிருள்ள நாய்! நாய்களில்தான் எத்தனை ரகம். ஏற்கனவே பல ரகங்கள் காட்டியிருக்கிறோம். இது மற்றொரு ரகம். செடிகளுக்குள் மறைந்திருந்தால் தெரியவே தெரியாது. கப்பென்று பாய்ந்த பின்தான் தெரியும். ■



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 25 ... உள்ள சபனம் அச்சகத்தில் ஜூன் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.